# பாரதமணி

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
12, பிருந்தாவனம் தெரு,
மயிலாப்பூர், மதராஸ்.

வருஷ சந்தா { உள்நாடு ரூ. 3
வெளிநாடு ரூ. 5

| மாலை 5 | வெள்ளி 14-3-41 • விக்ரமஹு பங்குனி மீ 1௨ | முத்து 3 |
|---|---|---|

## பொருள் அடக்கம்

| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| போகிற போக்கில் ... | ... ... ... ... | 130 |
| வெற்றி வேட்டை ... | ... ... கா. சி. வேங்கடரமணி | 133 |
| அகமும் வாழ்வும் ... | ... ... வ. உ. சிதம்பரம் பிள்ளை | 139 |
| சொல்லும் பொருளும் ... | ... ... அ. வி. மயில்வாகனன் | 141 |
| அநுதாபம் ... | ... ... ... "பாஸ்கரன்" | 144 |
| வீணன் கண்ட வென்னுறு | ... வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதி | 145 |
| தொண்டரடிப்பொடி யாழ்வாரின் திருப்பள்ளி யெழுச்சி | ரா. ஸ்ரீ. தேசிகன் எம். ஏ. | 148 |
| பழிக்குப் பழி ... | ... கா. ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியார் | 151 |
| மூன்றும் பிறை ... | ... ஸ்ரீமதி அலமேலு பி. ஆர். கே. சர்மா | 153 |
| தமிழும் ஆங்கிலமும் ... | ... புரசு பாலகிருஷ்ணன் எம். பி. பி. எஸ். | 158 |
| ஸத்யமும் சூழ்ச்சியும் ... | ... கி. சங்கரநாராயணன் பி. ஏ., பி. எல். | 161 |
| வினதா ... | ... ... ஸ்ரீமதி ரா. பங்கஜம் | 166 |
| போரின் பொருளாதாரம்—அதன் விளைவு | ... த. கிருஷ்ணமூர்த்தி | 169 |
| என் பழைய ஞாபகம் ... | எஸ். ஆர். வேங்கடராமன் பி. ஏ., பி. எல். | 172 |
| இந்திய இன்ஷ்யூரன்ஸின் அபிவிருத்தி | ... ... ... | 176 |
| சிறுவர் பகுதி ... | ...ய. மஹாலிங்க சாஸ்திரி எம். ஏ., பி. எல். | 177 |
| கண்காணிப்பு ஊழியர் ... | ... ரா. சந்திர சூடன் பி. எஸ் ஸி. | 180 |
| புத்தக விமர்சனம் ... | ... ... ... ... | 185 |
| கடுந் தவம் ... | ... ... ...ரா. ஆறுமுகம் | 187 |

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.




நான் இப்பொழுது கங்கைக் கரையிலிருந்து எழுதுகிறேன். ஹௌரா பாலத்தின் நடுவில் நின்றுகொண்டு கல்கத்தாவின் வியாபார ஓட்டத்தையும், செல்வப் பெருக்கையும், பரபரப்பையும் பார்த்துக் கொஞ்ச நேரம் மதி மயங்கி யிருந்தேன். இச் செல்வத்திற்கு மூல காரணமாயுள்ள கங்காநதி, என்காலுக்குக்கீழே சுழலிட்டுச் சமுத்திரம் போல் பெருகி ஓடிக்கொண்டிருந்தது. நீர்ச்சுழியைக் கண் வியந்தேன். ஒப்பில்லாத அழகுடன் ஒரு நிமிஷத்தில் பிறந்து மறுநிமிஷத்தில் அழியும் நீர்ச்சுழியும் மானிட வாழ்வுபோல் தான் இருக்கிறது.

* * *

இப்படிக் கனவில் நான் நிற்கும்பொழுது கிழிந்த அழுக்கு வேஷ்டியையும் கந்தைச் சட்டையையும் அணிந்த—நமது தேசத்திலிருந்து கோடிக்கணக்கான பருத்தி 'பேல்' களை நாம் அயல் நாட்டுக்கு அனுப்புகிறோம்—ஒரு வங்காளிப் பையன் கடுகு எண்ணெய் தடவிய கூந்தலுடன் "அம்ருதபஜார்! அம்ருதபஜார்!" என்று கூக்குரலிட்டான்.

மேல்நாட்டு யுத்தம் என்ன ஸ்திதியிலிருக்கிறது பார்ப்போம் என்று, தினசரியை வாங்கி, மத்தியில் பிளந்து தலையங்கமுள்ள பக்கத்தைக் காற்றோட்டத்தில் பார்த்தேன். ஹிட்லர் பெயர்கூட என் கண்ணுக்குப் புலப்படவில்லை. என் பழய நண்பர் எஸ். ரங்க ஐயர், பெங்களூரில் காலமானர் என்று படித்தேன். "நீர்ச்சுழல்போல் அவரும் மறைந்துவிட்டார். நான் இனி அவரைக் காணப் போகிறதில்லையா?"—என்று மதி மயங்கி, துக்கம் பெருகிக் காலை வெயிலில் நடு ஆற்றில் நின்றேன்.

* * *

நான் ஆசிரியரானதற்கு மூல காரணமாயிருந்தவர் எஸ். ரங்க ஐயரே. நான் பள்ளிக்கூடத்தில் நான்காவது பாரம் படிக்கும் பொழுதே எழுத ஆரம்பித்துவிட்டேன். எட்மண்ட்பர்க் என்னும் ஆங்கில ஆசிரியரின் நடையும், "பந்தேமாதரம்" பத்திரிகையில் மகான் ஸ்ரீ அரவிந்தரின் சாட்டையடிபோல் த்வனிக்கும் அழகிய நடையும் என் உற்சாகத்தைக் கிளப்பிவிட்டன. நான் அப்பொழுது மாயவரம் முனிசிபல் ஹைஸ்கூலில் படித்துக்கொண்டிருந்தேன். மாயவரம் 'முனிசிபாலிடி' ஊழலுக்குப் பெயர் போனது. நான் அதைத் தாக்கி எழுதினேன். எட்மண்ட்பர்க் வாரன் ஹேஸ்டிங்ஸுக்குக் கொடுத்த சாட்டையடி வார்த்தைகளையெல்லாம் ஒரு மணி நேரம் கடன் வாங்கி, மாயவரம் முனிசிபல் சேர்மன் பேரில் பிரயோகித்தேன்.

கட்டுரை ஒரு நொடியில் யெழுதியாயிற்று. பத்திரிகையில் பிரசுரமாக வேண்டுமே! பாழ்போகக் கூடாதே! காவிரிக் கரையில் அந்தி வேளையில் உட்கார்ந்துகொண்டு நான் மறுபடியும் படித்துப் பார்த்தேன். எனக்கு அளவில்லாத மகிழ்ச்சியை அது கொடுத்தது. குழந்தை பி.ஏ. பரீக்ஷை முதலில் பாஸ் செய்தால் என்ன பயன்? சர்க்காரில் அல்லவோ பத்து ரூபாய் சம்பளத்தில் குமாஸ்தா வேலையாவது போட்டுக் கொடுக்கவேண்டும்?

* * *

"ஹிந்து" பத்திரிகைக்கு அனுப்பிப் பார்ப்போம் என்றால், திவான் பகதூர். ஆர். ரகுநாதராவ், "ஆசிரியருக்குக் கடிதங்கள் என்னும் பத்தியை ஜீவகுத்தகையாக வாங்கிவிட்டார். "வேண்டாம், வந்தனம்" என்று "ஹிந்து" விலிருந்து திரும்பிவந்தால் கூட அது பெருமைதான். ஆனால் இந்தப் பெருமைக்குக்கூட அந்தச்சமயம் நான் துணியவில்லை. திவான் பஹதூர் ரகுநாதராவ் பெயரைக் கண்டு பயந்தேன்.

அப்பொழுதுதான் "இந்தியன் பேட்ரியட்" என்னும் புதிய தினசரி, சி. கருணாகர மேனன் என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. புதிய பத்திரிகையில் கொஞ்சம் இடம் கிடைக்கலாம் என்ற எண்ணத்துடன், ஒரு அணா ஸ்டாம்பு ஒட்டி—நான்கு இட்லியை யிழந்து—சென்னைக்கு என் கட்டுரையை யனுப்பினேன். பிரதி தினமும், தபால்காரனின் காக்கி சட்டையையும், 'க்ரீச்' என்ற செருப்புச் சத்தத்தையும் எதிர்பார்த்து நின்றேன்.

நான் என் ஒன்றுவிட்ட அண்ணாவுடன் கூடப் படித்தேன். அவர் உலகத்திலுள்ள 'காட்லாக்'—முக்கியமாய் அமெரிக்காவிலுள்ள—இந்தியாவிலுள்ள முக்கியமான பத்திரிகைகள், அதுவும் புதிய பத்திரிகைகள், எல்லாம் வரவழைத்து ஆள் கூட்டம் போட்டு மெய்ம்மறந்து சத்தம் போட்டுப் படிப்பார். அவரால்தான் இந்தப் பத்திரிகைப் பைத்தியம் என்னையும் பிடித்தது.

* * *

"இந்தியன் பேட்ரியட்" பத்திரிகையில் என் கட்டுரை பிரசுரமாகிவிட்டது. மாயவரம் முழுவதும் அல்லோலகல்லோலப்பட்டுவிட்டது. இப்பொழுது பரோடாவில் திவானாக இருக்கும் ஸர். வி. டி. கிருஷ்ணமாச்சாரியார், அப்பொழுது மாயவரத்தில் டிபுடி கலெக்டராக இருந்தார். அவர் இதைப் படித்துவிட்டுப் பென்சலால் 'மார்க்' செய்து சேர்மனுக்குப் பேபரை அனுப்பி விட்டார். சேர்மனுக்கு ஆங்கிலம் தெரியும். என் கட்டுரை அவருக்கு அடக்க முடியாத கோபத்தை உண்டு பண்ணியது. கட்டுரையில் என் பெயர் போடவில்லை—ஒரு நிருபர்—என்றிருந்தது. யார் இதை யெழுதியது?—என்று ஊர் முழுவதும் கிளர்ச்சி ஏற்பட்டு விட்டது. ஹைஸ்கூல் உபாத்யாயரில் ஒருவர் தான் எழுதியிருக்க வேண்டும் என்று சேர்மன் தீர்மானத்துக்கு வந்து இரகசிய விசாரணை செய்து துப்பறிய ஏற்பாடு செய்தார்.

ஒரு நொண்டி உபாத்தியாயர் தலையில் கடைசியில் அந்தப் பழி விழுந்தது. "ஐயோ, பாவமே, எனக்கு இவ்வளவு அழகாக இங்கிலீஷ் எழுதத் தெரியாதே! குப்பை வண்டி இங்கிலீஷ்தானே எனக்குத் தெரியும்?"—என்று அவர் சேர்மனிடம் புலம்பியும் சேர்மன் அதை ஒப்புக்கொள்ளவில்லை.

நொண்டி வாத்தியார் படும் அவஸ்தையைப் பார்த்து நான் சேர்மனிடம் நேராகப்போய் என் குற்றத்தை ஒப்புக்கொண்டேன். ஒருவாரம், மாயவரம் முனிசிபல் வாழ்க்கை, வள்ளலார் கோயில் ஒத்தைத் தெருவின் சாக்கடையைப்போல்—இன்றையதினம்கூடச் சாக்கடை அப்படியே தானிருக்கிறது—குழம்பித் தேங்கி நின்றது.

அச்சிட்ட மொழியின் வல்லரசைக் கண்டு நான் மகிழ்ந்தேன். தேன் குடித்த நரியைப்போல் வெறியுண்டேன். இந்தப் போதைப் பிசாசு இன்னும் என்னை விடவில்லை. இது 1906ம் வருஷத்தில் நடந்த நிகழ்ச்சி.

* * *

1933ம் வருஷத்தில் முதன்முதல் நான் டில்லிக்குப் போனேன். 'ராய்ஸ் வீக்லி' ஆசிரியர் எஸ். ரங்க ஐயரைப் பேட்டி காணப் போனேன்.

அவர் என்னை அன்புடன் கட்டியணைத்து—"உங்களுக்கு என்னை இப்பொழுதுதான் தெரியும்! ஆனால் எனக்கு உங்களை உங்கள் சிறு பிராயம்முதல் நன்றாய்த் தெரியும். முதன்முதலில் மாயவரம் முனிசிபாலிடியின் ஊழல்களைப் பற்றி நீங்கள் எழுதிய கட்டுரையை, வாசித்துப் பார்த்து ஆனந்தத்துடன் நான்

தான் " இந்தியன் பேட்ரியட்"டில் போட்டேன். அப்பொழுது நான் உங்களிடமிருந்து என் கண்களை எடுக்கவில்லை. உங்கள் ஞாபகமாகவே இருக்கிறேன். உங்களுக்கு ஈசன் அருள்புரிவான்!"— என்று ஆநந்தக் கண்ணீர் பெருகக் கூறினார்.

நான் ஆச்சரியத்துடன் ஸ்தம்பித்து மனம் ததும்பி நின்றேன். பேச நாவெழும்பவில்லை.

மணி.


**BOOKS FOR ALL**

| | | Rs. | A. |
|---|---|---|---|
| 1. | The Message of the Gita Edited by Anilbaran Roy. | 5 | 0 |
| 2. | Songs from the Soul By Anilbaran Roy | 1 | 4 |

**Works of Sri Aurobindo**

| | | Rs. | A. |
|---|---|---|---|
| 3. | Essays on the Gita 1st Series | 0 | 6 |
| 4. | 2nd Series | 7 | 8 |
| 5. | Kalidasa | | |
| 6. | A System of National Education | 1 | 0 |
| 7. | The Ideal of the Karmayogin | 1 | 8 |
| 8. | The Renaissance in India | 1 | 4 |
| 9. | The Life Divine (Just published Vol. 1) | 6 | 0 |

**Svetaranya Ashrama,**
12, Brindaban Street, Mylapore.

**புத்திக்கு உணவு வேண்டாமா?**

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ சங்கராசார்யார் உபந்யாஸங்கள் | 1 | 8 |
| 2. | அற்புத உலகம் (பெ. நா. அப்புசாமி அய்யர்) | 1 | 0 |
| 3. | விதியின் செயல் முதலிய கதைகள் (எ. எஸ். பஞ்சாபகேசய்யர், ஐ. ஸி. எஸ்.) | 0 | 6 |
| 4. | குமுதினி (ஸ்ரீமதி ரங்கநாயகி மொழி பெயர்ப்பு) | 1 | 8 |
| 5. | சந்திரிகா (சுகப்ரியை) | 0 | 12 |
| 6. | ஹிட்லரும் மகா யுத்தமும் (A. G. வெங்கடாசாரி, பி.எ.) | 1 | 4 |
| 7. | ஜடாவல்லவர் (வரகவி திரு அ. சுப்ரமண்ய பாரதி) | 1 | 2 |
| 8. | தேசபக்தன் கந்தன் (கே. எஸ். வேங்கடரமணி) | 1 | 0 |
| 9. | முருகன் ஓர் உழவன் (கிருஷ்ண குமாரி மொழி பெயர்ப்பு) | 1 | 8 |

**சுவேதாரண்ய ஆச்ரமம்**
12, பிருந்தாவனம் தெரு, மயிலாப்பூர், மதராஸ்.

# வெற்றி வேட்டை

எழுதியவர்
கா. சி. வேங்கட ரமணி.

மொழி பெயர்த்தவர்
கு. ப. ராஜகோபாலன் பி. ஏ.,

## [1]

காவேரிக் கரையில்தான் அந்த கிராமம். கடும் கோடை. வெயில் தகித்துக்கொண்டிருந்தது. மேற்கத்தியக் காற்று தூசியையும் மணலையும் வாரி அடித்தது. காவேரியில் ஜலம் இல்லை. எங்குப் பார்த்தாலும் சூனியம். வறட்சி. எனக்கு விடுமுறை அப்பொழுது. வெறும் சோம்பேறித் தனத்தில் பொழுது கழிந்தது; ஒன்றும் செய்யவில்லையே என்ற அதிருப்தி, வாலிபமல்லவா? பருவ காலத்து மேகம் போல வெடித்துக் கொட்டும்போல இருந்தது என் உள்ளம்.

வருஷம் முழுவதும் வேலை செய்த போது ஓய்விற்கும் திருப்திக்கும் ஏங்கினது போல, ஓய்வு வந்ததும் வேலைக்கும் வீரியச் செயல்களுக்கும் ஏங்கினேன். ஓய்வற்ற உலகத்திற்கும் என் சோம்பேறித்தனத்திற்கும் இடையே தபால்காரன் ஒருவன்தான் இணைப்பு. வாரத்திற்கு மூன்று தடவை வருவான். உலகத்திலேயே அவன்தான் எனக்கு மிகவும் ஆறுத லானவன்போல் தோன்றினன்.

இரண்டு மாதங்களுக்கு முன்தான் நீலக் கடற்பரப்பிற்கப்பால் வார்த்தைக்கு ஒரு ரூபாய் கொடுக்கும் தேசத்திற்கு ஒரு அழகிய கட்டுரை அனுப்பியிருந்தேன். என் தாயாருக்குத் தெரியாமல் என் அறையின் இருட்டு மூலையில் ஆறணத் தலையை அதன்மேல் ஒட்டினபோது எனக்கென்ன சந்தோஷம்! அந்தக் காகிதத்தில் போட்ட காசெல்லாம் வீண் என்று அவள் ஆட்சேபித்தாள்; அவ்வளவு விலையுள்ள தயிர், பால், நெய் குடும்பத்திற்கு நஷ்டம் என்பது அவள் போட்ட கணக்கு. ஆனல் என் ரத்தத்தில் ஒரு விபரீதமான ஆசை விஷம் ஏறிவிட்டது:—ஈய எழுத்தில் அச்சாகும் கியாதிப் பித்தால் ஏற்பட்ட ஈய விஷம்.

ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்திருந்தேன்; காத்துக்கொண்டிருந்தேன். செய்தி கொண்டுவரும் அந்தச் சொக்காய்க்காரனுக்காக—எல்லோருக்கும் உள்நாட்டுச் செய்தி, எனக்கு மட்டும் கடல் கடந்த செய்தி. வீண் ஆவல்தான். செய்தி ஏதாவது சுபச் செய்தியாக இருந்ததா? அதுவும் பத்திரிகைகளுக்குக் கதை கட்டுரைகள் அனுப்பியதைப் பற்றிய செய்தி! பாழாய்ப்போன அந்த நீண்ட கவர், ஸ்டாம்பு ஒட்டாமலோ அல்லது குறைந்த ஸ்டாம்பு ஒட்டியோ, வெகு ஆவலுடன் பார்க்கும் என் கண்களில் பட்டு, தாய் கையில் தத்தளிக்கும் தாலி கட்டாத பெண் போன்ற என் வியர்க்கும் கைகளுக்கு வரும் வரை நம்பிக்கை மட்டும் நீங்காது.

இந்த மாதிரி நான் கழித்துக்கொண்டிருக்கும்பொழுது உள் நாட்டிலிருந்து தூரபந்து ஒருவன் தன் ஊருக்கு வரும்படியாக எனக்கு ஓர் அழைப்பு அனுப்பினன். அவன் வீட்டிற்கு எதிர் காலத்தைப் பற்றி ஜோசியம் சொல்லக்கூடிய பெரிய சாது ஒருவர் வந்திருந்தாராம். எதிர்காலத்தைப் பற்றி அறிய ஏதாவது ஒரு சந்தர்ப்பம் வாய்த்தால் போதாதா இலக்கியத்தில் பெயர் பெற விங்கும் எழுத்தாளனுக்கு? உடனே புறப்பட்டு இரவு பகல் பார்க்காமல் இட்டேரிகளையும் துரிதமாகத் தாண்டிக்கொண்டு அங்கே போய்ச் சேர்ந்தேன்.

சாது உண்மையிலேயே பரம பக்தர் தான்; ஆனல் ஜோஸியம் சொல்லுவதில் அவ்வளவு போதாது. இந்தக் காலத்தில் பக்தி பண வசதிக்கு அவ்வளவு ஏற்றதல்லாமல் போய்விட்டதால் அவர் ஜோஸியத்தில் தொத்திக்கொண்டார். எதிர்காலம் வெகு உன்னதமாக இருக்கும் என்று அவர் சொன்னது வெறும் மரியாதை விஷயம். நான் கூசாமல் கொடுத்த தக்ஷிணையும், கடவுள் பற்றற்றுப் போன

இந்தப் பழைய யுகத்தில் உண்மையான பக்தர்களுக்கேற்படும் கஷ்டங்களைப் பற்றி நான் தேர்ச்சியுடன் பேசினதும்தான் அதற்குக் காரணம். அவர் என்னைச் செய்த ஸ்தோத்திரத்தில் அன்று முழுவதும் எனக்கு ஒரே மரியாதை. என் தூர பந்து என்னைப்பற்றிப் பிரமாதமான எண்ணங்கொண்டான்.

## [2]

சாப்பிட மத்தியானம் நேரமாகிவிட்டது. கூப்பிட்டும் கூப்பிடாமலுமாகச் சுமார் நூறுபேர் விருந்துச் சாப்பாடு சாப்பிட்டு முடித்தார்கள். இலவசச் சாப்பாட்டை உத்தேசித்துக் கூடிய பலதரப்பட்ட கிராமாந்தரக் கூட்டம் அது. வைதிகர்கள் வாசல் திண்ணையில் படுத்துக்கொண்டு வெற்றிலை மென்றவண்ணம் ஜோஸியரின் ஜோஸியத்தைப் பற்றியும் இலவசச் சாப்பாட்டின் சமையல் உறைப்பைப் பற்றியும் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது வேட்டுவ ஜாதியைச் சேர்ந்தவன் ஒருவன் வாசலில் கிடந்த எச்சில் இலைகளைப் பார்த்துவிட்டு ஏதோ விசேஷம் என்று அங்கே வந்து சேர்ந்தான். நரி வேட்டையாடுவதும், மருந்துப் பச்சிலை பிடுங்குவதும், தேன் எடுப்பதும்தான் ஊரூராய்த் திரியும் அந்த ஜாதியினரின் தொழில். பசியால் பிராணம் போகிற ஒரு வாய்க்குச் சோறு போடும்படி வாசலில் நின்றுகொண்டு உரக்கச் சத்தம் போட்டான். யாரும் அவனைக் கவனிக்கவில்லை. நான்தான் இரக்கத்துடன் ஒரு பார்வை பார்த்தேன். கண் பார்வையைக் கணத்திற்குள் கண்டுபிடிப்பதில் கைதேர்ந்த அந்தப் பிறவிப் பிச்சைக்காரன் அதைக் கண்டவுடனே நம்பிக்கை அடைந்தான். பளபளவென்று பிரகாசித்த என் மூக்குக் கண்ணாடிகளில் இரக்கத்தையும் பணப்பசையையும் கண்டான் அவன். முதல் ஊக்கம் முற்றிலும் உண்மைதான்! என் எண்ணங்களைக் கண்ணாடியில் கண்டவன் போல, யோசனையிலாழ்ந்திருந்த என்னைப் பார்த்து நேராகப் பேச ஆரம்பித்தான்.

“சாமி, உங்க நோக்கம் தெரியுது எனக்கு. நான் அதுக்கு வளி சொல்லுறேன். இப்போ நீங்க கொஞ்சம் கஷ்டப்பட்டுக்கிட்டு இருக்கிறீங்க. ஆனா உங்க முகத்தைப் பார்த்தாலே தெரியுது—ஒங்களுக்கு இனிமே நல்ல காலம்தான். ஒங்களுக்கு ஒரு மந்திரம் சொல்லித் தாரேன். உங்ககூட எப்பப் பாத்தாலும் இருந்துக்கிட்டு, நீங்க சொல்றத்தை யெல்லாம் கேட்டுக்கிட்டு, கேட்டதை யெல்லாம் கொண்டாந்து கொடுத்துக்கிட்டு சொன்னபடி ஆடிக்கிட்டிருக்கும் அந்தத் தேவதை-பொம்பிள்ளை வேணுமா, அரமனை வேணுமா — கண்மூடிக் கண் திறக்கறத்துக்குள்ளே கொண்டாரும்.”

மனிதனைப் பிறந்த நாள்முதல் வாட்டும் இந்த ஆசைகளையும் இன்பங்களையும் உருவாக்க வந்தவன் தானேபோல் கூத்தாடினான் வேடன் உற்சாகத்துடன்.

நான் பரமானந்தமடைந்தேன். பத்திரிகாசிரியர்களையாவது நான் எழுதியதைப் படிக்கும்படி செய்யலாமல்லவா என்று எண்ணினேன். முற்பகலில் சாது சொன்னதற்கும் அது பொருத்தமாக இருந்தது. அப்பொழுதே நிறைவேற ஆரம்பித்தது போலவும் தோன்றிற்று. எனக்கு முழுதும் நம்பிக்கை ஏற்படாவிட்டாலும் என்னதான் சொல்லித் தரப்போகிறான் என்று அறிய ஆசை ஏற்பட்டது. விஞ்ஞானத்திற்கு இதுவரை எட்டாத ஏதாவது ரகசியம் இந்த நாடோடிகளிடம் இருக்கும் என்று எப்போதும் எனக்கொரு நினைப்புண்டு.

## [3]

“உன் பெயரென்னப்பா?”

“என்னை இருளேசன் என்று கூப்பிடுவார்கள். நான் அவன்தான் உண்மையில். இருள் உலகத்து இக்ஷிணியை மனிதனுக்கு ஊழியம் செய்யும்படி கட்டுப்படுத்துகிறவன் நான்தான்.”

இருளேசன் கனைத்துக்கொண்டு மறுபடியும் பேச ஆரம்பித்தான் இன்னும் உற்சாகமாக.

"பச்சிலை மருந்தல்ல; ரட்சாபந்தனமுமல்ல. உண்மையாக உயிர்கொண்ட வேதாளம். டில்லியில் வேண்டுமானாலும் உங்களுக்கு அரமனை கட்டிக்கொடுக்கும். எதை வேண்டுமானாலும் கொண்டுவந்து கொடுக்கும்; ராஜாக்களைக்கூட உங்கள் முன்னால் பணியச் செய்யும். அதை அடக்கியாளும் பிராணி இந்தப் புட்டியில் இருக்கிறது. வேதாளத்தைச் சொன்னபடி ஆடச்செய்யும் நாடகத்தில் அதுதான் சூத்திரக் கயிறு."

லட்சியம் கைகூடுவதுபோல் தென்பட்டதைக் கண்டு அகமகிழ்ந்து நான் அவன் பசியாரக் கொஞ்சம் பணம்கொடுத்தேன்—கொஞ்சம் சந்தேகத்துடன் தான். பர்ஸ் காலையில் கையாளப்பட்ட பிறகு அவ்வளவு நிறைந்திருக்கவில்லை.

தன் சொற்களின் மந்திர வேலையை மிகைப்படுத்த எண்ணினவன்போல அவன் சொன்னதைத் திரும்பச் சொன்னான்.

"கடுதாசியில் எழுதிக்கொடுக்கும் மருந்தல்ல. பிசாசை ஓட்டும் என்று ஏமாற்றிக் கொடுக்கும் ரட்சா பந்தனத் தாயத்துமல்ல. நமக்கும் தொண்டையும் வறள, கண் சோரக், கால்கடுக்கக் கோடி முறை உருவேற்ற வேண்டிய மந்திரமல்ல. உண்மையாக உசிரோடிருக்கிற பிராணி. அஞ்சு ரூபாய் போதுங்க, நீங்க அப்புறம் அந்த இக்ஷிணி உலகத்திற்கு யசமான்."

கொஞ்சம் யோசித்தேன். இக்ஷிணி உலக அதிகாரத்திற்கு அவன் விதித்த ஒப்பந்த விலையில் ஐந்தில் ஒரு பங்குகூட என் பையில் இல்லை. தயங்கினேன். ஏமாந்துபோகவும் இஷ்டமில்லை.

"ஆமாம், இருளேசா, அவ்வளவு விலையுயர்ந்த வஸ்துவை என் இச் சிறு தொகைக்காகக் கொடுத்துவிடுகிறேன் என்கிறாய்? நீயே ஏன்—"

என் கேள்வியின் போக்கைச் சூக்ஷ்மமாக உடனே ஊகித்து இருளேசன் "அதா சாமி, நான் வேடன்தானே! இந்தப் பிறப்பில் இல்லை. இன்னும் எத்தனையோ ஜன்மம் எடுத்தாகணுங்க இதை உபயோகிக்கிறதுக்கு. சிப்பியிலே முத்து இருக்கிறாப் போலேதானுங்க இது எங்கிட்ட கிடக்கு! காலம் வரப்பொ அதைக் கொடுத்துடறது தானுங்க என் கடமை. மேல் சாதியிலே பிறந்தவங்கதான் உலகத்துக்கு உபகாரமா அதை உபயோகிக்கராங்க. நான் செய்ய முடியாதுங்க!" என்றான்.

"அது சரிதானப்பா, நான் உன்னை எப்படி நம்புகிறது? இவர்கள் எல்லோரும் சிரிக்கமாட்டார்களா அப்புறம்?"

ஊர் திரும்புவதற்குக் கூடப் போதாத நிலைமையில் பணப்பை இருந்ததை நினைத்துக்கொண்டதும் அதிகப் பிரசங்கம் ஒன்றும் செய்யமுடியாத நிலைமையில் 'முடியாது' என்ற மாதிரி பேச்சை விட ஆரம்பித்தேன்.

அவன் அதற்குமேல் பேசவில்லை. காரியத்தில் இறங்கிவிட்டான் பளிச்சென்று. தன் சிறு மூங்கில் கூடையிலிருந்து தேவாங்கு ஒன்றை வெளியே எடுத்தான். தலை குனிந்து அழுமூஞ்சியாக இரு கைகளையும் முதுகில் கட்டிக்கொண்டு அந்தச் சீவன் பரம கோரமாக இருந்தது. துயரமே திரட்டிவிட்டதுபோல இருந்தது அது. சதா கண்களை மூடிய வண்ணம் ஏதோ திரிலோகங்களையும் வாட்டும் பிரச்னை ஒன்றைப்பற்றி தீர்க்காலோசனை செய்வதுபோல் இருந்தது.

ஆச்சரிய மடைந்து போனேன். துன்ப விக்கிரகம் போல உட்கார்ந்திருந்த அந்த ஜந்துவைப் பார்த்ததும் எனக்கு ஏதோ விபரீதமான உணர்ச்சிகள் ஏற்பட்டன. திண்ணை யோரத்தில் படுத்து, ஜீரணமாகாத சாப்பாட்டைப்பற்றி யோசித்து முனகிக்கொண்டிருந்த கிழவைதிகர் ஒருவர் தூக்கக் கலக்கத்தில் "அதெல்லாம் சுத்த ஹம்பக், பழங்கதை" என்று கத்தினர்.

தொந்தியைத் திருப்பி என் பக்கம் பார்த்து "அய்யர்வாள், ஏமாந்து போகாதேங்கோ, இந்த ஜகஜ்ஜாலப் புழுகெல்லாம் எங்களுக்கு சகஜம். உங்களுக்குப் புதிசு. அவனுக்குக் கொடுக்கிற காசை இங்கே இருக்கிற பிராம்மணாளுக்குக் கொடுத்தாலும் திருப்தியாக ஆசீர்வாதம் செய்வார்கள்" என்றார்.

## [4]

அந்த வேடன் உள்ளங்கையில் உட்கார்ந்துகொண்டிருந்த அந்தத் தேவாங்கு அப்பொழுதான் பிறந்த குரங்குக் குட்டி போல் இருந்தது. அது கண்ணையும் திறக்கவில்லை, தலையையும் தூக்கவில்லை. உடலில் உயிர் இருக்கிற தென்பதற்கு அடையாளமாக மூச்சு விடுவதால் உடல் மட்டும் மேலும் கீழுமாக அசைந்தது. வேடன் அதைத் தலையில் மெதுவாகத் தடவிக்கொண்டே குரலை மாற்றிக்கொண்டு சிரத்தையாகப் பேசினான்.

"இது ரொம்ப அபூருவங்க; எங்கேயும் கிடைக்காது. புனுகுப் பூனையைக் காட்டிலும் இது கிடைக்கிறது கஷ்டம். இதுக்குத் தேவாங்குனு பேருங்க. இது மனுசனுமில்லே, மிருகமு மில்லிங்க. கிழக்கித்தி மலைக் காட்டிலே தவசு பண்றதுக்காக இந்தச்சன்மம் எடுத்துக்கிட்டு வந்தரிசிங்க. அதனாலேதான் இதுக்கு இவ்வளவு மவுத்துவம், மூவுலகத்தையும் ஆளுகிற சக்தி. தெரிஞ்சவங்களுக்குத்தான் தெரியும் அது. என்ன பண்ரதுங்க! நான் சொல்லித் தான் காட்டலாங்க—வளியெ-நான்போக முடியாது. நேரா மேக்கே மலையிலிருந்து தானுங்க வாரேன். பசி சொல்லி முடியாது. நாக்கெ நனச்சு மூணுநாள் ஆவுது. இல்லாட்டி இத்தை இரட்டிப்புத் தொகைக்குக் கூட தரமாட்டேனுங்க!" என்று சொல்லிக்கொண்டு வந்த இருளேசன் திடீரென்று ஆவேசங்கொண்டவன் போலக் குரலை உயர்த்தி "யஜமான், நீங்க பெரிய காரியங்க செய்யவேணுமுனு கடவுள் நினச்சிருக்காருன்னு எனக்கென்னமோ தெரியுது. இத்தெ உதவியா வச்சுகிட்டா சுளுவா சாதிச்சுக்கிடலாம். அஞ்சே ரூவா தானுங்க, நீங்க மூணு லோகத்துக்கும் யஜமான்!" என்றான.

"இருளேசா, உன் பசியைப்பற்றி நீ சொன்னதைக் கேட்டும் இந்தச் சிறு கைதியின் விபரீத ஏக்கத்தைக் கண்டும் எனக்குப் பரிதாபமாகத்தான் இருக்கிறதப்பா! ஐந்து ரூபாய் இருந்தால் கட்டாயம் உனக்குக் கொடுப்பேன். பாவம், இந்தப் பிராணியை விடுவித்துக் காட்டிலே கொண்டு விட்டுவிடவாவது அதைக் கொடுத்துவிடுவேன். கையில் ஒரு ரூபாய்தான் இருக்கிறது. அதை எடுத்துக்கொள். போய் சாப்பிடு. ஆனால் இந்த ஜந்துவை விட்டு விடுவதாக மட்டும் சத்தியம் செய்."

இருளேசன் ரூபாயைப் பெற்றுக் கொண்டான். ஆனால் தன்னைப் பின் தொடரும்படியாக எனக்குச் சங்கேதம் செய்தான். ஆற்றங்கரையி லிருந்த ஆல மரத்தடிக்கு என்னைக் கூட்டிக்கொண்டு போனான்—கிராமத்துக்கு வடக்கே.

"யஜமான், நான் சொல்லுவது கட்டுக் கதையல்ல. நான் கொடுக்கிறதை நானும் சபித்துத் தருகிறேன். எனக்கும் கொஞ்சம் மந்திரவாதம் தெரியும். உங்கள் உள்ளங்கையைக் காட்டுங்கள், பார்ப்போம். சரிதான், நான் நினைத்தபடி காரியம் சாதிக்கவல்ல ரேகையும் நல்ல படிப்பு ரேகையும் இரண்டும் இருக்குதுங்க. உங்க மனசும் நல்ல மனசு. நீங்க தகுதியான ஆளுன்னு எங்குலதெய்வம் சொல்லுதுங்க. நம்பிக் கையோடே கவனமா நான் சொல்றதெக் கேளுங்க," என்று சொல்லும்போது அவன் முதலில் உணர்ச்சியுடன் ஆரம்பித்துப் போகப்போக அமைதியாக நிறுத்தாமல் பேசினான்.

கடைசியாக மிக்க அமைதியுடன் எதிர்காலத்தை உரைக்கும் தோரணையில் ஆரம்பித்தான்.

"பங்குனி மாசம் மப்புமந்தார மில்லாததாக ஒருநாள் சாயங்காலமா, இத்தைக் கிட்டவச்சிக்கிட்டு ஒரு ஏரிக்கரையோரம் காத்திருங்க. முத்தின கதிரு அந்த மாலையிலே மணத்துக்கிட்டிருக்கும்; மிருகம், பட்சி ரொம்ப மெய்ம்மறந்திருக்கும்; கட்டுத்துறை திரும்புகிற கண்ணுமாடு கூட்டமா கத்திக் கொம்மாளம் போட்டுகிட்டு வயப்பக்கமா வரும். அந்த மாலையிலே முன்னடி வர்ர மாட்டுக்கொம்புலே குந்தியிருக்கும் இக்ஷிணி தேவதை. இதன் தலையிலே அப்பொ ஒரு தட்டு தட்டுங்க. மூடின கண்ணெத்திறக்கும். முன்னேவந்த காளை தாவிக் குதிச்சி கும்மாகும்மானு கத்தும். உலகம்

முடிஞ்சு போற மாதிரி அளும் தேவாங்கு. அதைச் சமாதானம் செய்யுங்க."

மூச்சு விடுவதற்காக இருளேசன் சற்று நிறுத்தி மறுபடியும் ஆரம்பித்தான்.

"கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மாட்டுக் கொம்புலே சவாரிபண்ற தேவதை கண் காணுமெ இந்தத் தேவாங்கு கைலே ஒம்பது அங்குல நீளமான மந்திரக்கோலொண்ணைக் கொடுக்கும். அதைப் பாஞ்சு எடுத்துக்குங்க. அதாலே உலகத்தையே உங்க இஷ்டப்படி மாத்திடலாம். உடனே இந்தத் தேவாங்கை விட்டுடுங்க. பக்கத்திலே இருக்கிற தண்ணிலே போய் முழங்கால் ஆளத்திலே நின்னுகிட்டு, கைலே கோலை வச்சிக்கிட்டு இந்த மந்திரத்தைச் சொல்லி சபம் பண்ணுங்க. இன்பமான சங்கீதமும் மனத்தை இளக்கும் அழுகையும் காதில் விளும். திடமா இருங்க. கோலைக்குடுன்னு கேக்கற மாய ஜாலக் கண்ணீருக்கு அசையாதிங்க. ஒரு மணி நேரத்திலே மறஞ்சிருக்கிறபிசாசு வளிக்கு வந்திடும். ஆயுசு பூரா உங்களுக்கு அடிமையா இருந்து சொன்னத்தைச் செய்யணும்னு அதுகிட்ட சத்தியம் கேட்டு வாங்கிடுங்க. பிசாசு சொன்ன பேச்சு தவறாது. தண்ணிமேலே அடிச்சி ஜலத்தைக் கிளப்பி சத்தியம் செய்த பிறகு வேணுங்கறபோது அதைக் கூப்பிடவேண்டிய மந்திரத்தைச் சொல்லச் சொல்லுங்க. மனசில்லாமெ ஆனால் மறைக்காமெ அது உங்க காதிலே அதை ஓதும். நன்றிகூறிக் கோலை விட்டெறிஞ்சிடுங்க. அதிகமா அதை வேலை வாங்காதிங்க. வேடிக்கைக்காகக் கூப்படப்படாது. பரோபகாரமாகவும் உங்களுக்கு முக்கியமாக வேண்டியபோதும்தான் கூப்பிடணும். நல்லா நடத்துங்க. பெரிய பொக்கிஷம். சந்தோசமா வேலை செய்யும். கஷ்ட காலத்திலே உதவும். முதல்லே புதுசா வந்த சக்தி உங்களுக்குக் கொஞ்சம் இரக்கமாகத்தான் இருக்கும். மட்டா உபயோகிச்சா நீங்க கெட்டிக்காரங்க. அது கிடைச்சதப்பத்தி சந்தோசம்தான் படுவீங்க — வருத்தமிருக்காது. இந்தப் பிரகிருதி சக்திக்கு முன்னாலே உங்க புது சாத்திரமெல்லாம் நிற்காது. இத்தோடே நானும் ஒரு சின்ன உபகாரம் செய்யறேன். ரொம்ப நாளைக்குப் பிறகு என்னை நினைவுபடுத்திக் கொண்டு ஒரு எண்ணம் கொள்ளக்கூடும். நான் எங்கே இருந்தாலும் உங்க ஆசை நிறைவேறும். குல தெய்வம் உங்களைக் காப்பாத்தும் போங்க!"

பிரமித்துப்போனவன் நான் வாய் திறக்கு முன் வேடன் தேவாங்கை என் பக்கத்தில் வைத்து வேகமாக நடந்து போய்விட்டான். அவன் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் ஆணித்தரமாக என் மனத்தில் பதிந்தது — அப்படிப் பேசினான் அவன். நான் திகைத்து நின்றேன். பரீட்சை செய்து பார்ப்பதா வேண்டாமா என்று அரை மணி நேரம் யோசனை செய்தேன். என் பேராசையையும், அதிகாரப் பித்தையும் உணர்ந்து வெட்கமடைந்தேன். பாதி மனது மற்ற பாதியைப் பழித்தது. பங்குனி வர எட்டு மாத மிருந்தது. அது வரை யார் அந்தப் பீடையை பாதுகாப்பது? நல்ல நினைப்பில் அது முழுவதும் பெரும் புரளி என்று கூடஎனக்குப் பட்டது. நிஜமா யிருந்தாலும், அதை முழுவதும் பரீட்சை செய்து பார்க்க எனக்கேது மனோதிடம்? மாணவனாக லட்சணமாக பள்ளிக்கூடப் புத்தகங்கள் படிக்காமல் பிசாசைப் பிடிக்க முயலுவதைப் பார்த்து ஊரே சிரிக்காதா?

இந்த யோசனைகளை யெல்லாம் நான் செய்தபொழுது அந்தப் பிராணி துயரப் பார்வையும் தவக்கோலமுமாக அருகில் இருந்தது. வாயற்ற ஜந்துவின் அந்தப் பரிதாபத்தைப் பார்த்து எனக்கு இரக்கம் மேலிட்டது. ஆற்றங்கரையில் எனக்கு நல்ல உணர்ச்சி ஏற்பட்டது. அதை விட்டுவிட அடுத்திருந்த தோப்புத்தான் சரியான இடம் என்று பட்டது. உடனே அந்த மாதிரி செய்தேன். இந்தப் புனித காரியத்தைச் செய்த பிறகு ஆற்றில் கைகால் அலம்பிக்கொண்டு ஒரு வாய் ஜலம் குடித்துக் கடவுளை வாழ்த்தினேன்.

## [5]

என் ஊர் இருபது மைல் தூரத்தில் உள்ளது. நான் கால் நடையாகத்

திரும்பினேன் — என் பேராசைக்கும் அர்த்தமற்ற இரக்கத்திற்கும் சரியான சிட்சை. ஆனல் வழியில் மனது மாத்திரம் நிம்மதி யடையவில்லை. அந்த விஷயத்தில் தலையிட்டதும், அதைக் கைவிட்டதும் — இரண்டும் அவசரமாகச் செய்துவிட்டதாகத் தோன்றிற்று. என் விஞ்ஞான புத்தியும் என் பேராசையும் சேர்ந்து என்னை இடித்துக் காட்டின. என்னவானுலும் கடைசிவரை பரீட்சை செய்து பார்த்திருக்கவேண்டும் என்று தோன்றிற்று. சரியான சமயத்தில் மனோ திடம் இழந்ததைக் குறித்து வருந்தினேன். வாழ்க்கையிலும் சரி, அறிவு வேட்கையிலும் சரி, பலவீனமான இரக்கத்திற்கு இடமே இல்லை. அடுத்த தடவை அந்த மாதிரி வாழ்க்கை ரகசியத்தை ஆராயச் சந்தர்ப்பம் கிடைக்கும்போது பயங்கொள்ளித்தனமாகவும் அவசரப்பட்டும் அதைக் கைவிட்டுவிடக்கூடாது என்று தீர்மானித்துக் கொண்டேன்.

பதினைந்து நாட்களுக்குப் பிறகு ஊருக்குத் திரும்பி வந்தபொழுது எல்லாம் மாறிப்போ யிருந்தது. மேற்கே சாரல் ஆரம்பித்துவிட்டது. ஆற்றில் புது ஜலம் வந்து சிறு சுழல்களுடன் கொஞ்சி விளையாடி மிதந்து சென்றது நுரை. ஊர்க் குளங்கள் எல்லாம் நிறைந்து சமிருத்தியாக இருந்தன. ஆகாயத்தில் கார்மேகங்கள். மழை ஏக்கம்கொண்டு மரங்கள் ஊசலாடின. காற்று குளிர்ந்து மென்மையாக வீசிற்று. தெருவில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகள் என்னைக் கண்டு கூச்சல்போட்டுக் குதித்தார்கள். தாயார் என்னைச் சந்தோஷத்துடன் வரவேற்றுள். ஷர்ட்டையும் மேல் வேஷ்டியையும் சாத்திருந்த நாற்காலியின் கைகளில் போட்டுவிட்டுத் தெருவில் கத்திக்கொண்டிருந்த குழந்தைகளின் மகிழ்ச்சி யுலகத்தில் ஈடுபட்டேன். என்குரல் கொஞ்சம் கரகரத்திருந்தா லென்ன ? நானும் கத்தினேன். அங்கே ஒருவிதமான பேராசையும் கிடையாது. அங்கே கடலிலிருந்து கரைவந்து மோதும் அலைகளைப் போல வாழ்க்கையே காரணமற்ற களியாட்டம்.

ஆனுல் அந்தக் களங்கமற்ற குழந்தைப் பருவம் எனக்கேது இனிமேல்! அந்தச் சிறுவர்களின் சித்திர உலகத்தில் நான் அந்நியனக நின்றேன். ஒன்றையும் தேடித் திரியாத அவர்கள் சந்தோஷமாகப் போனுர்கள். நான் ஒரு மூலையில் தனியாக நின்றேன். தன் வழியும் இனிமைக்கு விரோதமான கப்பல் கட்டையைக் கடல் கரையில் கொண்டுதானே ஒதுக்கிவிடுகிறது ?

தனித்து நிறுத்தப்பட்ட அந்தச் சோர்வு நிலைமையில் ஆகாயத்தில் தோன்றும் நட்சத்திரம் போல இருளேசன் முகம் என் மனக்கண் முன் தோன்றிற்று. பின்னல் ஒரு கணீரென்ற குரல் கேட்டது. ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தேன். தபால்காரன் வெகு சூசகமாகச் சிரித்தான். ஆங்கில ஸ்டாம்புகள் ஒட்டிய ஆனந்தக் கவர் ஒன்றை என் கையில் கொடுத்தான். அது வேர் கடிதம். ஓரங்கள் மடங்கிக் கடல் யாத்திரையாலும் கடல் கடந்தவர் கைபட்டதாலும் சோர்ந்துபோன கட்டுரை கொண்ட 'புக் போஸ்ட்' அல்ல. அதை உடைத்தேன் ஒரு நொடியில். வெஸ்ட்மினிஸ்டர் பாங்க் பேர்கொண்ட 'செக்' ஒன்று வெளியே வந்தது. அது என் முதல் வெற்றி. கடல் கடந்த வெற்றி! ஈயத்திலிருந்து தங்கமும் வெள்ளியும் ! வெறும் பென்சல்களின் பித்தலாட்ட ஈயம் —எழுத்தின் ரஸவாதம் !

வெற்றி வேட்டைதான், உண்மையில்!

# அகமும் வாழ்வும்

[வ. உ. சிதம்பரம் பிள்ளை]

[காலஞ்சென்ற வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் பல வருஷங்களுக்கு முன்பு எழுதிய இக் கட்டுரையை, அப் பெரியாருடன் நெருங்கிய தொடர்பு பூண்டிருந்த வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதியாரவர்கள் தேடி யெடுத்து உதவினார்கள். அவருக்கு எம் நன்றியறிவு உரியது—ஆசிரியர்.]

அகத்தை யொத்தே வாழ்வு அமைகின்றது. அகம் இடைவிடாது புறமாகிக் கொண்டிருக்கிறது. எதுவும் வெளிப்படாமலிருப்பதில்லை. எது மறைபட்டிருக்கிறதோ அது சிறிது காலத்திற்கு மட்டுமே மறைபட்டிருக்கிறது. அது முதிர்ந்து கடைசியாக வெளிப்பட்டே விடுகிறது. வித்து, மரம், மலர், கனி இவை ஒன்றன்பின் ஒன்றாகவும், எந்த முறையில் வெளிப்பட்டு நிகழ்கின்றனவோ அந்த முறையிலேயே பிரபஞ்சமும் நிகழ்கின்றது. மனிதனது அகத்தின் நிலைமையிலிருந்து அவனது வாழ்வின் நிலைமைகள் வருகின்றன. அவனது நினைப்புக்கள் அவனுடைய செயல்களாக மலர்கின்றன. அவனுடைய செயல்கள் அவனுடைய ஒழுக்கமும் விதியுமாகிய கனிகளைக் கொடுக்கின்றன.

மரம் எப்பொழுதும் பூமியின் அகத்திலிருந்தே வெளிப்பட்டுக்கொண்டிருத்தல் போல வாழ்வும் எப்பொழுதும் மனிதனது அகத்திலிருந்தே வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. நிலத்துள் புதைபட்டுள்ள வித்துக்கள் நாளடைவில் இலைகளாகவும், கிளைகளாகவும், கனிகளாகவும் வெளிப்படுதல் போல அகத்துள் புதைபட்டுள்ள நினைப்புக்கள் நாளடைவில் சொற்களாகவும், செயல்களாகவும் செய்து முடிக்கப்பட்ட காரியங்களாகவும் வெளிப்படுகின்றன.

மறைபட்டுள்ள ஊற்றுக் கண்களிலிருந்து எப்படி ஊற்று நீர் வெளிப்படுகின்றதோ அப்படியே மனிதனது வாழ்வும் மறைபட்டுள்ள அவனுடைய ஆக மூலங்களிலிருந்து வெளிப்படுகின்றது. நிகழ்காலத்தில் அவன் எந்நிலைமைகளில் இருக்கிறானோ அவையும், நிகழ்காலத்தில் அவன் எவற்றைச் செய்கிறானோ அவையும் அவன் அகத்திலிருந்தே வந்திருக்கின்றன. எதிர்காலத்தில் அவன் எந்நிலைமைகளில் இருப்பானோ அவையும், எதிர்காலத்தில் அவன் எவற்றைச் செய்வானோ அவையும், அவனது அகத்தில் நின்றே உற்பத்தியாகும். ஆன்றோரும்,

"அறவினைக்கு மரும்பொரு ளின்பொடு
பெறுவ தற்கும் பெருங்கல்வி கற்றுயர்
விறலி னுக்குநல் வீரந் தனக்குமொண்
டிறலி னுக்குந் திணைமன மென்பவே"—

என்று கூறியுள்ளார்.

துக்கமும் சுகமும், துன்பமும் இன்பமும், அச்சமும் துணிவும், வெறுப்பும், விருப்பும், மடமையும், அறிவும் அகத்தின்றி வேறு எங்கும் இல்லை. அவை யாவும் மனோ நிலைமைகளே யன்றி வேறல்ல. ஆன்றோரும்,

"ஒடும் பொன்னு முறவும் பகையுமோர்
கேடுஞ் செல்வமும் கீர்த்தியும் நிந்தையும்
வீடும் கானமும் வேறற நோக்குதல்
கூடுந் தன்மை கொளுமன நன்மனம்."

என்று கூறியுள்ளார்.

மனிதன் தனது அகத்தின் புரவலன்; தனது மனத்தின் காவலன்; தனது வாழ்க்கையாகிய கோட்டையின் தனிக் காவற்காரன். அவன் அந்த முறையில் எச்சரிக்கையாயிராமல் எச்சரிக்கைக் குறைவாக இருக்கக்கூடும். அவன் தனது அகத்தை மேலும் மேலும் எச்சரிக்கையாக வைத்துக்கொண்டிருக்கக்கூடும். அவன் தனது மனத்தை அதிகப் பிரயாசத்தோடு பாதுகாத்துச் சுத்தப்படுத்திக்கொள்ளக்கூடும்; அவன் நியாயமற்ற நினைப்புக்களை நினையாது தன்னைக் காத்துக்கொள்ளக்கூடும். இது அறிவுக்கும்

இன்பத்திற்கும் மார்க்கம். இதற்கு மாறாக அவன் தனது வாழ்வைச் சரியாக ஒழுங்கு படுத்தும் மேலான வேலையைச் செய்யாது எச்சரிக்கைக் குறைவாகவும் ஒழுங்கீன மாகவும் வாழக்கூடும். இது மயக்கத்திற் கும் துன்பத்திற்கும் மார்க்கம்.

ஒரு மனிதன் தனது வாழ்வு முழுவதும் தனது மனத்தில் நின்றே வருகிறது என்று அறிவானுனல் அப்பொழுதே அவனுக்குப் பேரின்பத்தின் வழி திறக்கப்பட்டிருக்கிறது. அவன் அப்பொழுது தனது மனத்தை ஆளுவதற்கும், தனது கொள்கைக்குத் தக்கபடி தன்னைத் திருத்திக்கொள்வதற்கும் வேண்டும் வலிமை தன்னிடத்தில் இருப்பதைக் காண்பான். அப்படியே அவன் முற்றும் மேம்பாடான நினைப்பும் செயலுமாகிய மார்க்கங்களில் நேராகவும் உறுதியாகவும் நடப்பான். அவனுக்கு வாழ்க்கை இனியதாகவும் தூயதாகவும் அமையும். அவன் விரைவாகவோ தாமதமாகவோ சகல தீமைகளையும் சகல கவலைகளையும் சகல துன்பங்களையும் போக்கிவிடுவான். ஏனெனில், தனது அகத்தின் வாயிலைத் தளராத ஊக்கத்துடன் காத்துவருகிற ஒரு மனிதன் ஞானத்தையும், துக்க நிவர்த்தியையும், சுகப் பிராப்தியையும் அடையாமல் இருக்க முடியாது.

---

## கட்டுரையாளர்களுக்கு அறிக்கை

"பாரதமணி"க்கு விஷயம் எழுதுபவர்கள் நல்ல காகிதத்தில் ஒரு பக்கத்தில் மையினுல் எழுதியனுப்ப வேண்டும்.

கிராம புனருத்தாரணம், குடிசைக் கைத்தொழில், விஞ்ஞானம், பொருளாதாரம், சுகாதாரம் முதலிய விஷயங்கள் எழுதியனுப்பலாம்.

சிறுவர்க் குரிய கதைகள், நீதி போதனைகள், சிறுகதைகள், உயர்ந்த வியாஸங்கள் முதலிய விஷயங்களைத் தெளிவான நடையில் எழுதியனுப்பலாம்.

கட்டுரை எழுதுபவர் தமது பெயரையும் முழுவிலாஸத்தையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

**ஆசிரியர்**

"பாரதமணி" காரியாலயம்

12, பிருந்தாவனம் தெரு, மயிலாப்பூர், சென்னை

# சொல்லும் பொருளும்

[அ. வி. மயில்வாகனன்]

தற்காலத்தில் பேச்சு வழக்கி லிருக்கும் மொழிகளுள் தமிழும் ஒன்று. இம் மொழி இற்றைக்கு இரண்டாயிரம்வருடங்களுக்கு முன்னும் பேச்சு வழக்கில் இருந்தது. அக் காலத்திலே தமிழ் மக்கள் உபயோகித்துவந்த சில சொற்கள் இப்போது வழக்கற்று அழிந்தொழிந்தன. வேறு சில வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டு வழங்குகின்றன. இன்னுஞ் சில முன்னைய தோற்றத்தை இழந்து உருமாறி நிலவுகின்றன. இவற்றுடன் புதுச் சொற்களும் பல வந்து விரவி வழங்குகின்றன.

இப்படி வழங்கும் சொற்களின் தோற்றமும் பொருளும் இடத்திற்கிடம் மாற்றமடையும். யாழ்ப்பாணத்தில் பொதுவாக வழங்குஞ் சில சொற்கள் மட்டைக்களப்பில் விளங்கா. அப்படி வழங்கினும் அவை வேறு கருத்தைக் குறிப்பனவாகவே தோன்றி வழங்கும். சென்னையில் வழங்குஞ் சில சொற்கள் தஞ்சாவூரிலோ தென்காசியிலோ திருநெல்வேலியிலோ விளக்கமுறப் புலப்படா. இஃது அப்படியாயின் சென்னைத் தமிழிற்கும் யாழ்ப்பாணத் தமிழிற்குமிடையில் உள்ள வேற்றுமைகளைச் சொல்லவும் வேண்டுமோ? அவை மிகவும் அதிகமாகவே காணப்படும்.

இப்பொழுது நாம் முன்கூறியபடி தோன்றியும் மறைந்தும் பல பொருள் கொடுத்தும் உருமாறியும் போன சொற்கள் சிலவற்றை ஒரு சிறிது ஆராய்வோம். தொல்காப்பியர் காலத்தில் வழங்கிய சொற்கள் சில உரையாசிரியன்மார் காலத்தில் இருந்தவிடமுந் தெரியாது மறைந்தன. அவர் காலத்தில் இல்லாத சில சொற்கள் பின் தோன்றின. உதாரணமாக :-யவனர், யுத்தி, யூபம் என்பன அப் பெயர்ப்பட்டன. அவர் நூன்மரபிற் கூறும் (23-26) வரையுள்ள சூத்திரங்களுக்குத் தகுந்த உதாரணங்களை உரையாசிரியர் காட்டிற்றிலர். இதற்குக் காரணம் அவர்கள் காலத்தில் அவற்றிற்கேற்ற உதாரணங்கள் அழிந்துபட்டமையே.

இனி ஓலை, நாற்றம், மந்தி முதலிய சொற்கள் பல, பொருள் வேறுபட்டு வழக்கி லெழுந்தமையும் நோக்கத்தகும். இவற்றைவிட காலத்திற்குக் காலம் இலக்கண வரம்பிகந்து நம் மொழியில் தோன்றி வழங்குஞ் சொற்களும் பலப்பல. உதாரணமாக :— கதிரை, வாங்கு, கரூர், நகல், பாக்கி, சீப்பு என்பன போன்றன இவை. இவற்றைத் திசைச்சொற்களுட் சேர்க்கலாமெனினும் அது மொழிக்குச் சிறப்பைத் தராது.

நாம் இனிச் சில சொற்களை எடுத்து அவற்றின் பொருளை ஆராய்வோம். ஜோலி — "எனக்கு ஜோலி இருக்கிறது" என்றால் நான் நிறைவேற்ற வேண்டிய அலுவல் யாதோ ஒன்றுண்டு எனப் பொருள்படும். இது சென்னை வழக்கு. இதே சொல் யாழ்ப்பாணத்தில், 'சோலி' என்று வழங்குகின்றது. 'வீண் சோலிப் படாதே', என்றால் அவசிய மில்லாமல் உன்னைத் தொந்தரவுகளுக்கு உட்படுத்திக் கொள்ளாதே, என்று கருத்துப்படும். ஆனால் முன்னைய கருத்துடன் இது வழங்குவதில்லை.

கதை :— "அவன் கதை பேசுகிறான்" என்னும் பொழுது அவன் வாய்மைக்குப் புறம்பான எதையோ பேசுகிறான் என்று பொருள்படும். இச் சொல் யாழ்ப்பாணத்தில் சாதாரணமான சம்பாஷணையைக் குறிக்கும். 'அவர்கள் கதைக்கிறார்கள்', என்றால் சாதாரணமாகச் சொல்லாடுகிறார்கள் என்றே கருத்துப்படும். அன்றி வீண் பேச்சுப் பேசுவதாகக் கருத்துப்படாது.

அண்ணாவி :— இச்சொல் தென்னிந்தியாவில் ஆசிரியன்மாருக்கு வழங்குகின்றது. சில விடங்களில் நாடகம் பயிற்றுபவனுக்கும் வழங்கும். ஆனால் யாழ்ப்பாணத்தில் பின்னைய வழக்கே பெரும்பாலும்

உண்டு. முன்னையது இல்லை. அன்றியும் சிலரைக் கேலி பண்ணும் பொருட்டு "அண்ணவி வருகிறார்," என்று வழங்கலும் உண்டு. மலையாளத்தில் பைத்தியக் காரனை அண்ணவி என்பர்.

கிழமை:—'புத்தகத்தைத் தெண்டித்து ஒரு கிழமையில் தருவேன்', என்று யாழ்ப்பாணத்தவர் ஒருவர் இந்தியர் ஒருவருக்குச் சொன்னால் அவர் அதனை அடுத்த நாளே வந்துவிடுமென்று எதிர் பார்ப்பர். ஆனால் யாழ்ப்பாணத்தவரோ ஏழு நாட்கழித்தே அதனைக் கொண்டுவந்து கொடுப்பர். அவருக்குக் 'கிழமை' ஏழு நாட்களைக் குறிக்கும். இவருக்கு ஒரே ஒரு நாளையே குறிக்கும். இதுவே வித்தியாசம்! இவற்றிடை 'வாரம்' என்ற வடமொழியைப் புகுத்திவிட்டால் இருவருக்கும் சுகமாய்விடும். இஃது எங்கும் ஏழு நாட்களையே குறிக்கும். ஆனால் 'கிழமை' என்னுஞ் சொல் தனியாகவன்றி ஒரு நாளின் பெயரோடு சேர்ந்து வருமாயின் (உம் - சனிக்கிழமை) அது ஒரே ஒரு தினத்தைத்தான் குறிக்கும். இவ் வழக்கு எல்லாவிடத்திற்கும் பொதுவானதென்று சொல்ல வேண்டுவதில்லை.

இதனோடு சேர்ந்துவந்த 'தெண்டித்து' என்பதை நோக்குவோம். இது கொஞ்சம் சிரமப்பட்டு' என்ற கருத்தைக் கொண்டு வழங்குவது. இவ் வழக்கு இந்தியாவிலில்லை. இதனைச் சில இந்திய நண்பர் 'தண்டித்து' எனமாற்றி விபரீதப் பொருள் கொள்ளவுங் கூடும். ஆதலால் எச்சரிக்கை.

மங்கி:— இது முன்பு பெண் குரங்குக்கே வழங்கியது. இப்போது ஆண் குரங்குக் குரியதாக மாறிவிட்டது! இஃதும் இயற்கைக்கு உடன்பாடுபோலும்!

அட்டை:—'இந்தப் புத்தகத்திற்கு நல்ல அட்டை உண்டு' என்றால் அது யாழ்ப்பாணத்தவருக்கு விளங்காது. அட்டையை மட்டையாக்கினால், அதாவது மகரப் புள்ளியை நீக்கினால் விளங்கும்! எங்கள் ஊர் வழக்கு 'மட்டை' என்பதே. இவற்றுள் பின்னைய வழக்கே மிகப் பொருத்தமானது. அதற்குக் காரணம் வருமாறு. ஆதியில் எழுதப்பட்ட நூல்களெல்லாம் ஏட்டு வடிவமாக விருந்த பொழுது அவற்றைப் பேணிக் காக்க மரத்தாலாகிய மட்டைகளையே இருபக்கங்களிலும் சேர்த்துக் கயிற்றினால் வரிந்து கட்டினார்கள். இப்பொழுது ஏடுகளெல்லாம் காகித உருவம் எடுத்துவிட்டன. இவற்றைப் பேணுவதற்கு மேலே சேர்க்கப்படும் தடித்த கடுதாசியை 'மட்டை' என்று முன்னைய பெயரைக் கொண்டே அழைத்தல் பொருத்தமன்றோ? ஆனால் இங்கு அட்டை எங்ஙனம் புகுந்ததோ? (மலையாள வழக்கம் இதுவே)

தாகம்:—'எனக்குக் கொஞ்சம் தாகம் கொடு,' என்பது திருநெல்வேலி வழக்கு. இங்குத்தாக மென்னுஞ் சொல் குடிக்கும் நீரைக் குறிப்பது, அன்றித் தாக நிலைமையைக் குறிக்கவில்லை. தமிழ் நாட்டு வேறு பாகங்களில் இவ் வழக்கில்லை. யாழ்ப்பாணத்தில் தாகத்திற்குப் பதிலாக 'தண்ணீர் விடாய்' என்னுஞ் சொற்றொடர் வழங்கும்.

பாரத்தக்காரன்:— இது வன்னி நாட்டு வழக்கு. 'பன்றி நெல்லைத் தின்னுதென்று பாரத்தக்காரன் வாறான்', என்பது இதற்குச் சான்றாகும். இச் சொல் வேறிடங்களில் 'வாரக்காரன்' என்று வழங்கும். வயல் ஒன்றைச் சாகுபடி செய்து, விதைத்து, அறுத்து, வருவாயில் பங்கு வயற்காரருக்குக் கொடுப்பவன் 'வாரக்காரன்' ஆவான்.

சூந்து:— இது 'சூ' என்றும் வழங்கும். இவ்விரண்டு வழக்குகளும் இந்தியாவிற்கே உரியன. இச் சொற்களின் பழைய தோற்றம் 'சூழ்' என்பது. இப் பழைய சொல் இன்றும் அப்படியே சிதைவின்றி யாழ்ப்பாணத்தில் வழங்குகின்றது. சூழ்—பந்தம், (சூட்டு - மலையாள வழக்கு.)

திங்கை:— இது 'திங்கல்' என்றும் ஆம். இது தஞ்சாவூர் வழக்கு. தின்பண்டம் அல்லது 'தீன்' என்னும் யாழ்ப்பாண வழக்குகளுக்குப் பதிலாக வரும்.

அவகாசம்:— 'இதைப் பற்றிப் பேச எனக்கு அவகாசமில்லை' என்று வழங்கும் பொழுது இச் சொல் 'சமையமில்லை'

என்னும் பொருள்படும். ஆனால், மலையாளத்திற்கு அண்மையிலுள்ள செங்கோட்டைப் பாகத்தில் இச்சொல் 'விருப்பமில்லை' என்றும் கருத்துப்படும். ஆதலால் மேற்கூறிய வசனத்தை அப் பாகங்களில் கூறுபவர்களில் நியாய மில்லாமலே அந் நகரவாசிகள் வெறுப்புக்கொள்ளவும் கூடும்!

பந்தல் :—இச் சொல் செட்டி நாட்டில் சா வீடுகளிலிடும் பந்தலுக்கே வழங்கும். மணவினை செய்வதற்கிடும் பந்தல்களுக்கு அப் பெயர் வழங்காது. ஏனெனில் அது அமங்கல மொழியாதலால் என்க. இதனைக் கொட்டகை அல்லது காவணம் என்று வழங்கல் வேண்டும். இவ் வித்தியாசம் வேறு நாடுகளில் நுணுக்கமாகக் கவனிக்கப்படுவதில்லை. யாழ்ப்பாணத்தில் காவண வழக்கே கிடையாது.

இழவு :—சென்னையில் தமிழ் பேசும் முகம்மதியரும் வேறு சில தமிழரும் இச் சொல்லை அளவு கடந்து பாவிப்பர். ஆனால் செட்டிமாரோ இதனை ஒருகாலும் பாவியார். ஒரு முறை செட்டி நாட்டில், "இலங்கையைப் பார்க்க வந்தால் உனக்கு வந்த இழவென்ன?" என்று அநுமன் இலங்கைமா தேவியைக் கேட்டான்; என்பதாகக் கூறி ஒரு உபன்னியாசகர் தம் கடைசி வசனத்தை முடித்தார். சபையிலிருந்த செட்டிமார் ஒருவரும் கைகொட்டவு மில்லை! எழுந்து செல்லவு மில்லை! சிறிது நேரம் கழிந்தபின், முன்னிருந்தவருட் சிலர் அவரை நோக்கி இன்னும் இரண்டொரு வார்த்தைகூடச் சொல்லி முடிக்குமாறு வேண்டினராம். அதற்குக் காரணம் அவருடைய கடைசி வசனத்தில் 'இழவு' வந்ததே! இழவுடன் முடித்தல் அமங்கலம்.

எம்பளுது :—இது தஞ்சாவூர் வழக்கு. எண்பது, என்னுஞ் சொல் சீராக இவர்கள் வாயிற் புகாது. ஆனால் பிற இடங்களில் இவ் வழக்கில்லை.

வாயைப்பயம் :—இது சென்னையில் இழிந்தோர் வழங்கும் வழக்கு. வாழைப் பழத்தை விலைகூறி விற்கும் பெண்கள் இப்படியாகவே முரண்பாடாக உச்சரிப்பர். இது திருநெல்வேலியிலும் யாழ்ப்பாணத்திலும் 'வாளைப்பள'மாக மாறிவிடும்! தமிழிற்குச் சிறப்பெழுத்தாகிய 'ழ' கரம் பெரும்பாலும் முறைப்படி உச்சரிக்கப்படுவதே இல்லை. இதற்கு உதாரணங்கள் பலவுள.

இவ்விதமாக நாம் சொற்களையும் அவற்றின் பொருள்களையும் இன்னும் நுணுகி ஆராய்ந்துகொண்டு செல்வோமானால் அதிக உண்மைகள் புலப்படும். அன்றியும் தமிழ் நாட்டின் வெவ்வேறு பாகங்களிலுள்ள வழக்குகளும் அவற்றின் பொருள் மாறுபாடுகளும் இன்னும் பலவும் தோன்றும். இம் முறையில் சிலராவது முயலுதல், தமிழன்னைக்குச் செய்யும் ஒரு பெருந் தொண்டாகக்கொள்ளப்படும்.

# அநுதாபம்

"பாஸ்கரன்"

உலகத்தில் நல்லவர்களும் பரோபகார குணமுள்ளவர்களும் தேசபக்தசீலர்களும் சீக்கிரம் மறைவது இயல்பாக இருக்கிறது.

ஸ்ரீ. எஸ். ரங்க ஐயர் அவர்கள், மைசூரில் பிரபலஸ்தராய் விளங்கும் அரசியல் பிரமுகர்களுள் முக்கிய ஸ்தானம் வகித்து வந்தார். அவர் சில வருஷங்களாக அரசாங்க விவகாரப் பிரசாரகராக (State Publicity Officer) இருந்து பெரும் புகழ் பெற்றுவிட்டார். ஐயரவர்கள் 8—2—41ந் தேதியன்று (சனிக்கிழமை) தமது ஐம்பத்தைந்தாவது வயதில் பெங்களூரிலுள்ள தமது வாசஸ்தலத்தில் இறைவன் திருவடி நீழலை யடைந்தது கேட்டு வருந்துகிறோம். ஐயரவர்கள் சென்ற மூன்று மாதங்களாக உடல்நலம் குன்றியிருந்து கடைசியில் எதிர்பாராதவிதமாகத் தேகவியோக மடைந்தார்.

ரங்க ஐயர் அவர்கள் பல துறைகளிலும் உழைத்து அநுபவம் பெற்ற பெரியார்; அவர் "ஹிந்து" பத்திரிகையின் உரிமையாளரான காலஞ்சென்ற ஸ்ரீ. கஸ்தூரி ரங்க ஐயங்கார் அவர்களுடன் சேர்ந்து இந்தியப் பத்திரிகைத் தொழிலுக்கு அளவு கடந்த சேவை செய்திருக்கிறார்.

ஐயர், "இந்தியன் பேட்ரியட்" என்ற பத்திரிகையை நடத்திவந்த காலஞ்சென்ற ஸ்ரீ. கருணாகரமேனன் என்பாரிடம் வெகு காலம் பழகி நம் நாட்டுக்குப் பத்திரிகை வாயிலாகத் தம்மாலியன்றவளவும் தொண்டு செய்திருக்கிறார். பாட்னாவில் "ஸர்ச்லைட்" என்ற பத்திரிகையில் ரங்க ஐயர் சேர்ந்துழைத்திருக்கிறார். ஈஸ்டர்ன் நியூஸ் ஏஜென்ஸியை (அது இப்பொழுது "அஸோஸியேடெட் பிரஸ்" என்று வழங்குகிறது.) ஸ்தாபித்த பெரியாராகிய காலஞ்சென்ற ஸ்ரீ. கே. சி. ராய் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு பூண்டிருந்தார். ஐயர் லக்ஷ்மணபுரியில் "இந்தியன் டெய்லி டெலிகிராப்" என்ற தினசரி பத்திரிகைக்கு ஆசிரியர் பதவி வகித்து அப்பத்திரிகையைத் திறமையுடன் நடத்தி வந்தார்.

ஐயரவர்கள் நாபா (Nabha) மகாராஜாவினிடம் அந்தரங்கக் காரியதரிசியாகக் கொஞ்சகாலமிருந்து கீர்த்தி பெற்றிருக்கிறார்; ஆள்வார் (Alwar) மகாராஜாவினிடம் அந்நிய நாட்டு மந்திரியாக இருந்து அநுபவம் பெற்றிருக்கிறார்; அவர் அப்பொழுது அந்த உத்தியோக முறையில் 1929-ம் வருஷம் இங்கிலாந்து சென்றிருந்தார். ஐயரவர்கள் காஷ்மீர அரசாங்கத்தில் அரசியல் விவகாரப் பிரசாரகராக இருந்து அப்பொழுது அமைதி குன்றியிருந்த காஷ்மீரத்தில் அமைதி நிலவியிருக்கும்படி செய்து குடிகளின் நன்மதிப்புக்குப் பாத்திரமானார்.

ரங்க ஐயரவர்களை யிழந்ததனால் மைசூர் அரசாங்கம் — துணை வலியிழந்துவிட்டது; பொலிவு குன்றிவிட்டது; ஈடுபடுத்த முடியாத நஷ்டத்தை யடைந்துவிட்டது — என்று கூறின் அது மிகையாகாது.

திவான் ஸர். மிர்ஸா எம். இஸ்மெயில், அரசாங்க முக்கியக் காரியதரிசி முதலியவர்களும் இன்னும் அநேக பிரமுகர்களும் கண்ணீரும் கம்பலையுமாக ஐயரவர்கள் காலஞ்சென்றபொழுது தங்கள் அநுதாபத்தைத் தெரிவிக்கும் பொருட்டு அவர் இல்லத்தில் கூடிவிட்டனர் என்பதைப் பத்திரிகையில் படிக்கும்பொழுது அவரது பெருமை நன்கு வெளிப்படுகிறது.

ஐயரவர்கள் தமது மனைவியான ஸ்ரீமதி செல்லம்மாளுக்கும், புத்திரனாகிய ஸ்ரீ சுப்ரமண்யனுக்கும், ஸ்ரீமதி லக்ஷ்மி, ஸ்ரீமதி தங்கம் என்னும் புத்திரிகளுக்கும் என்றும் ஆறாத துக்கத்தைத் தந்துவிட்டு, இம் மண்ணுலகில் தாம் அடைந்த புகழ் போதும் என்ற எண்ணங் கொண்டவர் போல் விண்ணுலகு சென்றுவிட்டார்.

இச்சமயம் எல்லாம் வல்ல இறைவனை நோக்கி முழுமனதுடன், காலஞ்சென்ற ஐயரவர்களின் ஆன்மாவுக்குச் சாந்தியளிக்கும்படி பிரார்த்திப்பதை யல்லாமல் நாம் வேறென்ன செய்ய முடியும்? ஐயரவர்களின் குடும்பத்துக்கு எமது மனப் பூர்வமான அநுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

# வீணன்கண்ட வெண்ணாறு

[வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதி]

மஹாராஷ்டிராருடைய அதிகாரம் வருவதற்கு முன் பரத கண்டம் பல சிற்றரசருடைய வசத்தில் பல பிரிவினைகளையுடையதாயிருந்தது. சிற்றரசர் என்பதற்கேற்றபடி அவர்களிற் பெரும்பான்மையர் சிற்றின்பப் பிரியரா யிருந்தனர். இரவைப் பகலாகவும் பகலை இரவாகவும் கொண்டு, யார் வாழ்ந்தா லென்ன? யார் தாழ்ந்தா லென்ன? மழை பெய்தா லென்ன? பெய்யாவிட்டா லென்ன?—என்கிற மமதையி லிருந்தனர். பொறுப்புக்களை யெல்லாம் அமைச்சர் வசம் ஒப்புவித்துவிட்டுக் கண்மூடிக் கபோதிகளா யிருந்தனர்.

அக் காலத்தில் தஞ்சாவூர் மன்னனும் இவ் வகுப்பிலே சேர்ந்தவன்தான். ஆயினும் இவன் ஆட்டுச் சண்டை, கோழிச் சண்டை, எருமைக்கடாச் சண்டை, பொம்மை நாடகம், தொம்பன் கூத்து, தாஸி நடனம்-வேட்டையாடுதல்-இவைகளின் பொருட்டு ஓரானொரு நாளில் வெளியே வருவான். ஆறுமாதம் தூங்கி யெழுந்த பின் கும்பகர்ணனுக் குண்டாகும் தெளிவு இவனுக்குண்டாகும் சில சமயம். தன்னை மறந்து சிங்கார லீலையிலிருந்த ஸுக்ரீவன் லக்ஷ்மணனுடைய வீரகர்ஜனையைக் கேட்டதும் காட்டிய சுறுசுறுப்பு இவனிடம் சில சமயம் காண்பதுண்டு. அரசன் இந்நிலைமையி லிருந்தபடியால் அவனுடைய அமைச்சர்கள் பரமார்த்த குருவுக்கேற்ற மாணவர்களாக விளங்கினார்கள்.

இக் காலத்தில் திருச்சிராப்பள்ளியில் குருசாமி என்னும் பேர்கொண்ட அந்தணனொருவ னிருந்தான். இவன் கல்வியிலும் கேள்வியிலும் யுக்தியிலும் புத்தியிலும் தந்திரத்திலும் தெனாலிராமனையும் மரியாதை ராமனையும் ஒப்பிட்டுப் பேசிப் புகழக்கூடியவனா யிருந்தான். அவனுக்கு அவனுடைய அந்தத் திறமைக்குத் தக்க பிழைப்பு அவ்வூரிலே கிடைக்கவில்லை. ஆகையாலவன் தஞ்சாவூருக்குப் போய்ச் சேர்ந்தான்.

தஞ்சாவூர்ப் போக்கிடமில்லாச் சாக்கடை நாற்ற வசதி யுடையதாய்—வசிப்பவர்க்கு யானைக்கால் வெகுமானம் அளிக்கக்கூடியதா யிருந்தது. அதுகண்டு குருசாமி அந் நகரை வெறுத்தான்; வெறுத்தானாயினும் பொறுத்தான்; ஒருநாள் ஒரு தெரு வழியே நடந்தான். அவனுக்கு அச் சமயம் அவன் உள்ளத்தி லெழுந்த பலபல ஆலோசனைகளே துணையாய் அவனுடன் சென்றன.

அப்பொழுது அங்கே ஓர் அங்காடிக் கூடைக்காரி வெள்ளரிக்காய் விற்றுக் கொண்டு போனாள். அவளைக் கூப்பிட்டுக் கூடையை இறக்கச் சொல்லிச் சிலர் வெள்ளரிக்காய் விலை பேசினர். இச் சமயம் சில போக்கிரிகள் அங்கே வந்து சேர்ந்தனர். அவர்களும் வெள்ளரிக்காய் வாங்குவது போல் பாசாங்கு செய்தபடி யிருந்து கால் நாழிகை நேரத்துக்குள் கூடையை வெறுங் கூடையாக்கிவிட்டு மாயமாய் மறைந்துபோயினர்.

அந்தோ பாவம்! யாரும் விலை கொடுக்கவில்லை. அதனால் அவள் கோவென்று கதறியழுது —"பாவிகளா! ஏழை யழுத கண்ணீர் வீணாகாது. உங்களை உங்கள் குடும்பத்தோடழிக்கும்!" என்று சாபமிட்டாள். அவளை அங்கே ஏனென்று கேட்பார் யாருமில்லை. இராஜாங்க அதிகாரிகளையும் காணோம்.

இவைகளை யெல்லாம் ஒரு பக்கமிருந்து கவனித்துக்கொண் டிருந்த குருசாமி, "நமது யுக்தி புத்திகளையும் தந்திரத்தையும் உபயோகித்துப் பொருள்தேட இதுதான் தக்க வூர். பொறுத்தது நல்லதாயிற்று" என்று கருதி மகிழ்ந்தான். அந்த மகிழ்ச்சியில் அவனுக்கு வெள்ளரிக்காய்க்

காரியிடம் இரக்கம் தோன்றியது. தோன்றிய வளவில் அவனையன்பாய் அழைத்து, காயின் கொள்முதல் தொகையை அவனுக்குக் கொடுத் தனுப்பிவிட்டுத் தன் வழியே சென்றான்.

மறுநாள் காலையில் வழக்கம்போல் ஸ்நான நியம நிஷ்டைகளை முடித்துக் கொண்டு விடுதியை விட்டுப் புறப்பட்டு— நான்கு கோட்டை வாயில் காவலாளிகளிடமும் போய்—அவர்க ளொவ்வொருவரிடமும் —

"நாளைமுதல் இவ்விடத்தில் சுங்கவரி வசூல் செய்ய மகாராஜாவின் கட்டளை பிறந்திருக்கிறது! அதற்கு மேலதிகாரி நான் தான். என் பேயர் வீணன். நீங்கள் இனி மேல் என் உத்தரவின்படி நடக்கவேண்டும். தவறினால் கடின சிக்ஷைக் குள்ளாவீர்கள்!" என்று எச்சரிக்கை செய்து விட்டு அங்கங்கிருந்து சுங்க வசூல் செய்யத் தக்க பலசாலிகளான முரடர்களையும் நியமித்தான்; அப்பால் ஒரு கட்டிடத்தில் தன் காரியலாயத்தை ஏற்படுத்திக் கொண்டான்; கோட்டை வாயில் வழியே கொண்டு போகும் பிண மொன்றுக்கு ஐந்து பணம் (பத்தணா) கலியாணம் ஒன்றுக்கு ஒரு ரூபாவும் சுங்க வரி யேற்படுத்தி வசூல் செய்து வந்தான்; இது யாருடைய உத்தரவென்று கேட்பவர்க்கெல்லாம்— மஹாராஜாவின் அதிகாரம் பெற்ற வீணனுடைய கட்டளை என்று சொல்லிவந்தான்; தன் அதிகாரத்துக் குட்பட்டவர்களையும் அப்படியே சொல்லும்படி திட்டப்படுத்திவிட்டுக் குதூகலமாயும் தைர்யமாயும் தொழிலை நடத்தினான்.

இவ்வாறு ஒரு வருஷம், இரண்டு வருஷம், மூன்று வருஷம், நான்கு வருஷம், ஐந்து வருஷ மென்று வருஷக் கணக்கில் வீணனுடைய அதிகாரம் நடந்துவந்தது. இப்போது வீணன் பிரம்மாண்டமான மாளிகையில் பரிபூர்ணமான லக்ஷ்மி கடாக்ஷ வைபவத்துடன் வசித்துவரலானான். அழகிய மனைவியும் மக்களும் ஏவலாளர்களும் அவனுக்கு ஸ்வர்க்க லோக வாழ்க்கையின் இன்பத்தினும் மேலான இன்பத்தை அளித்துவந்தனர்.

வீணன் நல்ல அறிவாளியாகையினால்— "பெருக்கத்துவேண்டும் பணிவு" என்கிற நீதியை மேற்கொண்டு எல்லோரும் தன்னிடம் மரியாதையோடு கூடிய அன்பு பாராட்டும்படி நடந்துவந்தான். செல்வச் செருக்கு அவனிடம் அணுகவில்லை. பகலவன் முன் இருளென ஒதுங்கியது! நாளடைவில் வீணன் அந் நகரத்தில் அநியாயம் செய்பவர்களைக் கைது செய்து தண்டிக்கவும், அபராதப்பணம் வசூல் செய்யவும் துணிந்தான். இதனால் பொருள் ஏராளமாக வந்து குவிந்தது! அந்தப் பொருளை ஒன்று பத்தாகும்படி வியாபாரத் துறையில் விருத்தி செய்தான்.

இவ்வாறு வீணனுடைய ஆதிக்யம் தஞ்சாவூரில் பெருகத் தொடங்கி விளையாட்டுப்போல் முப்பது வருஷ காலமாய் விட்டது. இச் சமயத்தில் அரசனுடைய உறவினரில் ஒருவன் காலமானான். அந்தப் பிணத்துக்கும் சுங்கம் வசூல் செய்யப்பட்டது. பிணத்துடன் சுடுகாட்டுக்குச் சென்ற அரசன் இதைக் கவனித்தான்; ஆச்சரியத்துடன்—"இதன் காரண மென்ன?" என்று சிந்தனைக்குள்ளானான்.

மறுநாள் தர்பார் கூட்டி அரசன் மந்திரிகளை அதுபற்றி விசாரணை செய்தான். மந்திரிகள் ஒன்றும் சொல்லத் தெரியாமல் "இவ்வழக்கம் அநேக வருஷ காலமாயிருந்து வருகிறது. இதுபற்றி வேறொன்றும் எங்களுக்குத் தெரியவில்லை. சுங்க அதிகாரியை விசாரிப்பின் விளங்கும் என்றனர்.

அரசன் இதைக் கேட்டதும் தூர்வாச மஹரிஷியானான். மந்திரிகள் எண்சாணுடம்பும் ஒரு சாணாய்க் குறுக, உடல் நடுங்க, அச்சமுற்று மண் ஆந்தையைப் போல் விழித்தார்கள். அரசன் "நல்லது! இவ்வளவு திறத்திலிருக்கிறதா உங்களுடைய அதிகாரம்! இருக்கட்டும்" என்று உரப்பி, சுங்க அதிகாரியை அழைத்துவரச் சேவகனுக்குக் கட்டளை யிட்டான். இப்போது அரசன் கோபாவேசத்தில் தன்னையே மறந்தான். மற்ற யாவரும் தர்பார் பதுமையாயினர்.

சற்று நேரத்திற்கெல்லாம் அரண்மனை வாசலில் வெள்ளைக் குதிரையின்மேல் அதிகாரிக்குரிய ஆடம்பரத்துடன் வீணன் வந்திறங்கினான். அவன் வரவை அரசன் அமைதியாய் ஏற்றான். வீணன் தைரியமாய் அரசனுக்கு முறைப்படி வந்தனம் செலுத்தி ஒரு பக்கம் நின்றான்.

அரசன் அவனுடைய கம்பீரமான தோற்றத்தையும் பார்வையையும் உடையையும் ஏற இறங்கப் பார்த்து வியப்படைந்தான்! "நீ யார்? எந்த ஊர்? உன்னை யார் இந்த உத்யோகத்தில் அமர்த்தியது? உண்மையைச் சொல்" என்று கேட்டான்.

வீணன் சிறிதும் அஞ்சாமல் தன் ஊர், பேர், புனைபெயர் எல்லாம் கூறினான். "என்னை ஒருவரும் இந்த வேலையில் நியமிக்கவில்லை. நானே இந்த வேலையைத் தொடங்கிச் செய்து வருகிறேன். இந்த வேலை ஆரம்பமாய் இன்றைக்குச் சரியாய் முப்பது வருஷ காலமாகிறது. இதுவரையில் இராஜாங்க அதிகாரிகள் யாரும் இதைப்பற்றி என்னைக் கேட்கவில்லை. என் புண்யவசத்தால் இன்றுதான் அவ் விசாரணை ஏற்பட்டிருக்கிறது. இன்றுதான் நான் இராஜாங்க உத்தியோகஸ்தனானேன்" என்றான்.

இவன் இவ்வாறு சொல்லி வாய் மூடுமுன் இரண்டு பேர்கள் இரண்டு மூட்டைகளைக் கொண்டுவந்து அரசன் முன் இறக்கினார்கள். வீணன், "இதோ கணக்குப் புத்தகங்கள். இவைகளில் வரவு செலவு விவரங்கள் அடங்கி இருக்கின்றன. கையிருப்பு ஐம்பத்து மூன்றரைக் கோடி ரூபாய்" என்றான்.

அரசன் ஆச்சரியத்துடன்—"வீணரே, நீர் இதை யேற்படுத்தக் காரணமென்ன?"

"பிரபுவே, மஹாராஜாவுக்குச் செல்வமும் பெருமையும் பெருக்வும் என் காலக்ஷேபம் இனிது நடைபெறவும்!'

"இதனால் நமக்குச் செல்வமும் புகழும் உண்டாவதெப்படி? இதை ஸ்தாபிக்க வேண்டுமென்கிற புத்தி எப்படி உமக்குண்டாயது?"

வீணன் உடனே அங்காடிக் கூடைக் காரியின் சம்பந்தமாய் நடந்த அநியாயத்தைக் கூறி — "இது கேள்வி முறையற்ற ஊர்! இங்கு எதை வேண்டுமானாலும் செய்யலாம்!' என்ற துணிவு கொண்டு இத் தொழிலைத் தொடங்கி நடத்தினேன். ஏழை ஜனங்களுடைய குறைகளைக் கேட்டு முறை செலுத்த ஒரு நியாய ஸ்தலத்தையும் ஏற்படுத்தினேன். கணக்குகளைச் சரிபார்த்துக்கொண்டு பொக்கிஷத்திற் சேமித்து வைத்திருக்கும் பொருளை எடுத்துக்கொண்டு என்னைக் கௌரவிக்க வேண்டும்" என்றான்.

அரசன் வீணனுடைய விவேகத்தையும் யுக்தியையும் அவன் நியாயம் செலுத்திய முறையையும் மெச்சிக்கொண்டான்; தன் மந்திரிகளின் மூடத்தனத்துக்காக வருத்தப்பட்டான்! அந்த க்ஷணத்திலேயே வீணனைப் பிரதான மந்திரி யாக்கினான்; அவன் தேடிய பொருளை அவனுக்கே கொடுத்தான்.

வீணன் தீர ஆலோசனை செய்து அப் பொருளைக்கொண்டு காவேரி நதியிலிருந்து ஒரு சிற்றாறு வெட்டினான். அந்த ஆற்றுக்கு வீணன் ஆறு-என்று பெயருண்டாயிற்று. நாளடைவில் அது விண்ணாறு என மருவியது. இப்போது அதை விண்ணாறு என்றும் வெண்ணாறு என்றும் சொல்கிறார்கள்.

யுக்தியும் புத்தியும் சித்தி பயக்கும்.

# தொண்டர் அடிப்பொடி யாழ்வாரின் திருப்பள்ளி யெழுச்சி

[ரா. ஸ்ரீ. தேசிகன். எம். ஏ.]

'கோயில்' என்ற பதத்தை ஆராய்கிற பொழுது, தியாகமூர்த்தியான ஒரு வேந்தன்தான் என்முன் நிற்கிறன். "நீர்க்குமிழ்போன்ற வாழ்வையுடைய எனக்குத் தெய்வவழிபாடு செய்கிறர்களே இவ் வறிவில்லாத மாந்தர்கள்? எனக்குச் செய்ய வேண்டிய மரியாதைகளை அரசர்க்கரசனை ஆண்டவனுக்குச் செய்தால், அவன் இம்மையுஞ் சாதித்து வானவர் நாட்டையுங் காட்டுவனே" என்று தன் அரச இன்பத்தைத் துறந்து, உலகம் உய்ய வழிகாட்டிய அவன் உருவம் என் அகக் கண்முன் நிற்கிறது.

"உன்னைச் சிங்காரித் தனதழகு பாராமே
என்னைச் சிங்காரித் தெழில்பார்த்தேன்
பராபரமே."

என்று அவன் மனங் கசிந்து உருகிப் பாடிய பாட்டும் என் சிந்தையில் ஒலிக்கிறது. அரசனுடைய வீடான கோயில் தெய்வம் உறைகிற இடமாய்ப் போய் விட்டது. அவனுக்குச் சேரவேண்டிய வந்தனை வழிபாடுகள் தெய்வத்திற்கு அர்ப்பணஞ் செய்யப்பட்டன.

அரசனுக்குச் செய்யவேண்டிய வழிபாடுகளில் அருணோதயத்தில் துயிலெழுப்புவது ஒரு மரியாதையாகும். காலை வருகிற பொழுது மங்கள கீதம் எழுந்து எங்கும் பரவும். காலை இளங் காற்றில் ஓர் இன்னிசைப் பாட்டு பூபாள இராகத்தில் அரண்மனையி லிருந்து மிதந்து வரும். இப்படிப் பாடி அரசனை எழுப்புகிற சம்பிரதாயம் அழிந்து போகவில்லை. இன்றும் அரண்மனையில் காணலாம்.

துயிலெழுப்புவதை ஒரு முறையில் அமைத்துப் பாடிய நூல் சங்க கால இலக்கியங்களில் கண்டது உண்டா என்று என் நண்பர் ஸ்ரீ. கி. வா. ஜகந்நாதய்யரைக் கேட்டேன். அப்படிப்பட்ட ஓர் நூலில்லை; ஆனல் புறத்துறையில் துயிலெழுப்புவதைப்பற்றி இலக்கணம் இருக்கிறதென்றும் இலக்கண மிருந்தால், இலக்கியமிருந்து அழிந்துதான் போயிருக்க வேண்டுமென்றும் அவர் பதில் அளித்தார்.

அத் துறையில் பாடப்பட்ட பாடல்கள் கால வெள்ளத்தில் பாழ்த்துப் போயினவோ என்னவோ தெரியவில்லை. துயிலெழுப்பும் சம்பிரதாயம் இராமாயணக் காலந்தொட்டு இருந்திருக்க வேண்டும் என்று விச்வாமித்திரன் இராமனை அழகிய வனத்தில் மலர்போல, காலை விரிந்த பொழுது மதுரமாய்ப்பாடி எழுப்பிய விருத்தாந்தத்தி லிருந்துநாம் அறிகிறோம்.

புராதனமாயுள்ள துயிலெழுப்பும் சம்பிரதாயத்தை ஒரு விஷயமாக முதல் முதல் வைத்துப் பாடியவர் தொண்டர் அடிப்பொடி ஆழ்வார் என்றே சொல்லி விடலாம். இவருக்குப் பிறகு திருப்பள்ளி எழுச்சி பாடியவர்கள், மாணிக்க வாசகர், இராமலிங்க சுவாமிகள், பாரதியார், ஸ்ரீரமண சந்நிதி முறை பாடிய முருகனர். இதனல் திருப்பள்ளி எழுச்சி பாடுகிற முறை அவிந்து போகவில்லை என்று நாம் அறிகிறோம்.

இவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தை வைத்துப் பாடி யிருக்கிறர்கள். காலையில் கோயிலில் காணப்படுகிற அழுத கண்ணீரை உடையவரும் தொழுத கைகளை உடையவருமான பக்த ஜனங்களின் காட்சிதான் மாணிக்க வாசகரின் உள்ளத்தைக் கவர்ந்திருக்கிறது.

"இன்னிசை வீணைய ரியாழின ரொருபால்
இருக்கொடு தோத்திர மியம்பின ரொருபால்
துன்னிய பிணைமலர்க் கையின ரொருபால்
தொழுகைய ரழுகையர் துவள்கைய ரொரு
[பால்

சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையு மாண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே."

இராமலிங்க சுவாமிகள் தன் உள்ளக் கமலம் மலர்ந்ததைப் பாடுகிறார்.

"பொழுது விடிந்த தென்னுள்ளமென் கமலம்
பூத்தது பொன்னொளி பொங்கிய தெங்கும்."

* * *

பாரதியார் வெகுநாள் துயிலில் சிறைப்பட்ட பாரத தேவியைத் தட்டி எழுப்புகிறார். சுதந்திர நாதம் எங்கும் கேட்கிறது. அன்னையே எழுந்தருளாய் என்கிறார்.

" புள்ளினம் ஆர்த்தன ; ஆர்த்தன முரசம்
பொங்கிய தெங்குஞ் சுதந்திர நாதம்
வெள்ளிய சங்கம் முழங்கின கேளாய் "

" மதலைய ரெழும்பவுந் தாய்துயில் வாயோ
குதலை மொழிக்கிரங்கா தொரு தாயோ ?
கோமகனே பெரும் பாரதர்க் கரசே "

முருகனார் பாட்டில் ரமண தேவரின்மீது தான் வைத்துள்ள பக்திரசம் ஓடுகிறது.

" எங்கு மெழுந்தன யாழொடு வீணை
யெத்திசை யோரும் வந்தீண்டினரிங்கே
கங்கணங் காத்திடக் கட்டிய திருவேங்
கடரமணா பள்ளி யெழுந்தருளாயே "

ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு ரசம் இருக்கிறது; ஒன்றையுங் குறைகூறவில்லை. ஆனால் தொண்டர் அடிப்பொடி ஆழ்வாரின் திருப்பள்ளி எழுச்சியில் காலையின் அழகும், தூய்மையும், புதுமையும் அருவி பாயப் பார்க்கிறோம். காலையின் சூழ் நிலையை மிக அழகாய்க் கொண்டு வந்திருக்கிறார் தொண்டர் அடிப்பொடி ஆழ்வார். ஆண்டாள் திருப்பாவையில் காலையில் புறக்கடைத் தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் வாய் நெகிழ்வதைப் பார்க்கிறோம் ; கீழ்வானம் வெள்ளென்று வெளிர்வதைக் காண்கிறோம் ; பொழில் வாய் கூவும் புள்ளின் ஒலியையுங் கேட்கிறோம். ஆண்டாளைப் போலவே இவ் வாழ்வாரும் நம் முன் காலையை அப்படியே எழுப்பி விட்டார். "மாக்பெத்தை" வாசிக்கிற பொழுது, ரத்தம் எங்கும் கொட்டியிருப்பதைப் பார்க்கிறோம். ரத்தந்தான் அந் நாமத்திற்குச் சூழ்நிலை. இப் பாட்டின் சூழ்நிலை காலையின் அமைதிதான். அவ் வமைதி காலையின் மணத்தினாலும், காலையின் மதுமரமான ஒலியினாலும் அதிகப்படுகிறது.

" கதிரவன் குணதிசைச் சிகரம்
[வந்தணைந்தான்
கனையிருள் அகன்றது காலையம்
[பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமல ரெல்லாம் "

* * *

என்று திருப்பள்ளி யெழுச்சி ஆரம்பிக்கிறது. கோயில் முரசொலி எழுந்து இவ் வாழ்வார் செவியில் விழுகிறது. இவரும் எழுந்து காலை வனப்புக்குத் தன் உள்ளத்தைச் சமர்ப்பணம் செய்துவிடுகிறார். உலகத்தை அளந்தஅயர்வினால் ஊழிக்காலமாய் உறங்குகின்ற அரங்கனின் உருவம் இவர் கண் முன் தோன்ற, கடல்போல ஒலி எழுந்தும் ஏன் கண் வளர்கிறாய் என்று இவர் அரங்கனை விளிக்கிறார்.

கொழுங்கொடி முல்லையி லிருந்து மனத்தைக் கவர்ந்துவருகிறது காற்று.

" கொழுங்கொடி முல்லையின் கொழுமலரணவிக்
கூர்ந்தது குணதிசை மாருதம் இதுவோ "

சுடரொளி சூழ்த்திசை யெல்லாம் பரந்து வருகிறது. நெருங்கி ஒளி வீசிய தாரகா கணங்களின் மின்னொளி சுருங்கி விழுகிறது. பனிமதி பசுக்கிறது. கமுகின் கீறின பாளைகளின் மணம் வீசுகிறது.

" சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி
படரொளி பசுத்தனன் பன்மதி இவனோ
மாயிரு ளகன்றது பைம்பொழிற் கமுகின்
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ "

எருமைகளைத் தளைகளி லிருந்து அவிழ்த்து விடுகிற ஆயர்களின் வேய்ங்குழல் ஓசையும், எருதுகளின் மணிக்குரலும், வண்டினங்களின் பண்களும், புட்களின் இன்னிசைக் குரலும் சேர்ந்து கேட்கின்றன.

மேட்டிளை மேதிகள் தளைவிடும் ஆயர்கள்
வேய்ங்குழ லோசையும் விடைமணிக் குரலும்
ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும் பினம்.........

* * *

புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி"

காலையின் மணங்களையும், ஒலிகளையும் இத் திருப்பள்ளி யெழுச்சி நம்முன் கொண்டுவருகிறது. காலின்ஸ் (Collins) எழுதின மாலைப்பாட்டைப் படிப்போர்க்கு மாலை மெள்ள வருகிற நடையை உணரலாம். காலை அடிபெயர்த்து அழகாய் வருகிற நிலையை இப் பாட்டில் நன்கு நாம் அனுபவிக்கலாம்.

இப் பாட்டிற்கு உட்பொருள் கூறுவார் உண்டு. மனமாம் மலர் அலர்ந்துவிட்டது. அதில் ஆண்டவனே தயவு செய்து துயிலெழவேண்டும் என்ற கருத்து இதில் அடங்கியிருக்கிறது என்று சிலர் வாதிப்பார்கள். விழிமின், எழுமின், உய்மின், என்ற உபநிஷத்தின் தத்துவத்தை ஒரு பாட்டாக ஆழ்வார் அலரவைத்திருக்கிறார் என்று மற்றுஞ் சிலர் புகலுவார்கள். வேதாந்த தத்துவத்தைப் பற்றி நமக்குக் கவலையில்லை. அந்தகார கர்ப்பத்திலிருந்து அவதரித்திருக்கிறது காலைக்குழந்தையின் குரல், அதன் முறுவல், அதன் ஒளி, அதன் அழகு இவைகளை யெல்லாம் பார்த்துப் பார்த்துப் பருகும்படி செய்திருக்கிறார் ஆழ்வார். அதுபோதும் நமக்கு. இத் திருப்பள்ளி யெழுச்சியைப் படிக்குந்தோறும், உதய சிருஷ்டியின் முதற் காலையின் வனப்பும் தூய்மையுந்தாம் நம்முன் விரிகின்றன.



# பழிக்குப் பழி

[கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார்]

## [1]

தம்பட்டங்களும் தாரைகளும் முழங்க, பிரதானிகளும் குதிரை வீரர்களும் புடை சூழ, வேட்டை நாய்கள் வழிகாட்ட, டில்லிச் சக்கரவர்த்தி இராஜதானியை விட்டகன்றான். 'வேட்டையாட ஒழிந்தானு? சில நாட்களுக்காவது துன்ப மொழிந்திருக்கலாம்!' என்றனர் ஜனங்கள்.

*    *    *

அன்று நாளெல்லாம் கடும் வெயிலில் திரிந்தும் ஒரு வேட்டையும் கிடைக்கவில்லை. யாவரும் வாடிய வதனத்துடன் குதிரைகள் சென்ற வழியே போய்க்கொண் டிருந்தனர். மன்னனும் அவன் பரிவாரங்களும் புஷ்பபுரத்தைக் கடக்கலாயினர். என்று மில்லாமல் மன்னன் சேனை அன்று திடீரெனத் தம் ஊரில் நுழைந்ததைக் கண்டு, புஷ்பபுர வாசிகள் நடுநடுங்கி வீடுகளிலும் புதர்களிலும் பதுங்கிக்கொண்டனர். தெருக்களில் மனித நாற்றமே இல்லை.

சந்தடியற்ற அவ்வூரின் தெரு வழியே டில்லி மன்னன் ஊழிக்காலமே உருவெடுத்தது போல, வேட்டைக் கண்களுடன் போய்க்கொண்டிருந்தான். ஒரு வீட்டு ஜன்னல் திறந்திருந்தது. அந்த ஜன்னலின் அருகே நின்றிருந்தவள் புஷ்பபுரத்து விதவை ராணி. அவள் கையில் ஐந்து வயதுக் குழந்தை.

சேனையின் கோலாகலத்தைக் கண்டு, 'அம்மா!' என்று கூவியது குழந்தை.

'பயப்படாதே, குழந்தாய்! நீ இராஜ புத்திர வம்சத்தில் பிறந்தவளல்லவா?' என்று தைரியமூட்டினுள் தாய். குழந்தையின் உதடுகளில் ஹாஸ்யத்தின் ரேகை ஓடியது.

ஜன்னலின் அருகே அழகுக் களஞ்சியம் குவிந்திருப்பதைக் கண்டான் டில்லியரசன். சேனை அவ் வீட்டையும், பின்பு அவ்வூரையும் கடந்து சென்றது.

'மேலே செல்ல எனக்கு விருப்பமில்லை. இங்கேயே கூடாரமடியுங்கள்!' என்று அரசன் கட்டளையிட்டான்.

இக் கட்டளை பிறந்த காரணத்தை யாரும் அறியவில்லை. சம்மட்டிகளின் ஓசையும் கூடாரச் சிலைகளின் படபடப் பொலியும் காதில் விழுந்தன. கூடாரங்கள் தயாராயின. இருண்ட அந்தகாரத்தில் ஒளியின் சாம்ராஜ்யம் பரவியது.

அறையில் படுத்திருந்த அரசன் தன் இதயத்தில் ஒரு புயல் வீசுவதை உணர்ந்தான். உடனே ரஜா அலியை அழைத்தான். ரஜாஅலி வருஷக்கணக்காக அரசனுடன் பழகியவன்; அவனுடைய இணை பிரியாத் தோழன்.

'இன்று நாம் இவ்வூர் வழியே வரும்போது திறந்த ஜன்னலருகில் ஓர் அழகி நின்றிருந்ததைக் கண்டேன். நீ எப்படியாவது அவளை இப்போதே இங்குக் கொண்டுவந்து நிறுத்தவேண்டும்!' என்றுன் மன்னன்.

'அப்படியே!' என்று கூறி மறைந்தான் ரஜா அலி.

மன்னன் மதுபானம் செய்து போதையில் ஆழ்ந்திருந்தான். ராணி, கையில் குழந்தையுடன் அவன் முன்னே கொண்டு வந்து நிறுத்தப்பட்டாள். அரசனின் வெறிக்கண்களைக் கண்டு அவள் நடுங்கினுள். ஒரு கணத்தில் விஷயத்தைத் தெரிந்துகொண்டாள். 'அரசே, எனக்கு ஒரு மணி நேரம் ஓய்வு கொடுக்கவேண்டும். இந்தக் குழந்தையைத் தூங்கப் பண்ணிவிட்டு வருகிறேன்' என்றுள்.

இவ்வளவு விரைவில் அவள் இணங்கியதற்கு மன்னன் மகிழ்ந்தான். 'சரி, அப்படியே செய்!' என்று கூறிவிட்டு, அவன் வேறொரு கூடாரத்துக்குச் சென்றுன்.

ராணி குழந்தைக்குத் தைரியமும் அறிவு மூட்டினுள். அந்த ஐந்து வயதுக்

குழந்தை நிலைமைக்குத் தக்கபடி நடந்து கொள்ளத் தயாராக்கப்பட்டது.

ஒரு மணி நேரம் கழிந்தது. அரசன் பேரவாவுடன் அந்த அறையில் நுழைந்தான். ராணியின் கண்கள் சூனியத்தை நோக்கின. கைகால்கள் பனிக்கட்டிபோல் 'சில்' லென்றிருந்தன. உதடுகளில் வைரப் பொறிகள் மிளிர்ந்தன. குழந்தை 'அம்மா!' என்று வீறிட்டது.

மன்னன் ரஜா அலியை அழைத்து, 'இந்தக் குழந்தை உன் எட்டு வயதுப் பெண்ணின் தோழியாக இருப்பாள்' என்றான்.

## [2]

எட்டு வருஷங்கள் கழிந்தன. ரஜா அலியின் புதல்வி ஸலீமா அப்பொழுது இணையற்ற அழகியாய் விளங்கினாள்.

ஒரு நாள் மாலை நேரம். அப்போது தான் யமுனையில் ஸ்நானம் செய்துவிட்டு வந்து, அவ் விளமங்கை சோலையில் மாலை புனைந்துகொண்டிருந்தாள். பின்னாலிருந்து யாரோ அவள் கண்களை மூடினர். 'தெரியும், யார் கண்களை மூடுவது என்பது! கையை எடு, தோழி பாதிமா!' என்றாள் அவள்.

கைகள் விலகின. ஸலீமா தன் எதிரே சக்கரவர்த்தி நிற்பதைக் கண்டாள்.

'எத்தனை நாளைக்கு என்னை இப்படி வதைப்பாய்? இன்று நம் விவகாரம் தீர்ந்து விட வேண்டும்' என்றான் அரசன்.

'ஆகா! அப்படியே செய்யலாம். ஆனால் தங்களைக் கண்டால் எனக்கு வெட்கமாக இருக்கிறது. நான் தங்கள் கண்களைத் துணியால் கட்டிவிடுகிறேன். பிறகு தாங்கள் தங்கள் ஆவலைத் தீர்த்துக்கொள்ளலாம்' என்றாள் ஸலீமா.

மன்னன் அதற்குச் சம்மதித்தான். அவன் கண்கள் கட்டப்பட்டன. 'என் அன்புள்ள ஸலீமா!' என்று கூறிக் கொண்டே, அவளைத் தழுவுவதற்கு அவன் கைகளை விரித்தான். மின்வெட்டென, அவள் கையிலிருந்த கத்தி மன்னனின் மார்பை ஊடுருவிச் சென்றது. 'ஐயோ!' என்று அலறியவண்ணம் அவன் தரையில் சாய்ந்தான்.

ஸலீமா அதே கத்தியால் தன் மார்பில் ஏதோ வரைந்தாள். பின்பு அதை மார்பில் புதைத்துக்கொண்டு விழுந்தாள்.

ஜனங்கள் ரஜா அலியின் தோட்டத்தில் இரண்டு பிணங்கள் விழுந்திருப்பதைக் கண்டனர். பிணமாய்க் கிடந்த அரசனின் கண்கள் கட்டப்பட்டிருந்தன. ஸலீமாவின் மார்பில் 'பழிக்குப் பழி' என்ற சொற்கள் ரத்தத்தினால் பொறிக்கப்பட்டிருந்தன.

யாவரும் பாதிமாவைத் தேடி அலைந்தார்கள். அவளை எங்கும் காணவில்லை.

# மூன்றாம் பிறை

[ஸ்ரீமதி அலமேலு பி. ஆர். கே. சர்மா, பெரம்பூர்]

ஆறுமுகம் இவ்வுலகில் கண்ணைத் திறந்த பொழுதே தாயை இழந்துவிட்டான். மனைவி யிறந்த சில மாதங்களுக்குப் பிறகு உலைக்களத்தை மூடிவிட்டு யாத்திரை போன கருமான் கந்தசாமி திரும்பி வரவேயில்லை. அவனைப்பற்றிப் பலர் பல விதமாய்ச் சொல்லிக்கொள்ளுகின்றனர். ஆகவே ஆறுமுகம் நினைவு தெரிந்தது முதல் வீட்டில் அத்தைக் கிழவியையும் நெசவாலையின் யந்திரங்களையுமே அறிவான்!

ஆறுமுகம் பன்னிரண்டு பிராயத்தில் ஆறணாக் கூலியில் ஆலையில் வேலைக்கமர்ந்தான். மறு பன்னிரண்டு வருஷங்கள் வரையில் அதே வேலையில் சலியாது உழைத்து வந்தான். காலை ஐந்தரை மணிக்கு ஆலையில் நுழைந்தானானால் மாலை ஐந்துமணிக்கு 'ஆலைச்சங்கு' ஊதியபிறகு தான் வெளியே வருவான். அவனுக்கும் வெளி உலகிற்கும் சம்பந்தமே இராது!

இதன் நடுவில் பகல் சாப்பாட்டிற்காக ஆறுமுகம் வெளியே வரும்போது அவனுக்காகக் கன்னியம்மை கையில் சிறு சாதமூட்டையுடன் தயாராய் நின்றுகொண்டிருப்பாள். கன்னியம்மை கொண்டுவரும் சாப்பாட்டைப் பெற்றுக்கொண்டு அவளிடம் சில நிமிஷங்கள் சிரித்துப் பேசிக்கொண்டிருந்துவிட்டு மறுபடியும் வேலைக்குச் சென்றுவிடுவான். இதுவே ஆறுமுகத்தின் தினசரி வாழ்க்கை.

கன்னியம்மையும் ஆறுமுகத்தைப் போலவே, தாய் தந்தையற்ற பெண். மாமன் வீட்டில் வளர்ந்து வருகிறாள். அவள் மாமன் அவளிடம் அன்புள்ளவர் தான் என்றாலும் அதற்காகச் செல்லங் கொடுத்துச் சோம்பேறி யாக்கிவிடமாட்டார். அவளுக்குத் தகுந்தாற்போல் ஏதாவது வேலை செய்து சம்பாதித்து வீட்டுக்கு ஒத்தாசையாய் இருப்பதுதான் அவருக் கிஷ்டம். மிகவும் கண்டிப்புப் பேர்வழி.

ஆகையால் ஏழு வயதுமுதல் கன்னியம்மை, ஆறுமுகத்திற்கும் வேறு சில தொழிலாளர்களுக்கும் கூலிக்குச் சாப்பாடு எடுத்து, மாதம் நாலைந்து ரூபாய் சம்பாதித்து வந்தாள். இப்பொழுது அவளுக்கு வயது பதினான்கு.

ஒருநாள் வழக்கம்போல் ஆறுமுகம் சாப்பாட்டிற்காகக் காத்திருந்தபொழுது கன்னியம்மை வரவில்லை. அன்றுபோக மறுநாளும் ஆறுமுகத்திற்குச் சாப்பாடு வரவில்லை. அன்று மாலை ஆறுமுகம் வேலையைவிட்டு வந்ததும், சாப்பாடு வராத காரணம் தெரிந்துகொள்ளுவதற்காகக் கன்னியம்மையின் வீட்டுக்குச் சென்றான்.

கன்னியம்மையின் மாமன் ஆறுமுகத்திடம், கன்னியம்மை 'பெரிய மனுஷி' யாகிவிட்டபடியால் அவள் இனிமேல் சாப்பாடு எடுக்கமுடியாதென்று கூறிவிட்டான். மறுநாளிலிருந்து வேறு ஆளை நியமித்துக்கொண்டான் ஆறுமுகம்.

## [2]

ஆறுமுகம் இருபத்தெட்டாவது பிராயமடைந்தபொழுது, கொஞ்சம் நல்ல தசையையும் அடைந்தான். அதாவது, ஆறணாக் கூலி வாங்கும் சாதாரணக் கூலியிலிருந்து ரூபாய் இரண்டணா கூலியுடன் மேஸ்திரி வேலை கிடைத்தது. நல்ல ஸ்திதியைக் கண்டவுடனே அவன் உள்ளத்தில் ஆசை முளைவிடத் தொடங்கியது. ஆகையால் இப்பொழுது அவன் கல்யாணம் செய்து கொள்ள விரும்பினான்!

இந்த எண்ணம் தோன்றியதும் ஆறுமுகம் தன் ஆதரவற்ற நிலைமையை எண்ணி வருந்தினான். அவனுக்காகப் பெண் பேசி மணம் முடித்துவைக்க யாரிருக்கிறார்கள்? அப்பொழுது இது

வரையில் நினைத்தறியாத பெற்றோரை நினைத்துத் துக்கித்தான். அத்தைக் கிழவி யும் இறந்து சில வருஷங்க ளாய்விட்டன. ஆகவே, அவனுக்குப் பெண் பேச அவ னைத் தவிர வேறே யாருமில்லை.

ஆறுமுகம் தன் மனத்தில் உள்ளதை வேலை செய்யும் தோழர்கள் சிலரிடம் வெளியிட்டான். அவர்கள், அவன் எண் ணத்தைப் பூர்த்தி செய்ய, நான் நீ, என்று முன் வந்தார்கள். ஆறுமுகத்திற்குப் பெண்மேல் பெண்ணாய் வந்தது.

ஆனால் ஆறுமுகத்திற்கு எந்தப் பெண் ணும் சரிப்படவில்லை. கடைசியில் அவன் மனத்தில் ஒரு யோசனை தோன்றியது. அதாவது கன்னியம்மைக்குக் கல்யாண மாகவில்லையே எதற்கும் கேட்டுப் பார்க்க லாம் என்று. ஆறுமுகம் தன் நண்பனொரு வனைக் கன்னியம்மையின் மாமனிடம் அனுப்பி வைத்தான். சங்கதி யறிந்த மாமன் மிகவும் சந்தோஷமடைந்தவனாய் "அவருக்குப் பெண் கொடுப்பதில் தடை யொன்றுமில்லை. அவரே வந்தால் நேரில் பேசி விஷயத்தை முடிவு செய்துவிட லாம்" என்று வந்த ஆளிடம் சொல்லி யனுப்பினான்.

மறுநாள் ஆறுமுகமும் அவன் நண்ப னும் கன்னியம்மையின் வீட்டுக்குச் சென் றார்கள்.

பரஸ்பர உபசாரங்கள் நடந்த பிறகு கல்யாணப் பேச்சு ஆரம்பமாயிற்று. ஆறு முகத்திற்குப் பதில் அவன் நண்பனே பேச வேண்டியிருந்தது. ஏனென்றால் வெட்கம் அவனைப் பிடுங்கித் தின்றது.

கன்னியம்மையின் மாமன் ஆறுமுகத் திடம் ஒரு நகை ஜாபிதாவைக் கொடுத் தான். அதில் காப்பு, கொலுசு, அட்டிகை, கம்மல் முதலிய ஒரு 'ஸெட்டு' நகைகளின் பெயர்கள் எழுதி யிருந்தது. அதைப் படித்தவுடன் ஆறுமுகம் பயந்துபோய் விட்டான்! பிறகு "இவ்வளவு நகைகளும் செய்துபோட என்னால் முடியாது, எது வோ ஒன்றிரண்டு நகைகள் செய்துபோட் டுக் கட்டிக்கொள்ளுவேன்" என்றான்.

ஆனால் மாமன் பிடிவாதக்காரனாகையால் அந்த ஜாபிதாவில் ஒரு நகை குறைந்தால் கூடப் பெண் கொடுக்கமுடியாது என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டான்!

கல்யாணப் பேச்சு முறிந்தது!

ஆறுமுகம் தன் தோழனிடம் "இது நமக்குச் சரிப்பட்டு வராது! போவோம் வா" என்று கூறி எழுந்திருந்தான். அப் பொழுது வளையல் சத்தம் கேட்கவே உள் பக்கமாய் நோக்கினான் ஆறுமுகம். கத வருகில் நின்றுகொண்டிருந்த கன்னியம் மையின்மேல் அவன் கண்கள் விழுந்தன. உடனே வியப்பினால் அவன் உடல் சிலிர்த் தது!

'அட! கன்னியம்மையா இவள்! பாட் டைத் தலையும் கிழிசப் பாவாடையுமாய் சோற்றுக் கூடை தூக்கிவந்த பெண்ணா இது! சேச்சே! இருக்காது.

'அரையில் ஸில்க் புடவை, வாயில் ரவிக்கை, கோணவகிடு எடுத்து அழகாகப் பின்னிவிட்ட தலை, முகத்திலே நல்ல களை!..................ஏதேது!'

ஆறுமுகம் வீட்டிற்கு வரும்போது தன் தீர்மானத்தை மாற்றிக்கொண்டுவிட்டான். அதாவது கன்னியம்மைக்காக அவள் மாமன் கேட்பதை யெல்லாம் கொடுத்து அவளையே மணம் செய்துகொள்ள வேண் டியதுதான்!—என்று.

[3]

சில வாரங்களுக்குப் பிறகு ஆறுமுகத் திற்கும் கன்னியம்மைக்கும் கல்யாணமா யிற்று. ஆறுமுகம் மனைவியை அழைத்து வந்து குடித்தனம் செய்யலானான்.

சென்னைக் கருகில் தொழிலாளர்களும் மற்றக் குடியானவர்களும் வசிக்கும் சிறு குக்கிராமத்தில் எல்லாக் குடிசைகளைக்காட் டிலும் ஆறுமுகத்தின் குடிசையே மிகவும் அழகானது. நல்ல உயரமாய்க் காற்று வாரிகள் வைத்துக் கட்டப்பட்டிருந்தது. அடிக்கடி புதிய ஓலைகளால் கூரை வேய்ந்து வருவதால் மழையோ வெயிலோ அதைத் தாக்க முடியாது. வீட்டைச் சுற்றிலும் புஷ்பச் செடிகளும் காய்கறிச் செடிகளும் செழித்து வளர்ந்து கண்களைக் கவர்ந் தன. ஆறுமுகம் குடியான வகுப்பில் பிறந்தவ னென்றாலும் உயர்ந்த வகுப்பின

ரின் நடையுடை பாவனைகள் அவனிடம் மலிந்து கிடந்தன! ஆதலால் வீடு உள்ளும் புறமும் சுத்தமாய் விளங்கியது.

மனிதன் சொற்பச் செலவில் சௌகரியம் நிறைந்த அழகான வீட்டை நிர்மாணித்துக்கொள்ள முடியும். ஆனல் அது சிலருக்குத்தானே சாத்தியமாகிறது?

கூரை வீடும் கொள்ளை ஆசையுடன் ஒரு மனைவியும் ஆறுமுகத்தின் இரு நிதிகளாய் விளங்கினர்; அவன் திருப்தியுடன் வாழ்ந்துவந்தான். ஆனல் அவன் மனத்தில் அமைதியைக் குலைத்துவந்த விஷயம் ஒன்றிருந்தது. அதாவது கடன்-அதற்கு வட்டி!

ஆறுமுகத்திற்குக் கடன் ஏற்பட்டிருக்க வேண்டிய அவசியமே யில்லை. அது அந்தப் பேராசைக்கார மாமனல் ஏற்பட்டது. கன்னியம்மைக்குப் பரிசத்திற்காக வாங்கிய கடன் ரூபாய் ஐந்நூறும் அதற்கு வட்டியும்.

வட்டி கட்டி வீட்டுச் செலவு செய்யவே அவன்சம்பாத்தியம் போதவில்லை. ஆகவே மூன்று வருஷங்களாகியும் முதலில் ஒரு பைசாக்கூட அவனல் கொடுக்கமுடியவில்லை. இது ஆறுமுகத்திற்குப் பெரிய உபத்ரவமாயிருந்தாலும் அவன் ஸந்தோஷமாகவே யிருந்தான். எப்படியாவது கஷ்டப்பட்டுக் கடனைத் தீர்த்துவிட்டால் பிறகு என்ன? சுகமா யிருக்கலாம் என்றெண்ணினன்.

இதன் நடுவில் கன்னியம்மை ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். ஆறுமுகம் தன் உயிரினும் மேலாய் அக் குழந்தையின்மேல் அன்பு வைத்தான்.

வழக்கம்போல் ஒரு நாள் ஆறுமுகம் ஆலையைவிட்டு வெளியே வரும்போது ஜனங்கள் குசுகுசு வென்று ஏதேதோ பேசிக்கொண்டனர். ஆறுமுகம் தன் தோழனெருவனிடம் விசாரித்தான். அவன் அடுத்த மாதத்திலிருந்து ஆலையில் 'ஆள் குறைப்பு' ஆரம்பிக்கப்போகிறார்கள் என்றும் அதைத் தடுப்பதற்காகத் தொழிலாளர்கள் சில தினங்களில் வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானத்திருப்பதாகவும் சொன்னன். எதிர்பாராதவிதமாய் இந்தச் செய்தியைக் கேட்ட ஆறுமுகத்திற்கு அன்றிரவு தூக்கமே வரவில்லை.

## [4]

சென்னையில் பெயர்பெற்ற நெசவாலையில் வேலை நிறுத்தம் ஆரம்பமாயிற்று. ஆறுமுகத்திற்கு இஷ்டமில்லாவிட்டாலும் மற்றவர்கள் வேண்டுகோளுக் கிணங்கித் தானும் நிற்கவேண்டியதாயிற்று. தன் தோள் வலிமையையும் ஆண்டவனையுமே நம்பிக் காலங் கழிக்கும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கஷ்டத்தைச் சகித்துக் கொண்டு கட்டுப்பாடாய் நின்றனர். ஆறு மாத காலம் சென்றது. ஆலைக் கதவு திறக்கப்படு மென்ற நம்பிக்கை குறையத் தொடங்கியது. கடைசியில் பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததுபோல் வேலை நிறுத்தத்தின் பயனய் ஆலையே மூடப்பட்டது.

பாவம்! தொழில் செய்பவர்கள் என்ன செய்ய முடியும்? ஆலையைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டனர். ஏற்கெனவே வேலையில்லாத கூட்டத்தோடு ஒரு பெரும் வேலைபோன கூட்டமும் சேர்ந்தது.

எதிர்பாராதவிதமாய் ஆலை மூடப்பட்டதும் ஆறுமுகத்தின் மனக்கோட்டையும் இடிந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் கலங்கினன். ஆலையை நம்பியல்லவோ கடன் வாங்கினன்; கல்யாணம் செய்துகொண்டான், எல்லாம் செய்தான்? ஆலை மூடப்படு மென்று கனவிலாவது நினைத்தான? ஆறுமுகத்திற்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல் இருந்தது. ஆயினும் தைரியமாய் மறுபடியும் வேலை தேடத் தொடங்கினன்.

இரண்டு வருஷங்கள் சென்றன. ஆறுமுகம் எவ்வளவோ பாடுபட்டும் அவனுக்கு வேலையொன்றும் கிடைக்கவில்லை. கன்னியம்மையின் நகைகளும் வீட்டிலிருந்த தட்டுமுட்டுச் சாமான்களுங்கூட மார்வாரி கடைக்குச் சென்றுவிட்டன. ஏற்கனவே இருந்த கடனேடு சில்லறைக் கடன்களும் சேர்ந்து ஆறுமுகத்தைத் திணறச் செய்தன.

நெருக்கடியான காலத்தில் மனிதனின் உள்ளத்தில் ஒரு துணிவு பிறக்கிறதே, அது தெய்விக சக்திபெற்றது. மனிதனின் தலைவிதியையே மாற்றி யமைக்க வல்லது. அத்தகைய துணிவு சிலநாட்களாக ஆறுமுகத்தின் நெஞ்சிலும் பிறந்துவிட்டது. ஆனால் அவன் அதை யாரிடமும் வெளியிடவில்லை.

ஒருநாளிரவு நடுநிசியில், கன்னியம்மையும், குழந்தையும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். ஆறுமுகம் மெல்ல எழுந்தான். சந்தடி செய்யாமல் கதவைத் திறந்து வெளியே வந்து நாற்புறமும் பார்த்தான். செடிகொடிக ளெல்லாம் வெயிலில் கருகிக் காய்ந்து கிடந்தன. அவன் அரும்பாடுபட்டு உண்டாக்கிய வீட்டில் முன்பிருந்த அழகு இப் பொழுதில்லை. ஆறுமுகம் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுக் கால் சென்ற வழியே நடந்தான்! இருண்ட வானத்தில் ஒன்றிரண்டு நக்ஷத்திரங்கள் சுடர்விட்டெரிந்துகொண் டிருந்தன—தரித்திர நாட்டிலும் சில பிரபுக்கள் பிரகாசிப்பதுபோல. அந்த வெளிச்சத்தில் வேகமாய் நடந்தான் ஆறுமுகம். அப்பொழுது அவன் மனைவி மக்களுக்காக விட்டுச் சென்றது ஒன்றுமில்லை; இரண்டு துளிக் கண்ணீரே!

மறுநாள் பொழுது விடியு முன்பே கன்னியம்மைக்கு விஷயம் தெரிந்துவிட்டது. புழுவாய்த் துடித்தாள் கன்னியம்மை.

## [5]

நாட்கள் ஓடி மாதங்களாய் மறைந்தன. ஆறுமுகம் திரும்பி வருவானென்று எதிர் பார்த்துப் பார்த்து ஏமாற்ற மடைந்தாள் கன்னியம்மை. அவள் துயரம் சொல்லி முடியாது. மாமனே ஆறுமுகத்தைக் கண்டுபிடிக்க எவ்வளவு முயற்சிசெய்தும் பயனில்லாமையால் அவனைப்பற்றி நினைப்பதுகூட இல்லை. ஆனால் கன்னியம்மையின் ஜீவனத்திற்கான வழியைச் சிந்திக்கலானான். அதற்காக வெகு பாடுபட்டுக் கடைசியில் கோயமுத்தூரிலுள்ள நெசவாலையொன்றில் கன்னியம்மையை வேலைக் கமர்த்தினான்.

இப்பொழுது கன்னியம்மையின் கஷ்டம் ஒருவாறு தீர்ந்ததென்றாலும் கவலையோ தீரவில்லை. ஆனால் ஓயாத உழைப்பே அதை மறைத்து வந்தது.

பத்து வருஷங்கள் பறந்து போய் விட்டன!

ஆலையில் ஒருநாள் பகல்; அன்று சம்பள தினமாகையால் வேலை நேரத்திற்கு அரை மணி முன்பே ஆலைச் சங்கு ஊதியது. உடனே தொழிலாளர்கள் யாவரும் மெஷினை நிறுத்திவிட்டுக்கூலிவாங்கத் துரிதமாய்ப் புறப்பட்டனர். அப்பொழுது சில தினங்களுக்கு முன்பே வேலைக்கு வந்த புதிய கூலியாள் ஒருவன் மெஷினை நிறுத்தும்போது அந்த வழியே செல்லும் சில பெண்களைத் தற்செயலாய்ப் பார்த்தான். ஏனோ, அவன் நினைவு தடுமாறியது? அடுத்த விநாடி அவன் வலதுகை மெஷினில் சிக்கியதும் வேரற்ற மரம்போல் கீழே சாய்ந்தான்! அதே சமயம் "ஐயோ எங்க எசமானைக்காப்பாற்றுங்க! ஓடியாங்க! ஓடியாங்க எல்லாம்!" என்றலறினவளாய்க் கன்னியம்மை ஆறுமுகத்தைத் தாங்கிக் கொண்டாள். உடனே ஆலை முழுவதும் திரண்டு அங்கே கூடிவிட்டது.

அடிபட்ட ஆறுமுகத்தை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். டாக்டர் ஆறுமுகத்தை நன்றாய்ப் பரிசோதித்துப் பார்த்த பிறகு கையில் லேசாகவே காயம் பட்டிருக்கிறதென்றும் ஒரு மாதம் கட்டுக் கட்டினால் கை சரியாகிவிடும் என்றும் கூறிய பிறகே, கன்னியம்மைக்கு உயிர் வந்தது.

அன்று மாலை வரையில் ஆறுமுகத்திற்கு மூர்ச்சை தெளியவில்லை. கன்னியம்மையும், அவள் பிள்ளையும் ஆறுமுகத்தின் அருகிலேயே இருந்தனர். நன்றாய் இருட்டும் சமயம் ஆறுமுகம் கண்ணைத் திறந்தான். எதிரே இருந்த ஜன்னலின் வழியாய், வானத்தில் தோன்றிய மூன்றாம் பிறை தெரிந்தது. ஆறுமுகம் தலையைத் தூக்கி அப் பிறையைக் கண் கொட்டாமல் பார்த்தான். அப்பொழுது கன்னியம்மை அருகில் சென்று "உடம்பு எப்படி இருக்குதுங்க" என்றாள். அமைதி

யற்ற அனேக வருஷங்களுக்குப் பிறகு ஆறுமுகம், மகனையும் மனைவியையுந் தழுவிக் கண்ணீர் விட்டான்.

துயரத்தினால் அல்ல, ஆனந்தத்தினால்! இந்தக் கதையை இதோடு முடித்துவிடுவதே நல்லது. ஏனென்றால், தொழிலாளர் வாழ்க்கையில் ஸந்தோஷ மென்பது மூன்றும் பிறைபோல் தோன்றி உடனே மறைந்துவிடக்கூடியது. ஆகையால் பத்து வருஷங்களாய் ஆறுமுகம் சிங்கப்பூரிலும் மலாய் நாட்டிலும் அனுபவித்த கஷ்டசுகங்களைப்பற்றிக் கூறுவதைவிட ஆறுமுகம் இப்பொழுது தான் இளம்பிறையைக் கண்டான் என்று கூறுவதே மேல். அதோடு நாமும் திருப்தியடைந்துவிடலாமே!


இன்ஷ்யூர் செய்யுங்கள்!

ஜூபிடர் ஜெனரல்
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களை கவனிக்கும்:
ஆயுள், மோட்டார், நெருப்பு, பஸ், டாக்ஸி, கப்பல்,
தொழிலாளர் நஷ்டஈடு, சமுத்திரம், ரெயில்வே, தபால்

பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

வாக்களிக்கப்பட்ட மூலதனம்:
ஒன்றரைக்கோடி ரூபாய்

எங்கும் ஏஜண்டுகள் தேவை

பிராஞ்சு ஆபீஸ்:
99, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

பிராஞ்சு மானேஜர்: N. வெங்கடராம அய்யர்.

# தமிழும் ஆங்கிலமும்*

[புரசு பாலகிருஷ்ணன், எம். பி., பி. எஸ்.]

உங்கள் எல்லோருக்கும் நான் என் மனமார்ந்த வந்தனத்தை முதலில் செலுத்துகிறேன். வெளியூராக இருந்தபோதிலும், நான் உங்களுடைய அழைப்பைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டேன். ஏனெனில், இங்குள்ள இலக்கிய நண்பர்களைச் சந்திக்கலாம் என்ற நோக்கந்தான். அது எனக்கு மிகுந்த உற்சாகமளித்தது.

இப்பொழுது நான் பேசப்போகும் விஷயம் "தமிழும் ஆங்கிலமும்" என்பதை நீங்கள் விளம்பரச் சீட்டுகளில் பார்த்திருப்பீர்கள். அதனால் நான் இவ்விரண்டு பாஷைகளையும் ஒப்பிட்டு, இவைகளுக்குள்ள தாரதம்மியங்களைப் பற்றிப் பேசுவேன் என்று சிலர் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் அப்படியில்லை. இப் பாஷைகளுக்குள்ள குண பேதங்கள் முதலிய ஸ்வாரஸ்யமில்லாத விஷயங்களைப் பற்றியோ, இவைகளின் ஏற்றத் தாழ்வு முதலிய சண்டைக்குரிய விஷயங்களைப் பற்றியோ நான் பேசப் போவதில்லை.

தமிழ் ஆதிமுதற்கொண்டு நம் நாட்டில் நிலவி வந்திருக்கிறது. உலகத்திலேயே ஒரு பாஷைக்கும் இரண்டாந்தரமில்லாத இலக்கிய நூல்களைப் படைத்திருக்கிறது. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு இந்த நாட்டில் ஆங்கிலம் புகுந்தது. இவ்விரண்டு பாஷைகளும் அதிக வித்தியாசமான குணங்களின் வளர்ப்புப் 'பண்ணைகள். இவைகளுக்குள்ள உறவு மாமியார் மருமகள் உறவு போன்றது. 'மாமியார் மருமகள்' உறவு என்றால், உடனே 'சண்டைசச்சரவு' என்றாகாது. அவர்களுக்குள், எலியும் பூனையும்போல் பரஸ்பர யுத்தம் இருக்கலாம். அல்லது பண்பு நிறைந்த, விசுவாசம்கூடிய, கனிந்த ஒற்றுமை இருக்கலாம். எல்லாம் அவர்கள் தங்கள் வீட்டை அமைத்துக்கொள்ளும் முறையைப் பற்றியது. ஆகவே நான் இப்பொழுது இவ்விரு பாஷைகளின் சந்திப்பின் வரலாற்றைப் பற்றியும், அதனால் ஏற்பட்ட பலன்களைப் பற்றியும், இனி ஏற்படக்கூடிய லாபங்களைப் பற்றியும் பேசப் போகிறேன்.

இரு மேன்மையான பாஷைகளின் சந்திப்பு என்றால், எவ்வளவு மகத்தான விஷயம்! அதன் பரிமாணத்தை நாம் முற்றிலும் அறிந்துகொள்ளுவது சுலபமில்லை. கங்கையும் யமுனையும் சேருவது போன்ற ஓர் ஆச்சரியம் அது. இல்லை; இந்த உபமானங்கூட இதற்குப் போதுமானதில்லை. தமிழும் ஸம்ஸ்கிருதமும் சேர்ந்ததற்கு இந்த உபமானத்தை உபயோகிக்கலாம். ஏனெனில் இவ்விரு பாஷைகளும் ஒன்றின் பக்கம் ஒன்று வளர்ந்தவை; இரண்டுக்கும் சுபாவத்திலேயே ஒரு சமான குணம் உண்டு. ஆனால் தமிழுக்கும் ஆங்கிலத்திற்குமோ வெனில், எல்லா விஷயங்களிலும் வேற்றுமைதான். ஆங்கில இலக்கியம் வளர்ந்த முறை வேறு; தமிழ் இலக்கியம் வளர்ந்த முறை வேறு. அவைகளின் நூல்—அமைப்புகள் வேறு, இலக்கிய லட்சியங்கள் வேறு; அவ் விலக்கியங்கள் சித்திரிக்கும் வழக்கங்கள், வாழ்க்கைகள் வேறு; இப்படிச் சித்திரித்து எழுதும் ஆசிரியர்களின் கலை நோக்கங்கள் எல்லாம் வேறு. இவ்விரண்டு பாஷைகளின் கலப்பைக் கங்கை—யமுனை சங்கமத்திற்கு ஒப்பிட முடியாது. அட்லான்டிக் மகா சமுத்திரமும் பஸிபிக் மகா சமுத்திரமும் ஒன்று கலந்தால் எப்படியிருக்குமோ, அப்படிப்பட்ட மகத்தான கொந்தளிப்பைஉண்டாக்கக்கூடியது இந்தச் சேர்க்கை. இது நம் கண்கள் முன்னேயே நிகழ்கிறது. இவ் வாச்சரியத்தைக் காண நாம் பாக்கியம் செய்திருக்கிறோம்.

* காரைக்குடியில் செய்த பிரஸங்கத்தின் சுருக்கம்.

நான் சற்று முன்பு சொன்னதில், இது போன்ற பாஷைக் கலப்பு தமிழ் இலக்கியச் சரித்திரத்தில் முன்பு ஒரு முறை நடந்திருக்கிறது என்ற கருத்து இருந்தது. தமிழும் ஸம்ஸ்கிருதமும் கலந்த வரலாற்றைத்தான் நான் அப்படிக் குறிப்பிட்டேன். அவ் வரலாற்றை இப்பொழுது சுருக்கமாய்க் கவனித்துப் பார்த்தால், தற்காலத்தில் நமக்கு உபயோகப்படும்படியான பல படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளலாம். "பல படிப்பினைகள்" என்று சொல்லுவானேன்? படிப்பினை ஒன்றுதான். ஆனால் அது உண்மை முழுவதையும் உள்ளடக்கியுள்ள ஒரு படிப்பினை. அந்த வரலாற்றை இப்பொழுது சற்றுக் கவனிப்போம்.

பண்டைக்கால இந்தியாவில், வடக்கே ஸம்ஸ்கிருதமும் தெற்கே தமிழும் வழங்கி வந்தன. பல நூற்றூண்டுகளாய் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல், ஒன்றையொன்று தாக்காமல், வளர்ச்சி யடைந்துவந்தன. வடக்கே இதிஹாஸ புராணங்களின் காலமும், தெற்கே மதுரைச் சங்கங்களின் காலமும் ஒன்று. சுமார் கி. மு. 1500-ல் வடக்கே மகா பாரத யுத்த வீரர்களும், தெற்கே பாண்டிய அரசர்களும் ஆண்டு வந்தனர். தொல்காப்பியம் கி. மு. முதல் நூற்றூண்டில் தோன்றிற்று.

மணிமேகலை, சிலப்பதிகாரம், திருக்குறள் இவை எல்லாம் கி. பி. மூன்றூவது நூற்றூண்டிற்குள்ளேயே தமிழகத்தில் தோன்றியவை. மேற்கூறியவைகள் தான் ஸம்ஸ்கிருதச் சின்னங்கள் அதிகமில்லாத தமிழ் நூல்கள்.

இதற்குப் பிறகு ஸம்ஸ்கிருதம் வடக்கிலிருந்துதெற்கே பரவிற்று. இரண்டு இலக்கியப் பிரவாகங்களும் ஒன்று கலந்தன. கலந்த வேகத்தில் ஜலம் குழப்பங் கண்டது. ஒரு மகத்தான கொந்தளிப்பு ஏற்பட்டது. இந்தக் கொந்தளிப்பினால் பிரவாகத்தின் ஓட்டம் நின்றுவிட்டது. கி.பி. மூன்றூவது நூற்றூண்டிற்குப் பிறகு, தமிழ் நாட்டில் மூன்று அல்லது நான்கு நூற்றூண்டுகள் இலக்கிய வறட்சி உண்டாயிற்று. தற்காலம் ஆங்கிலத்தினால் ஏற்பட்டுள்ள குழப்பம்போலத்தான். மற்றொரு ஸ்வாரஸ்யமான விஷயம் என்னவெனில், முகமதிய அரசர்கள் வட இந்தியாவை, கி. பி. 13-வது நூற்றூண்டில் ஆக்கிரமித்தபொழுது, 13, 14, 15, நூற்றூண்டுகள் வட இந்தியாவில் இலக்கிய சூனியமான காலம் ஆகும். 16-வது நூற்றூண்டில் ஜயதேவரின் கீதகோவிந்தம் முதலிய ஸம்ஸ்கிருத நூல்கள் தோன்றிய போதிலும், முகமதியரின் வருகைக்குப் பிறகு ஸம்ஸ்கிருதம் முற்றிலும் க்ஷீணதசை அடைந்துவிட்டது.

வட இந்தியாவில், பேச்சில் வழங்கும் பல பாஷைகளின் இலக்கியங்கள் அதன் பிறகு தோன்றலாயின. அதுபோலத் தமிழ் நாட்டில், ஸம்ஸ்கிருதம் தமிழைத் தாக்கியபொழுது ஏற்பட்ட குழப்பம் மூன்று நூற்றூண்டுகள்வரையில் நீடித்திருந்தது. அதன்பிறகு கி. பி. 7-வது நூற்றூண்டில் தமிழ் இலக்கியம் புத்துயிர் பெற்றது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றினர். 15, 16, 17-வது நூற்றூண்டுகளில், வட இந்தியாவில் கபீர், துகாராம், மீராபாய், நாம்தேவ், வித்யாபதி, சந்திதாஸ் முதலியவர்கள் தோன்றியதுபோல், 7, 8, 9-வது நூற்றூண்டுகளில் தமிழ் நாட்டில் அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் முதலிய நாயன்மார்களும், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், முதலிய ஆழ்வார்களும் தோன்றினர்; ஒரு புதிய கலப்பு—இலக்கியம் தமிழில் உண்டாயிற்று. மேற் கூறியவர்களின் பக்தி-கவிதைகள் எல்லாம் ஸம்ஸ்கிருதப் பாய்ச்சலினால் விளைந்த தமிழ்ப் பயிர்கள். வேதாந்தங்களைத்தான் ஆழ்வார்களும் நாயன்மார்களும் அற்புதக் கவிதைகளாக்கினர்.

"அருமறை தணிந்த பொருள்முடிவை,
இன்சொல்
அமுதொழுகு கின்ற தமிழினில் விளம்பி
யருளிய சடகோபர் சொற்பெற்(று)உயர்ந்தன
அரவணை விரும்பி அறிதுயில் அமர்ந்த
அணிதிரு அரங்கர், மணிதிகழ் முகுந்தர்
அழகிய மணவாளர் கொற்றப் புயங்களே."

மேலும் 16-வது நூற்றூண்டில் ஹிந்தியில் துளஸிதாஸரின் ராமாயணம் தோன்றியதுபோல், தமிழ் நாட்டில் 12-வது நூற்றூண்டில் கம்ப ராமாயணம் தோன்றிற்று. கம்ப ராமாயணத்தில் கலப்பு இலக்கியம் மறுபடியும் கம்பீரமான பிரவாகத்துடன் ஓடலாயிற்று.

மேற்கூறியதிலிருந்து வட இந்திய இலக்கியங்களும் தமிழ் இலக்கியங்களும் ஒரு கதியைத்தான் அநுசரித்து வளர்ந்திருக்கின்றன என்று தெரியவருகிறது. தேதி வித்தியாசங்கள் மாத்திரம் ஒரு காரணத்தினுல் ஏற்பட்டவை. அதாவது, தமிழ் ஆதியிலிருந்து ஸம்ஸ்கிருதத்துடன் கூட வளர்ந்த பாஷை; வட இந்திய பாஷைகள் ஸம்ஸ்கிருதம் இறந்த பிறகு வளர்ந்த பாஷைகள்.

இப்பொழுது ஓராயிரம் வருஷங்களுக்குமுன் நடந்த சம்பவம் மறுபடியும் நம் கண்கள் முன் நடக்கிறது. தமிழ் இலக்கியத்தில் மற்ருெரு பிரவாகம் வந்து கலக்கிறது. அதனுல் தமிழ் நாட்டில் இலக்கியச் செழிப்பு உண்டாகப் போகிறது. அதில் சற்றும் சந்தேகமில்லை. அதற்குப் பாரதியாரின் கவிதைகள் போன்ற அறிகுறிகள் எற்கனவே தென்பட்டுள்ளன. வங்காளத்தில் பாய்ந்த ஆங்கில வெள்ளத்தைத்தாகூர் முதலியவர்கள் மற்ருெரு கங்கையாகச் செய்துகொண்டுவிட்டனர். நாம்தாம் நம் தமிழ் நாட்டில் பாய்ந்த ஆங்கில வெள்ளத்தை மற்ருெரு காவேரியாகச் செய்துகொள்ளவில்லை. ஆயினும் காவேரியில் கங்கை கலக்கிறது என்ற பழைய வரலாறு ஒன்று இருக்கிறதல்லவா? அது போல நாம் தாகூரின் கவிதையான கங்கையைப் பார்த்த பிறகாவது அதை நமக்கு ஓர் உதாரணமாய் வைத்துக்கொள்வோமாக.

(தொடரும்)




நோட்டீஸ்.

மன்னர்குடி. டி. மு. கோர்ட்டு

1940ம் ௵ O. S. No. 244.

ராஜாபகதூர். G. கிருஷ்ணமாச்சாரியார், by Agent K. ரெங்காச்சாரியார் } வாதி

1. S. ராஜகோபாலய்யங்கார்
2. தருமய்யா நாட்டார் (died)
3. அம்மாக்கண்ணு அம்மாள் என்கிற பார்வதியம்மாள் } பிரதிவாதிகள்

(இறந்த D 2' S. L. R.)

இதனுல் 3ம் பிரதிவாதிக்கு தெரிவிப்பது யாதெனில் :— ஷை நம்பரில் இறந்த 2ம் பிரதிவாதிக்கு 3ம் பிரதிவாதியை வார்சாகவும், முறையே 3ம் பிரதிவாதியாகவும் ஏற்றுக்கொள்ள வேணும். 3ம் பிரதிவாதியாக சேர்த்துக்கொள்ளும் விஷயமாய்த் பிராதை திருத்த உத்திரவாகி அறிக்கை சம்மனுக்கும் ஆர்டருகி ஷை 3ம் பிரதிவாதிக்கு 5 தடவைகளில் நோட்டீசும் சம்மனும் போயும் சர்வு செய்து கொள்ளாமல் தலை மறைவாய் இருந்து வருகிறபடியால் ஷை நோட்டீசையும் சம்மனையும் ஒட்டி சர்வு செய்ய மனுக்கொடுத்து, ஒட்டி சர்வு செய்யவும் பப்ளிகேஷனுக்கும் ஆர்டராகி வருகிற **17-3-41** தேதிக்கு ஈரங்கி போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனை யிருந்தால் ஷை ஈரங்கி தினம் பகல் 10 மணிக்கு கோர்ட்டில் ஆஜராகித் தெரிவித்துக் கொள்ளலாம்.

மன்னர்குடி 28—2—41 } **V.K.** ராஜகோபால ஐயங்கார் *Pleader for Plaintiff.*

# ஸத்யமும் சூழ்ச்சியும்

[கி. சங்கரநாராயணன், பி.ஏ., பி.எல்.]

கீழூர் சிறிய கிராமம். குடிகள் அநேகமாக அந்த ஊரின் ஏகபோக மிராசுதாரின் நஞ்சை நிலங்களில் பயிரிட்டே தலைமுறை தலைமுறையாக ஜீவனம் செய்பவர்கள். கிராமத்தின் சொந்தக்காரர் மைனராக இருந்து மூன்றுவருஷத்திற்கு முந்திதான் வயதுவந்ததன்காரணமாகத் தன்கிராம நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டார். பட்டணவாசத்திலேயே பழகிவிட்டதால் கிராமத்தின் மேற்பார்வை முன்போலவே காரியஸ்தரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர் பட்டணத்தில் வசித்துக்கொண்டு அவசியமுள்ளபொழுது சில தினங்களே கிராமத்தில் தங்குவார்.

சித்திரை மாதம் கோடையின் கடுமை தாங்கமுடியாததாக இருந்தது. மிராசுதார் கொடைக்கானல் மலைக்குச் சென்றுவிட்டார். கோடையை அங்குக் கழிக்கும் பழக்கம் பட்டணவாசியானதால் அவருக்கு ஏற்பட்டிருந்தது. கிராமத்திலோ வைசூரி ஊரைச் சூறை ஆடிக்கொண்டிருந்தது. போதாக்குறைக்குப் பஞ்சம் வேறு. ஊரிலுள்ள பிரமுகர்கள் சுயநலம் கருதியோ, பயத்தினாலோ அல்லது தயையினாலேயே தானோ, சிரத்தை எடுத்துக்கொண்டு மாரியம்மன் கோயில்களில் அபிஷேகங்கள் செய்வித்தும், பாரதத்தில் விராட பர்வத்தைப் பாராயணம் செய்வித்தும் ஏழைகளுக்குக் கஞ்சி விநியோகித்தும் வைசூரியைத் தடுக்க ஊக்கமெடுத்துக்கொண்டார்கள். கிராமாதிகாரிகளும் சுகாதார இலாகாவின் உதவியால் ஊரில் யாவருக்கும் அம்மை குத்திப் பாதுகாப்புக்கு வேண்டிய முயற்சிகளைச் செய்தனர். ஆனால் இவைகளெல்லாம் ஊரில் வைசூரி அதிகமாகப் பரவிய பின்னரே நடந்தன.

வைசூரி ஊரில் தோன்றிய சில தினங்களிலேயே முனியன் வீட்டில் அம்மன் புகுந்து விளையாட ஆரம்பித்துவிட்டாள். முனியனின் இளம் மனைவி இறந்து கிடக்கின்றாள். அவள் கைக்குழந்தையும் உயிர் போகும் தறுவாயிலிருக்கிறது. முனியனுக்கும் வைசூரி காணுவதன் அறிகுறியாக ஜ்வரம் அடித்துக்கொண்டிருக்கிறது. முனியனின் கிழத் தகப்பனும் மூன்று நான்கு வயதுள்ள மூத்த மகனுமே அந்தத் தொத்துவியாதிக்குத் தப்பி இருந்தனர். கிழவன் பேரனை மடியில் போட்டுக்கொண்டு கண்ணும் கண்ணீருமாய் வெளித் திண்ணையில் உட்கார்ந்திருக்கிறான். தாயை முனியன் சிறு வயதிலேயே இழந்துவிட்டான்.

தெய்வ வசமாக முனியன் உயிர் தப்பினான். தள்ளாத தகப்பனுக்கும் சிறு குழந்தைக்கும் உணவு தேடிக்கொண்டு வந்து கொடுக்கும் பொறுப்பு அவனுடையதே. வேலை கிடைத்தாலல்லவோ சம்பாதித்து வரலாம்? அண்டை அயல்வீட்டார்களும் கேழ்வரகு கூழும் முடிந்தவரை கொடுத்து உதவினபோதிலும் அவர்களும் அதே சங்கடமான நிலைமையிலிருந்தார்கள். அவர்களுக்கே யாராகிலும் உதவி செய்யவேண்டிய ஸ்திதியாக இருந்தது. பௌர்ணமி நிலவில் முனியனும் அவன் தகப்பனும் உட்கார்ந்திருந்தனர்.

“குழந்தை எசமான் ஊரிலே இருந்திச்சின்னா அதுகிட்டே போய் முறையிடலாம்; முறையிட்டாலும் வீண் போவாது. இங்கே இருக்கிற காரியஸ்தருங்க கிட்ட போய்ச் சொல்லிக்கிட்டா காதிலேகூடப் போட்டுக்கமாட்டாவ. எசமான் எப்போ வருவார்களோ” என்று கிழவன் பெருமூச்செறிந்தான்.

நாட்கள் ஓடி மறைந்தன. அமாவாசையும் நெருங்கிற்று. வைசூரியால் தாக்கப்பட்டு மிகவும் மெலிந்து கிடந்த முனியனை வேலைக்கு யாரும் சேர்த்துக்கொள்ளவில்லை. காரியஸ்தரோ “உடம்பை நல்லா சௌகரியம் பண்ணிக்கொண்டு வேலைக்கு வாடா! உன்னால் இப்பொழுது என்ன

வேலை செய்யமுடியும்? போ" என்று அனுப்பிவிட்டார். முனியன் பட்டினியாகவே அந்தியில் குடிசையை நோக்கி நடந்தான். வழியில் மாரியம்மன் கோயிலில் வெள்ளிக்கிழமை அபிஷேகம் செய்து கஞ்சி காய்ச்சி ஏழைகளுக்குக் கொடுத்துக்கொண் டிருந்தனர். முனியன் கஞ்சியைக் கொஞ்சம் ஒரு சட்டியில் வாங்கிக் கொண்டு போய்க் கிழவனுக்கும் குழந்தைக்கும் கொடுத்துவிட்டுத் தானும் கொஞ்சம் சாப்பிட்டான்.

"அப்பா, காலையில் எப்படியாவது வயிறாரச்சாப்பிட அரிசிச் சோற்றுக்கு ஏற்பாடு செய்கிறேன். கவலைப்படாமல் தூங்கு" என்றான் முனியன்.

"முனியா! அரிச்சோறு? எங்கிட்டிருந்தடாப்பா வரப்போவுது?"

"ஒருத்தன் நெல்லு தாரேன்னு சொல்லி இருக்கிறான் அப்பா."

"என்னடா குழந்தை! கேலியா பண்ணுகிறாய். இந்தப் பஞ்சத்தில் எவண்டா கொடுப்பான்? என்னமோ கடவுள் ஒன்று இருக்கு. நம்ம செல்லியாயி வழிவிடாமலா போய்விடுவாள். செல்லியாயியைத் தொழுதுவிட்டுத் தூங்கடா அப்பா. செல்லி ஆயியை மட்டும் என்றும் மறவாதே. நம்ம குலத்திலே திருட்டு புரட்டு பொய் முதலான்னது ஒன்று மில்லாமல் பெயரெடுத்து வந்திருக்கிறோம். அந்தப் பேருக்கு அழுக்கு வராமல் நடந்துகொள்ளணும் அப்பா" என்று மேலும் பேசிக்கொண்டே நித்திரை வசமானான். கிழவன் அடிக்கடி தன் மக்களுக்கும் பிறருக்கும் நீதி உபதேசங்கள் செய்வதுண்டு. பட்டினியாகக் கிடந்து கஞ்சி குடித்த அசதியினால் சீக்கிரமே கிழவனும் பேரனும் உறங்கிவிட்டனர்.

பொழுது விடிய நான்கு நாழிகை நேரமிருக்கலாம். ஏதோ சத்தம் கேட்டுக் கிழவனுக்கு விழிப்புக் கொடுத்தது. "முனியா" என்று கூவினான். பதிலில்லை. இன்னுமொரு குரல் கூப்பிட்டான். நிச்சப்தம். முனியன் பாய் காலியாக இருந்தது. எங்கோ நாய் குலைக்கும் சப்தம் கேட்டது. சந்தடி செய்யாமல் எழுந்து தெருவில் நின்று பார்த்தான். தேய்பிறைச் சந்திரன் வெளிச்சத்தில் பண்ணைக் கருகிலிருக்கும் தோப்பை நோக்கி ஒருருவம், ஏன்? முனியனின் உருவம்தான்! மெதுவாகச் சென்றுகொண் டிருந்தது. கிழவன் மனத்தில் விபரீதமான சந்தேகம் உதித்தது. திடுக்கிட்டான். முனியனை ஸத்யம் தவராமல் நல்ல வழியிலேயே வளர்த்திருந்தான். முனியன் நெறி தவறமாட்டானென்று திடமான நம்பிக்கை கொண்டவன் கிழவன். தன் உன்னத தசையிலும் இப்பொழுது இருக்கும் ஈனஸ்திதியிலும்கூட கிழவன் ஒருபொழுதும் ஸத்யத்தையும் சன்மார்க்கத்தையும் கைவிட்டறியான். நீதி நெறிகளை அவன் பிறருக்கு உபதேசிப்பது மாத்திரமல்லாமல் தானே அநுபவத்திலும் கை யாளுபவன்.

கண்ட காட்சி கிழவனைக் கலக்கமுறச் செய்துவிட்டது. கொஞ்ச நேரம் ஆனபின் முனியன் ஒரு சிறிய மூட்டையைக் கொண்டுவந்து குடிசையின் எதிரிலிருந்த வைக்கோற் போரின்கீழ் இறக்கி வைக்கோலால் மூடி வைத்தான். கிழவன் சஞ்சலத்துடன் பேசாமல் பாயில் படுத்துக் கண்களை மூடிக்கொண்டான். சற்று நேரமான பின் முனியனும் வந்து தன் பாயில் படுத்துக்கொண்டான். கோழி கூவும் நேரத்திற்கு முனியன் தூக்கத்திலிருந்து எழுந்திருப்பதுபோல் எழுந்திருந்தான். கிழவனைக் கூப்பிட்டு "அப்பா இன்று அரிசிச் சோற்றுக்காக நெல்லு எடுத்து வருகிறேன்" என்றான்.

"எந்த மவராசண்டா கொடுக்கப்போகிறான்?"

"எல்லாம் தானே தெரியும் அப்பா! போய்வரேன்," என்று திண்ணையை விட்டு இறங்கப் போனான்.

"சரி! முனியா, அதிருக்கட்டும் இரவிலே எங்கே போயிருந்தாய்?

"எங்கேயுமில்லே அப்பா," என்று சொல்லிவிட்டு அலக்ஷியமாக மேலே நடக்க முயற்சித்தான்.

"முனியா! போகாதே உனக்கு யார் நெல்லு கொடுக்கிறவன்? அதைச் சொல்."

"அதான் ஒரு ஆளு கொடுக்கி......"

"என்னடா ஆளு! திருட்டு நெல்தா னெடா?" என்று சொல்லிக்கொண்டே கிழவன் ஆத்திரத்துடன் எழுந்து மகனி டம் சென்றான். முனியன் ஒன்றும் விளங் காமல் பிரமித்துப் பேசாதிருந்தான். "முனியா என் நிமித்தம் என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? விதியில்லாவிட் டால் மூவரும் சேர்ந்து பிச்சை எடுத்துக் கஞ்சி குடித்தால் போகிறது. நெல் மூட் டையை வைக்கோல் போரில்........"

பின்புறமாகக் காரியஸ்தரும் ஷண்முகம் பிள்ளையும் ஒரு போலீஸ் சேவகனும் வந்துகொண்டிருந்ததைக் கிழவன் பார்க்க வில்லை.

"என்னடா எலே போரிலே?" என்று காரியஸ்தர் கேட்டுக்கொண்டே வந்து விட்டார்.

நெல் மூட்டையும் கைப்பற்றப் பட்டது. முனியனும் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகப்பட்டான்.

பழைய மிராசுதார் காலத்தில் ஊரில் எந்தக் குற்றம் நடந்தாலும் ஊர் பஞ்சா யத்துக்காரர்களை வைத்துக்கொண்டு மிரா சுதாரே விசாரித்து ஏதாவது ஒரு ஒழுங்கு செய்துவிடுவார். எல்லோரும் ஒரு வீட் டுக் குழந்தைகளைப்போல் நடத்தப்படு வார்கள். எந்தவிதமான சச்சரவும் மிராசுதார் வரையில்கூட வராமல் ஊரி லேயே தீர்ந்து அடங்கிவிடும். இப்பொ ழுதோ மிராசுதார் ஊரிலிருந்தால் தானே! மேலும் பஞ்சாயத்துக்காரர்களும் பல வேறு காரணங்களால் ஒற்றுமை யிழந்து ஒருவருக்கொருவர் பொறாமை யினாலும் துவேஷத்தினாலும் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்யாமலிருந் தார்கள். ஊரே சீர்கேடான நிலைமையி லிருந்தது. சூழ்ச்சிகள் பலமாக நடந்தன. எவ்வளவு சின்ன விஷயமாக இருந்தாலும் ஊரில் கொஞ்சம் தலையாட்டியாகவிருந்த ஷண்முகம் பிள்ளையின் விஷமத்தினால் உடனே ஒரு போலீஸ் சேவகன் வந்து விசாரிக்கும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.

குடிகளும் பக்ஷபாதம் நிறைந்த பஞ்சா யத்தில் நியாயம் தீர்த்துக்கொள்வதை விட ராஜாங்க நியாய ஸ்தலங்களிலேயே கோருவதை மேலாகக் கருதினர். பஞ்சா யத்துக்காரர்கள் பிறர் வழக்குகள் மூலம் தாங்கள் சம்பாதிப்பதிலேயே கருத்து ள்ளவர்களாக இருந்தார்கள். ஐவருக்கும் வாய்க்கரிசி போட்டு நியாயம் சம்பாதித் துக்கொள்ள எந்த ஏழைக் குடிக்குத்தான் முடியும்? எதிர்பார்த்த காணிக்கை கைக்கு வராவிட்டால் பஞ்சாயத்துக்காரர்கள் பக்ஷ பாத மில்லாமல் இரு தரப்பிலும் குற்றம் கற்பித்து ரூ. 25 அல்லது ரூ. 50 என்று செலுத்தச் சக்தி இருக்கிறதா என்றுகூட யோசிக்காமல் அபராதம் விதித்து வசூ லித்தும் விடுவார்கள். கொடுக்கச் சக்தி இல்லாவிட்டாலோ அவர்களை ஊரிலே விலக்கி வைத்து ஹிம்ஸை செய்வார்கள். வசூலாகும் பணத்தைக் கோவில் கட்டுவ தற்காகச் சேர்ப்பதாகச் சொல்லிக்கொள் வார்கள். பணமோ கண்டபடி பிரயாணச் செலவுகளிலும் இட்டலி காபி வகையறாக் களிலுமே செலவழியும்.

முனியன் தகப்பன் பழைய முறைப் பஞ் சாயத்தில் அநேக காலம் தலைமை வகித்த வன். ஷண்முகம் பிள்ளை புது நீதி பஞ் சாயத்தின் தலைவன். பாக்கி நான்கு பஞ் சாயத்துக்காரர்களும் ஷண்முகம் கிழின் கோட்டைத் தாண்டாத கை யாள்கள். பழைய முறைகளும் அதன் பிரதிநிதி யான கிழவனும் ஷண்முகம் பிள்ளை யின் மனத்திற்குக் கசப்பாகவே யிருந்த னர். இப்பொழுது ஷண்முகம் பிள்ளைக் குத் தன் முறைகளைக் கை யாள ஸந்தர்ப் பம் கிடைத்தது. முனியன் தடயத்துடன் கையும் களவுமாக அகப்பட்டான். கிழ வன் தான் செய்துவந்த தர்மோபதேசங் களை அநுசரிப்பானா அல்லது முனியனைத் தப்ப வைப்பதற்காகப் பொய்ச் சாக்ஷி சொல்வானோ? ஊரில் அக்கிரகாரத்தில் கிழவன் பழகாத வீடில்லை. சமாரான தனவந்தர்கள் கிழவன் தனக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லி மகனைத் தப்ப வைப்பா னென்றே எதிர்பார்த்தனர். கிழ வனை நன்கறிந்த ஊர்க்குடிகளோ கிழவன் ஸத்யம் தவறமாட்டான் என்று நிச்சய மாக நம்பி இருந்தார்கள்.

முனியன் விசாரணைக்காக ஸ்டேஷனில் அடைபட்டிருந்தான். பேரனை அண்டை வீட்டில் அடைக்கலம் வைத்து விட்டுக் கிழவனும் என்ன நடக்குமோ என்று போலீஸ் ஸ்டேஷனிலேயே காத்துக்கிடந்தான். ஷண்முகம் பிள்ளையும் கிழவனை அணுகி "நூறு ரூபாய் கொடு. பணம் இல்லாவிட்டால் உன் மனைக்கட்டை என் பேருக்குப் பந்தகமாக எழுதிக் கொடு. வேண்டிய செலவை நான் செய்து முனியனை விடுதலை அடையும்படி செய்து விடுகிறேன்" என்று கூறித் திரும்பித் திரும்பிக் கிழவனை வற்புறுத்தினன்; ஆனல் ஒன்றும் பலிக்கவில்லை. கிழவன் ஒரே மௌனமாக இருந்தான். யார் எது கேட்டாலும் பதில் சொல்லவில்லை. இறுதியில் வழக்கும் ஜோடனையாகி விசாரணைக்கு வந்தது. கிழவனின் ஸத்யாக் கிரஹம் உண்மையானதா இல்லையா என்பதே வழக்கின் முக்கிய அம்சமாக ஆகிவிட்டது.

* * *

ஷண்முகம் பிள்ளைக்கு கிழவனின் ஸத்யத்திலிருந்த நம்பிக்கையின் காரணமாக அரசாங்கத்தின் தரப்பில் முக்கிய சாக்ஷியாகக் கிழவனே தேர்ந்தெடுக்கப்பட்டான். நீதிபதிமுதல் கூடியிருந்த ஏராளமான பொதுமக்கள்வரையில் யாவருக்கும் இந்த வழக்கில் விசேஷமான அக்கரை உண்டாயிற்று. ஒரு கட்டிடத்தில் கன்னம் வைத்துத் தான்யம் திருடினதாக குற்றப் பத்திரிகை படிக்கப்பட்டது. "குற்றவாளியா இல்லையா?" என்ற கேள்வியும் வழக்கம் போல் கேட்கப்பட்டது. "குற்றவாளி அல்ல!' என்ற அழுத்தமான பதில் முனியனிடமிருந்துவந்தது. முனியனின் தகப்பனே சாக்ஷிக் கூண்டில் ஏற்றப்பட்டான். பிரமாணமும் செய்விக்கப்பட்டான்.

ஸர்க்கார் வக்கீல்:—கிழவனுரே! இதோ கூண்டில் நிற்கும் எதிரியை நீர் அறிவீரா?

கிழவன் :—நன்ருக அறிவேன், அவன் என் மகனே.

ஸ. வ. :—போன ஏகாதசியன்று ராத்திரி எதிரி வீட்டிலிருந்தானு?

கிழ :—விடிய நான்கு நாழிகை வரையிலிருந்தான்.

ஸ. வ. :—பிறகு?

கிழ :—கோழி கூவும் நேரம் வரையில் வீட்டிலில்லை.

ஸ. வ. :—எங்கிருந்தான் என்று சொல்ல முடியுமா?

கிழ :—(பதிலில்லை).

ஸ. வ. :—(உரத்த குரலில்) அவன் எங்கிருந்தான்?

கிழ :—(மௌனம்)

நீதிபதி :—உண்மையைச் சொல்வதாகப் பிரமாணம் செய்திருக்கிறீர். தெரிந்தால் சொல்லும். இல்லாவிட்டால் தெரியாது என்று சொல்லிவிடுமே!

அங்கிருந்தவர்கள் அனைவரும் நிச்சப்தமாகக் கிழவன் என்ன சொல்வானே என்று எதிர்பார்த்திருந்தனர்.

கிழவன் —"முனியா! உன் தலையில் கல்லைத் தூக்கிப்போடக் கிழத்தகப்பனு வேண்டும்?" என்று கண்ணீருடன் தயங்கினன்.

முனியன் :—என் அப்பன் நியாயம் எதுவோ அதையே சொல்வார்.

நீதிபதிக்கு நடந்தவை ஆங்கிலத்தில் சொல்லப்பட்டதும் அவரும் முனியனைத் திருப்தியுடன் நோக்கினர். பின் கிழவனைப் பார்த்து முன் கேள்விக்குப் பதில் என்ன என்று கேட்டார்.

கிழவன் :—கிழக்கே வெளுக்குமுன் முனியன் ஒருசாக்குடன் தோப்பிலிருந்து வந்து அதை வைக்கோல் போரடியில் இறக்கி வைக்கோலால் மூடிவைத்தான்.

ஸ. வ. :—"இதுதான் கேஸ் துரையே" என்று உட்கார்ந்தார். ஜூரிகள் ஒருவரிடம் ஒருவர் ஏதோ பேசிக்கொண்டனர். நீதிபதி எதிரி தரப்பில் சாக்ஷியங்களுண்டா என்று கேட்டார்.

முனியன் :—தெய்வந்தான் சாக்ஷி. நான் திருடவில்லை.

நீதிபதி :—ஜூரர்களே! எதிரி இந்த நெல்லைத் திருடி இருக்கலாம் என்று உங்கள் மனச்சாக்ஷிக்குத் தோன்றலாம். எதிரி மேல் சாற்றப்பட்ட குற்றமோ ஒரு கட்டிடத்தில் கன்னம் வைத்து நுழைந்து

தானியங்களைக் களவாடினதாகச் சாக்ஷியும் ருசுவாகி இருக்கிறது என்ன? கிழவன் அணுவளவும் பின்வாங்காமல் அவனுக்குத் தெரிந்தவரையில் ஒளிக்காமல் சாக்ஷி கூறி இருக்கிறான். கிழவனின் மேன்மைக் குணம்பற்றி நாம் யாவரும் பாராட்டிப் பின்பற்றத்தக்கது. அவன் தன் சொந்த மகன் என்று தாக்ஷண்யம் காட்டவேயில்லை. இருந்தாலும் குற்றத்தை நீதிஸ்தலத்தில் ருசுப்படுத்த இந்த சாக்ஷி போதுமா? சட்டம் என்னவென்றால் குற்றவாளி சந்தேக மில்லாமல் குற்றஞ் செய்ததாக ரூபிக்கப்பட வேண்டும். அப்படி ஏதாவது கொஞ்சம் சந்தேகத்திற்கு ஆஸ்பத மிருந்தாலும் அந்த ஆதாயம் குற்றவாளிக்கே உரியது. ஆகையால் எதிரி குற்றவாளி அல்ல என்று தீர்ப்புச்சொல்ல நீங்கள் சந்தோஷ முடையவர்களாகவே இருப்பீர்கள்..........”

* * *

வேகமாக நியாயஸ்தலத்தின் வாயிலில் ஒரு புழுதிபடிந்த மோட்டார் வந்து நின்றது. மிராசுதாரர் வண்டியினின்றும் குதித்து மேல்மூச்சு வாங்க ஓடிவந்தார். நாக் குளற “பிரபுவே, என்னை மன்னிக்க வேண்டும். இந்த வழக்கு என் பேரால் தொடரப்பட்டிருப்பதைக் குறித்து மிகவும் வருத்தப்படுகிறேன். நான் ஊரிலில்லாததால் தகவல்ஒன்றுமே தெரியாது. என்னைக் கலக்காமல் என் காரியஸ்தர் இந்த வழக்கை ஆரம்பித்திருக்கிறார். தயைபுரிந்து வழக்கைத் தள்ளுபடிசெய்து எதிரியை விடுதலை செய்யுமாறு பிரார்த்திக்கிறேன். இன்று விசாரணை என்று தெரிந்தவுடன் நேராக மோட்டாரிலேயே வந்து சேர்ந்துவிட்டேன். எதிரியை உடனே விடுதலை செய்ய உத்தரவாக வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். நீதிபதியும் ஸந்தோஷமாக எதிரியை விடுதலை செய்தார். முனியனும் கிழவனும் ஆனந்தக் கண்ணீர் விட்டனர். கூடி இருந்த ஜனங்கள் ஜே! ஜே! கோஷங்களுடன் கிழவனையும் முனியனையும் மிராசுதாருடன் சேர்த்து ஊருக்கு அழைத்துச் சென்றனர்.

* * *

இவைகளெல்லாம் முடிந்து அமளி அடங்கிய பிறகு ஒரு நாள் “குழந்தை எசமான்” கிழவனையும் முனியனையும் கூப்பிட்டு அரச மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு நிதானமாகத் திருட்டைப்பற்றி விசாரிக்கலானார். அது ஒரு மர்மமாக இருந்தது. அதைத் தெரிந்துகொள்ள அவர் அவாவுடனிருந்தார். ஷண்முகம் பிள்ளையின் சூழ்ச்சியால் ஏற்பட்ட விபரீதம் என்று விளக்கமாயிற்று.

ஷண்முகம் பிள்ளை, முனியனின் நிலைமையைக் கண்டு ஆடு நனைகிறதே என்று வருந்தும் ஓநாய்க்கு ஒப்ப அவனைத் தனியாக அழைத்து மிகவும் இரக்கம் காட்டி அவனுக்கு அன்றிரவு கலம்நெல் கடனாகக் கொடுப்பதாகச் சொல்லி பின்னிருந்து காரியஸ்தர் போலீஸ் முதலியவர்களையும் எச்சரித்தான். ஷண்முகம் தான் நெல் கொடுப்பது தெரிந்தால் மற்ற குடிகளும் அவனை கொடுக்கும்படி தொந்தரவு செய்வார்கள் என்று சொல்லித் தோப்பில் இரகசியமாகக் கொடுப்பதாக ஏற்பாடு செய்திருந்தான். ஷண்முகத்தின் எண்ணமோ முனியன் மனைவியைத் தான் அபகரித்துக் கொள்ளவேண்டு மென்பதே. பேதை முனியன் சூழ்ச்சிகள் தெரியாமல் வலையில் சிக்கினான்.

மிராசுதாரர் இந்த ஷண்முகம் பயலுக்குத் தக்க புத்தி கற்பிக்கவேண்டும் என்று வேகம் கொண்டார். கிழவன் “எசமான் வீணாக ஏன் அலட்டிக்கொள்ள வேணும். அவனவன் தீங்குக்குத் தக்க தண்டனை நம்ம செல்லியாயி பார்த்து விதிக்காமல் விடமாட்டாள். நாம் ஒன்றும் செய்யவேண்டாம்” என்று மிகவும் சாந்தமாகச் சொன்னான். மகன்மேல் வீண் ஸந்தேகங்கொண்டு ஸந்தர்ப்பத்தைக் கண்டு தவறாக நம்பினதற்காகக் கிழவன் மிகவும் வருந்தினான். அது முதல் “குழந்தை எசமானும்” கிராமத்திலேயே தங்கி எல்லாக் காரியங்களையும் நேரில் பொறுப்புடனே கவனிக்க ஆரம்பித்தார். குடிகளும் குறையின்றி வசித்தனர்.

# வினதா

[ஸ்ரீமதி ரா. பங்கஜம், ஸ்ரீரங்கம்]

வினதைக்கு இருபது வயதுதான். ஆனால் அவள் உடல் ஒடிந்துவிழும் ஓர் பட்டுப்போன குச்சி போன்றிருந்தது. அது அற்றுவிழும் காலத்தைத்தான் அவள் எதிர்பார்த்திருந்தாள். அவள் வேண்டி நிற்பதை மட்டும் அவள் பெற்று விட்டால்....'புகை' சூழ்ந்த அவளுடைய கண் ஒளிபெற்று நிற்கும்.

பன்னிரண்டு வயதில் வினதாவைக் கண்டவர்கள் அவள் அழகை ஐந்து நிமிஷமாவது அள்ளிப் பருகித்தான் செல்வார்கள். இளம் வாழைத் தண்டெனக் கால்களும் இடுப்புவரை தொங்கும் எழில்மிகு கூந்தலும், அதில் முத்து ஜடைபில்லையும் இடையில் துவளும் பசும்பொன் ஒட்டியாணமும், மைப்படிந்த மிரண்டகண்களும் முத்துப்போன்ற வெண்மையான பற்களையுமுடைய வினதா அழகுத் தெய்வமென விளங்கினாள். இயற்கையாகவே சுருண்டு அடர்ந்திருந்த அவள் கூந்தல் அவள் அழகை இன்னும் அதிகப்படுத்தியது. வலம்புரிச் சங்கு போன்ற காதில் முத்துக் குண்டலம் ஆட வாசனைச் சாந்துடன் கூடிய களங்கமற்ற அவள் முகம் வருத்த முற்றோர் மனத்தையும் களிப்படையச் செய்யும்.

ஊருக்கு ஓரே பள்ளிதான். அதில் தான் அவளும் படித்து வந்தாள். ஆண் மக்கள் நேசம்தான் அவளுக்கு அதிகம். அத்தனை பேரும் ஆடத் துவக்கும்போது இவளும் கலந்து கொள்வாள். பலீஞ் சடுகுடு ஆட்டம் ஆடினால், எத்தனை நாழிகை வேண்டுமானாலும் மூச்சைக் கட்டுவாள் வினதா. அவளை ஏய்த்துவிட அவர்களில் ஒருவராலும் முடியாது. அவர்களுக்குப் பொறாமைகூட வரும். அதை வெளியிட ஒருவனுக்கும் தைரியம் கிடையாது. மறு தினம் முதல் அவளுடன் பேச முடியாதே!

உபாத்தியாயர் முன்னிலையில் ஒட்டப் பந்தயம் வைத்தால் முதல் 'ப்ரைஸ்' வினதாவினுடையது தான். அடுத்தபடி அந்த 'ஒல்லி' ராமுவுக்குத்தான். அவன் அங்கத்தில் அவனுக்கழகு அளித்தது அவன் கண்ணும் பல்லும்தான். அவன் மட்டும் அவளை எப்பொழுதும் பரிகசிப்பான். அவன் ஒருவன் மட்டும் சும்மா அவளைச் 'சிட்டுக் குருவி'...என்பான். அது அவனுக்கு மட்டும் உரிமை.

சடு, குடு, ஆட்டத்தில் பொம்மனாட்டிடா! விட்டுக்குடுடா! என்று எவனாவது சொல்லிவிட்டால் இவள் முகம், குங்குமமாகிவிடும். "பொம்மனாட்டின்னு — பேடின்னு நினைச்சங்களோ? நீங்க சூரப் புலியாக்கும். நீங்க தழைஞ்சுவிட்டுக் குடுக்கவாண்டாம். முடியலேன்னு சொல்லிக்கோங்கோ. ஆள்களைப் பாரு குண்டோதரன் மாதிரி! அரை அடி நடக்கச்சேயே அசந்து போரான்கள். அறுபது அடி ஒரே தம் கட்டரேன். அலண்டு போரான்கள். தோல்வின்னு ஒப்புக்கரேன் நான். வெக்கமா? விட்டுக்குடுக்க ஒங்களை வேண்டலே" என்று வினதா அவர்களுடன் சண்டையிடுவாள்.

"சிட்டுக் குருவி.....'என்ன க்ரிச்'சுங்கரே!—இத்தனை பேரையும் அடக்கணும். ஆசைதானே ஒனக்கு? இத்தனை ஆண் பிள்ளைகளுக்கும், இந்த ஒரு பொண்ணை ஜயிக்க முடியலே!.....இது ஒனக்கு சந்தோஷமாக்கும்! எங்க கக்ஷி தோல்வி! இப்போ சரியா?"

"இல்லே, இல்லே, ராமு. வாண்டாம், நீங்களே கெலிச்சவா, என்னமோ விளையாட்டுத்தானே.....யார் கெலிச்சா என்ன? கோவிச்சுக்காதே அப்பா!"

"நேக்கு என்ன கோவம்! நீ...கெட்டிக்காரின்னு பெருமைதான்."

"சீ ராமு, இப்படி யெல்லாம் சொல்லாதே யப்பா. நாளையிலிருந்து விட்டுக் கொடுத்துடரேன்!"

ஒவ்வொரு தினமும் இப்படித்தான் ஆட்ட முடிவில் சம்பாஷணைகள். ஆடத் துவக்கு முன் விட்டுக் கொடுக்கணும் என்னும் எண்ணம். ஆனல் ஆட்ட வேகம் அதை யெல்லாம் தள்ளிவிடும்.

"நாளை முதல் வினதாவுடன் ஒன்றும் ஆடவேண்டாம்" என்பான் ராமு. எல்லோரும் கை தட்டுவார்கள்.

"ஆஹா! பேஷாய்" என்பாள் வினதா கேலியாக.

மறுதினம் அந்த உறுதி ஒருவனிடமும் கிடையாது. முதல் முதல் சொன்ன ராமு தான் ஓடுவான் வினதாவிடம். அவன் வருகை கண்டு முகத்தைப் பெரிதாக்கிக் கொள்வாள் வினதா. கோபமாம் அது.

"வினதா, வினதா, வாயேன் விளையாட. 'பாய்ஸ்' எல்லாம் காத்திருக்கான்கள். பதில் பேசமாட்டாயா? வினதா கோவமா? என் மேலேயா? இங்கே பார், மாட்டாய்? நான் போகட்..டு...மா?

"போயேன்...போ. நான் எதுக்கு? நான் இல்லாட்டா விளையாடத் தெரியாதா என்ன? அத்தினை 'பாய்ஸ்' களுக்கெதிரில் அப்படி எல்லாம் பேசரது. பின்னெ மறுபடியும் வந்து கெஞ்சரது. அவங்க கேலி பண்ண மாட்டான்களாக்கும்?"

"அய்யே அடடா, வினதா கோவிச்சுண்டுடாதே. எவன் கேலிபண்ணுவன் நம்மை? கேலி பண்ணிட்டு இந்தப் பள்ளிக்கூடத்தில் இருப்பான்களா?"

"அடேயப்பா! ஊம். ஆளைப்பாத்தாலே அடிச்சுடுவே அஞ்சு ஆள்களைன்னு தோண்ரது! நீ என்ன சொன்னலும் ஒன்னைப் பிடிச்சுத்தான் இருக்கு எனக்கு. அதுனலேதான் நீ எது சொன்னலும் நான் தழைஞ்சுபோரேன்! எனக்கு மட்டும்! என்ன சொல்ரேனும்...நான் சிட்டுங்கரெ, க்ரிச்சுங்கரெ. நான் பதில் சொல்ரேனு—,

"அதெல்லாம் வேடிக்கை! உனக்குப் பிடிக்கலேன்னு நான் ஏன் சொல்ரேன் வினதா? உனக்குப் பிடிக்காத பேச்சு எதுக்குப் பேசணும்?"

"இல்லே ராமு, நீ சொல்ரது எல்லாம் சந்தோஷம்தான் எனக்கு. இனிமே அவாள்ளாம் இருக்கச்சே மட்டும் தட்டிப் பேசாதே? என்ன?"

"ஆஹா நீ பெரியவளாய்ப் போயிடுவென்னு தெரிஞ்சுக்கலே. பத்துப்பேருக்கு நடுவிலே பரிகாசம் பண்ணலலே. ஆனு— நானு இருக்கும்போது மட்டும்......!"

ஒத்துக்கொண்டாள் அவள். விளையாட்டு ஆரம்பமாயிற்று. அன்று ராமு ஆடிய ஆட்டத்தில் அத்தனை பேர்களும் கலங்கிப் போனர்கள். என்ன வேகம், என்ன பாய்ச்சல். எது இப்படி ஆரம்பிச்சான் இவன்! இத்தினை நாள் எங்குப் போயிற்று அந்த வேகம்? இது என்னமோ இவனு ஆடல்லே; இவ்விதம் ஒவ்வொருவரும் எண்ணிக்கொண்டார்கள்.

வினதைக்கு மட்டும் ஏனே மனத்தில் பெரும் பீதி உண்டாகிவிட்டது. கூக்குரலிட்டுக் கத்தினுள். "ராமு, ராமு, வேண்டாம். வேண்டாம். ஆட்டம் 'ஸ்டாப்' பண்ணு. உன் தேகத்தில் சக்தியில்லேடா. வேண்டாம், வேண்டாம். ஆடாதே...கெஞ்சரேன் ராமு...நான் தோல்விதான் ஒப்புக்கேரேன். தோப்புக்கரணம் வேணுமானலும் போடரேன். எனக்குப் பயமாயிருக்குடா. வாடா வாடா" என இறைஞ்சி அழைத்தாள்.

இவள் போட்ட சப்தம் ராமுவைப் ப்ரமிக்க வைத்தது. ஒரு நாளாவது வினதைக்கு முன் கெலிப்பு. அவன் எண்ணம் பூர்த்தியாயிற்று அல்லவா? தவிர வினதைக்கு எத்தனை பிரியம் தன்மேல்; தன் சினேகிதன் அத்தனை பேருக்கும் நடுவில் தன்னை அவள் அழைக்கும் அன்பு அவனுக்கு ஒரு பெருமையை யளித்தது.

* * *

பள்ளியில் ஒரே பரபரப்பு. "பெரிய வாத்தியார் ராமுவின் அப்பாவுக்குத் தந்தியடிச்சுட்டாராம். ராமுவுக்கு ஜுரமாம். ஒரே தணலாய் வீசரதாம். பெரிய வாத்தியார் தன் ரூமில் விட்டுக்கொண்டு தானே

பக்கத்தில் இருக்காராம். ராமு பிழைப்பானோ—என்னமோ?" பள்ளிக்கூடப் படியேறு முன்பே வினதையின் காதில் இந்த வார்த்தைகள் எட்டின. அவள் உடல் நடுங்கியது.

"ராமுவுக்கா! பெரிய வாத்தியாரா இருக்கார்? அவனை எப்படிப் பார்ப்பது? பையன்களுக்கெல்லாம் ஜுரம் வருமோ என் பாரே வாத்தியார்? அவனுக்கு எப்படி வந்தது! ஐயோ ராமு—அந்த ஆட்டம் ஏன் ஆடினாய்!"—என்று நினைத்துக்கொண்டே வினதா பரபரப்புடன் ஓடினாள். பெரிய வாத்தியார் வினதாவினிடம், ராமு அவளைப் பார்க்க விரும்புவதாகக் கூறி அழைத்தார்.

ஆவலுடன் ஓடி வந்தாள் வினதா. ராமு—"வினதா" என இரண்டு கைகளையும் நீட்டினான். ராமுவின் இரண்டு கைகளையும் பிடித்தபடி ஏங்கிய கண்களுடன் "ஏன் ராமு" என விம்மினாள் அவள்.

"கண்ணே வினதா?" என்றான் ராமு நடுங்கிய குரலில்.

"என்ன அன்பு" என வியந்தார் ஹெட்மாஸ்டர். அவர் இருப்பதே இவர்களுக்கு ஞாபகமில்லை.

"ராமு, நான் எத்தனை தரம் கத்தினேன். அப்படி ஆடியிருக்கப்படாது. பாரேன் இப்போ இப்படிப்படுத்துவிட்டாயே. நான் இப்போ என்ன செய்வேன்? என்னை யார் சாயங்காலம் "குருவி"-என்று அழைப்பார்கள். உன் குரலில் என் மனம் அடைந்த இன்பம்—ராமு நான் சொல்ல முடியுமா? நீ கிடக்கும் இந்த நிலையில் நீ சீக்கிரம் தேறிவிடணும்னு எல்லாப் பகவானையும் வேண்டிக்கிறேன்" என்று கூறி வினதா கண்களில் நீர் பெருக பகவானை வேண்டினாள்.

"வினதா, ஐயோ நான் பிழைக்கவா போகிறேன்? உம், உன்னை என் மனதின்......" அவளை இரு கைகளாலும் தழுவிக்கொண்டான் ராமு.

"அடடா என்ன இது ராமு! வினதா, அவன் உடம்பும் நிலையும்—என்ன பரிதாபக் கோலம்...நீ இப்படி வா. இனி நீ வரக்கூடாது இங்கு!"

"மாஸ்டர், அதை மட்டும் சொல்லாதீர்கள்...." ராமுவின் இந்தப் பேச்சு விவரிக்க முடியாத உணர்ச்சி வெள்ளத்தில் மிதந்து வந்தது. அவன் கண்ணில் ஒளி மழுங்கிக் கெஞ்சும் பார்வையும் வினதாவின் நடுங்கிய சோகப் பார்வையும் ஹெட்மாஸ்டரையே உருக்கிவிட்டன.

இதற்குள் ராமுவினுடைய தகப்பனார் வந்தார். காரில் ராமுவை ஏற்றிக்கொண்டார். காரும் பறந்தது. வினதையின் கண்கள் மட்டும்—?

பாலைவனத்தில் சுற்றும் பக்ஷியானாள் வினதா. சாந்தி—சாந்தி, அவள் தேடும் சாந்தி யெது? ராமுவைக் காணவேண்டும்...அவன்தான் இல்லையே...அவனைப் போன்ற ஒருருவம்—இல்லை அவனைப் போன்ற ஒரு சித்திரம்? அவள் எழுதிக்கொண்டேயிருக்கிறாள். ஆனால் அவளால் உருவகப்படுத்த முடியவில்லை.

காவிரியிலும் கும்பல் நிறைந்த இடங்களிலும் சந்திலும் பொந்திலும் சாலைகளிலும் அவள் தேடுவது அவன் குரலையாவது...அவன் உருவத்தையாவது தான்...அவன் அவளுக்குக் கிட்டுவானா?...

# போரின் பொருளாதாரம்-
## அதன் விளைவு

[த. கிருஷ்ணமூர்த்தி]

இரண்டாம் ஐரோப்பிய யுத்தத்தின் விளைவாகப் போரிடும் நாடுகளின் சமுதாயத்தில் பல பெரும் மாறுதல்களைக் காணுகிறோம். உயர்வு, தாழ்விருந்த விடங்களில் சமத்துவம் பெருகி வருகிறது. போர் முடிந்தாலும் இன்றைய மாறுபாட்டின் விளைப்பயன் அன்றைய சமுதாயத்தையும் பாதிக்கும் என்பது ஒருதலை. அதனால் பாட்டாளி மக்கள் பயனுறுவர் எனக் கூறவும் வேண்டுமோ? மன்பதையின் இரு பெரும் நாடுகளின் சமுதாய மாற்றம் பிற நாடுகளையும் சிறிதாவது அரற்றும் என்பதும் திண்ணம். இங்கிலாந்தும், ஜெர்மனியும் போர்ச் செலவிற்குக் கடன் மூலமாகவும், வரி மூலமாகவும் வருவாய்க்கு ஏற்பாடு செய்துள்ளன. பணக்காரப் பிரிட்டனுக்குச் செலவிற்கு அச்சமில்லை. போர் துவக்கு முன்னரே சேம்பர்லின் போர் நடத்தப் போதிய பொருள் பலம் இங்கிலாந்திற்கே ஜெர்மனியைவிட அதிகம் உண்டென்றும், ஆகவே ஹிட்லர் நிதானமாக விருப்பதே அவருக்கு நன்மை எனவும் அப்போதே எச்சரித்தார். சர்க்கார் இக் காலத்தில் ஏராளமாகச் செலவழிப்பதால் மக்களிடைப் பணம் அதிகம் பழகுகிறது. அதனை அதிக வரி மூலமாகத் திரும்பவும் சர்க்கார் எடுத்துக்கொண்டு விடுகின்றனர். நாணயப் பழக்கம் இருப்பினும் தேக்கம் ஏற்படுவதில்லை. தேக்கம் ஏற்பட்டாலேயே விலைவாசிகள் ஏறும். அதற்கு இடங் கொடுப்பதில்லை. வெளியிடும் நாணயம் வரியாக வந்துவிடுவதால் அதிகப்படியாக நாணயங்களை வெளியிடுவதில்லை. ஆகவே அதன் மதிப்பு குறையாது.

அயல்நாட்டுச் சாமான்களை வாங்கவும் பிரிட்டனுக்கே ஜெர்மனியைவிடச் சக்தியுண்டு. கெய்சருக்கிருந்த தங்க சேமிப்பும் ஹிட்லருக்கில்லை. சாதாரண காலத்தில் உலகப் பொதுநாணயமாகக் கருதப்பட்ட பிரிட்டிஷ் ஸ்டர்லிங்கைப் பிற நாடுகள் இப்போது ஏற்க மறுக்கின்றனவென்றால் ஜெர்மன் மார்க்குக்கு மதிப்பேது? சென்ற போரின்போதும் பிரிட்டன் ஜெர்மனியைப் பொருளாதாரத் துறையில் முறியடித்தது. ருமேனியாவிலிருந்து கோதுமையையும், எண்ணெயையும் ஜெர்மனிவாங்கமுயன்றபோதுபிரிட்டன்எல்லாவற்றையும் தானே எடுத்துக்கொண்டது. அங்ஙனமே இன்று துருக்கியின் வர்த்தகத்தில் ஜெர்மனிக்கிருந்த பாகத்தை ஒழித்து பிரிட்டன் முழுதையும் எடுத்துக்கொண்டிருக்கிறது. எகிப்திலிருந்து ஜெர்மனிக்குச் சென்றுகொண்டிருந்த பருத்தியனைத்தையும் பிரிட்டன் வாங்கிவிட்டது. சென்ற யுத்தத்தின் தொடக்கத்தில் அமெரிக்கா பிரிட்டனுக்குக் கடனாளியாயிருந்தது. ஆனால் அதன் முடிவிலோ பிரிட்டன் அமெரிக்காவிற்குக் கடன்பட்டது. அமெரிக்கா வர்த்தகத்திலும் ஜெர்மனி தன் பங்கை முழுதும் இழந்தது.

இன்று அமெரிக்காவில் பிரிட்டனுக்குள்ள டாலர்சொத்துகள் குறைந்துவந்தாலும்,சீக்கிரத்தில் அது சமாளித்துக்கொள்ளும். பிரிட்டன் ஏற்கனவே கடன்பட்டிருப்பதால், அமெரிக்கா பணச் சந்தையில் இப்போது கடன் எழுப்ப முடியவில்லை. எனினும் அதன் துயர நிலையை அறிந்து ஸ்ரீ ரூஸ்வெல்ட் ரூபாய் கடனாகவில்லாமல், யுத்த தளவாடங்களை இரவலாகக் கொடுக்க ஏற்பாடு செய்து வருகிறார். அதாவது போர் முடிந்ததும், (அல்லது அவசிய காலம் முடிவுற்றதும்) தரப்பட்ட ஆயுதத் தளவாடங்களைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டியது. அவர்தம் ஏற்பாடு இன்று ஒரு மசோதாவாக அமெரிக்கக் காங்கிரஸ்

முன்னர் கொண்டுவரப்பட் டிருக்கிறது. அது எளிதில் நிறைவேறிவிடும். பணம் கடனாய் வாங்கினால், திருப்பிக் கொடுப்பதும் கஷ்டம். அதற்கு இத்தகைய முறையே சிறந்தது. அமெரிக்காவின் உற்பத்திச் சக்தி பெரிது. ஆகவே பிரிட்டன் டாலர் ரொக்கத்திற்காக அதிகமாக அவஸ்தைப்படவேண்டியதில்லை.

யுத்த தந்திரங்களில் முக்கியமான தொன்று; நம்மால் நமக்குத் தேவையான பொருள் வாங்க முடியாவிட்டால் அது எதிரிக்குப் பயன்படாதவாறுவது விருக்கக் கவனிக்கவேண்டும். அவ்வாறு எதுவும் எந்நாடு வழியாகவும் ஜெர்மனிக்குச் சேராதிருக்க 'நேவிஸர்ட்' என்ற வகை பிரிட்டன் தன் கடற்படை பலத்தின் உதவியால் தடுத்து வருகிறது. ஜெர்மனியோ அயல்நாட்டு பணப் பஞ்சத்தாலும், தங்க மில்லாமையாலும், இத்தகைய நெருக்கடிக்குத் தன்னை முதலிலேயே தயாரித்துக்கொண்டு விட்டது. ஹிட்லர் பதவிக்கு வந்த சிலவாண்டுகளிலேயே 'ஐந்தாண்டு திட்டம்' ஒன்று வகுத்து மார்ஷல் கோயரிங் தலைமையில் அதனைப் பெரிதும் நிறைவேற்றியிருக்கிறார். அயல் நாட்டிலிருந்து வரவழைத்தாக வேண்டிய பண்டங்களுக்கு மாற்று செயற்கை ரசாயனப் பொருள்கள் தயாரிப்பில் சிலவாண்டுகளாகவே ஜெர்மனி கவனம் செலுத்தி வருகிறது. எனினும் ரப்பர், பருத்தி போன்ற சில முக்கிய மூலப் பொருள்களில் ஹிட்லர் பெரிதும் மாற்றுப் பண்டங்கள் அடையவில்லை. அமெரிக்க யுத்த நிபுணர் அபிப்பிராயப்படி ஜெர்மன் விமானங்களின் பெட்ரோல் உயர்ந்த ரகமானாலும், தேவைக்கு வேண்டிய அளவு இல்லை என்பது நோக்கற்பாலது. எகிப்தின் பருத்தியும், ஆசியா மைனர் எண்ணெயும் ரப்பரும் கிடைக்குமானால் அவர் அஜாதசத்ரு வாகிவிடுவார். ஆகவேதான் சமீப கீழ்த்திசை நாடுகளிலும், ரப்பர் முதலிய மூலப் பொருள்கள் கிடைக்கக் கூடியகிழக்கிந்தியத்தீவுகளிலும் பிரிட்டன் அக்கரை காட்டி வருகிறது. பிரிட்டனுக்கு மூலப்பொருள் பஞ்சமில்லை என்பது அனைவரும் அறிந்ததே.

ஹிட்லர் யுத்த காலத்திற்குத் தேவையான சிக்கன ஒத்துழைப்பு முறையைச் சில வாண்டுகளாகவே கையாண்டு வந்துள்ளார். பிரிட்டன் இப்போதே அத்தகைய முறையை நிர்ப்பந்தமாகக் கையாளப் புகுந்தாலும் மக்களின் மகத்தான ஒத்துழைப்பால் வெகு விரைவாக ஒழுங்காகக் காரியங்களை நடத்தி வருகிறது. அனுவசியமான உற்பத்தி நிலையங்கள் நீக்கப்படுகின்றன. நிர்வாகத் திறமை குறைந்தவைகளைச் சர்க்காரே எடுத்துக் கொள்ளுகின்றனர். வரும் மூலப்பொருள்களைப் போருக்கு அவசியமானபடி உரிய உற்பத்திச்சாலைகளுக்கு ஏற்ற அளவில் விநியோகிக்கப்படுகிறது. மக்களுக்கு அத்யாவசிய மில்லாத பொருள்களைக்குவிக்கும் தொழில்களில் ஈடுபட்டோரைச் சர்க்கார் அவசியத் தொழில்களுக்குத் திருப்புகின்றனர். அதே சமயம் ஜனங்கள் தங்கள் வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும் கோரப்படுகிறார்கள். செலவு குறைவதால் அதிக வரி கொடுக்க எளிதாகும். வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களின் அளவு கொஞ்சமாக விருந்தால் அப்போது அரசாங்கமே அனைவருக்கும் சமமாக ஒரே விலையில் பங்கிட்டு விநியோகிக்கும் யுத்தச் செலவால் மக்களிடை பணம் அதிகமாகப் பழகுமாதலால் அதிகமாக இல்லாத சாமான்களுக்குக் கிராக்கி ஏற்படும். ஆகவே பணக்காரர்களே பயனுறுவர். அதனால் ஏற்படும் லாபம் தனிப்பட்ட நபரைச் சேரும். மக்களிடை மனக் கசப்பும் தோன்றும். ஆகவேதான் இப் பங்கிடும் வேலையைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டுள்ளனர். வாழ்க்கைச் செலவு குறைவதாலும், விலைவாசி ஏற்ற மில்லாததாலும் மக்கள் தங்களுக்குப் போரினால் கிடைக்கும் அதிக வருமானத்தை அதிக வரிக்கு ஈடு கட்டிவிடுகிறார்கள். அயல் நாடுகளினின்றும் வரவேண்டியவைகளின் அளவு குறைக்கப்படுகிறது. உணவுப் பொருள்களை வரவழைத்தால் போருக்கு வேண்டிய சாமான்கள் வாங்க அயல்நாட்டு நாணயமிராது. தவிரமரக்கலங்கள் உணவுப் பொருள்களை ஏற்றி வந்தால் தளவாடங்களை ஏற்றிவர முடியாது. இதற்காகும்

நேரத்தையும் செலவையும் போருக்குச் செலவிட்டால் பயன் பெறலாம். பல வழிகளில் போருக்காக முயலுவதால் வேலையற்றோர் கூட்டமில்லை; பின் தொழிலாளர் பஞ்சமே எற்பட்டிருக்கிறது.

குண்டுக்கும், பீரங்கிக்கும் அஞ்சிப் பல தொழிற்சாலைகள் கிராமாந்திரங்களில் நிறுவப்பட்டுள்ளன. அதனால் நகர நெருக்கடி நீங்கியிருக்கிறது. எழைக் கிராமாந்திர மக்கள் பயனுறுகிறார்கள். தொழிலாளருக்கும் சுகாதார வாழ்க்கைக்குச் சௌகரியமாயிற்று. நாட்டின் எல்லாத் தொழில் நிலையங்களும், போரின் நிமித்தமாகச் சர்க்கார் மேற்பார்வையி லிருப்பதால் இன்று எற்பட்டுள்ள பிடிப்பு பின்னர் முழுதும் நீங்கிவிடாது. குடிகளின் நன்மையின் பொருட்டு இப் பிடிப்புச் சற்று இருந்தே தீரும். அனாவசியமானதும், திறமையற்றதுமான தொழில்கள் அதுகாலை நீங்கிவிடும். நாட்டில் மக்கள் க்ஷேமத்திற்கேற்றவாறு சேமிப்பும், விநியோகமும் செவ்வனே அதுகாலை நடைபெறும். முதலாளித்துவத்திற்கும் சமதர்மத்திற்கும் சமரசமான ஒரு சமுதாயம் அது சமயம் அரும்பும். அது அனைவருக்கும் ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் ஊட்டுவிக்குமெனக் கூறவும் வேண்டுமோ?

---


## முன்னேற்றத்தில் முன்னணி!

பிணை

பாதுகாப்பு

துரிதமான பட்டுவாடா

முழு திருப்தி

ஆகியவைகளுக்கு

உங்கள் ஆயுளையும் மோட்டாரையும் வான்கார்டில் இன்ஷ்யூர் செய்யுங்கள்.

**தி வான்கார்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி**

**லிமிடெட்**

மவுண்ட் ரோட், சென்னை

போன்: 8558 | தந்திவிலாசம்:— "வான்கார்ட்"

# என் பழைய ஞாபகம்

[எஸ். ஆர். வேங்கடராமன், பி.ஏ, பி.எல்.]

பாலியத்தில் என்னோடு பழகிய லக்ஷ்மியின் ஞாபகம் இப்பொழுது எனக்கு வருகிறது. அவளைப்பற்றி இந்தப் பத்துப் பதினைந்து வருஷங்களாக நான் நினைத்ததேயில்லை. அது என்பேரில் ஒரு பெரிய தப்புத்தான். ஏனென்றால் ஒரு சமயத்தில் எனக்கேற்பட்டிருந்த சந்தோஷத்திற்கு அவள்தான் காரணம். அவள் பழக்கம் ஏற்படாதிருந்தால் என் வாழ்நாள் முழுவதும் வேறு விதமாக முடிந்திருக்கும். அவள் இன்னும் எங்கேயாவது உயிரோடிருப்பாள் என்றெண்ணுகிறேன். அவள் இறந்து விட்டபோதிலும் ஜனங்கள் அவள் இறந்துவிட்டாள் என்று எண்ணமாட்டார்கள். அவள் சிலரைப்போல துருதுருவென்று அலையமாட்டாள். சென்ற விடமெல்லாம் சந்தோஷத்தையும் குதூஹலத்தையும் பொழிவாள்.

அவள் எங்கள் வீட்டில் சமையல் வேலை செய்து வந்தாள். இது இப்போதைக்குப் பதினைந்து வருஷத்திற்கு மேலாகிறது. நாங்கள் அப்போது கள்ளிக்கோட்டையில் வசித்து வந்தோம். என் தகப்பனர் அவ்வூர் ஜாமொரின் காலேஜில் போாசிரியர் வேலை பார்த்து வந்தார். நாங்கள் இருந்த வீடு ஒரு தென்னந்தோப்பின் நடுவில் இருந்தது. அதேமாதிரி பல வீடுகள் அந்தத் தோப்பில் தனித்தனியே கட்டப்பட்டிருந்தன. சமையலறை சற்று தூரத்தில் தனிமையாகத் தரை மட்டத்திற்குக் கீழே பூமிக்குள் இருந்தது. இந்தக் காலத்துச் சமையல்காரர்கள் அந்தமாதிரி சமையலறையில் சமையல் செய்வார்களோ, மாட்டார்களோ எனக்குத் தெரியாது. நிலம் ஈரமா யிருக்கும். கீழே நடந்தால் ஒன்றரை அங்குலம் மண் காலில் செருப்புப் போட்டாற்போல் ஒட்டிக்கொள்ளும். அந்தக் காலோடு தோப்பில் சென்றால் முள் குத்தாது. மண் அவ்வளவு கனமிருக்கும். அந்த மண் போக அலம்பவேண்டுமானல் குளத்திற்குத்தான் போகவேண்டும். வீட்டில் ஜலம்விட்டு அலம்பச் சாத்தியமில்லை.

அந்தச் சமையலறை இருண்டிருக்கும். வண்டுகளும், கரப்புகளும், பல்லிகளும், எலிகளும் எங்களுடன் சம அந்தஸ்துடன் 'டொமினியன் ஸ்டேடஸ்' கொண்டாடி வாழ்ந்து வந்தன. ஆனல் லக்ஷ்மியம்மாளைக் கண்டால் மாத்திரம் இந்தப் பிரஜைகளுக்கு, இப்போது இந்தியப் பிரஜைகளுக்கு இந்தியா மந்திரியிடம் என்ன கோபம் இருக்கிறதோ, அவ்வளவு கோபம் இருந்தது. லக்ஷ்மியம்மாள் அந்த வாயில்லாப் பிரஜைகளை அவ்வளவு தோரணையுடன் அடக்கி ஆண்டு வந்தாள்.

லக்ஷ்மி மிகவும் வீரமும் தீரமும் பொருந்தியவள். அவள் அலங்காரப் பிரியை. அவளுக்குத் தன்னைப் பலவித வர்ணப் புடவைகளால் அலங்கரித்துக்கொள்வதில் அதிகப் பிரியம். அவளது கரும் வண்டு போன்ற நீண்ட குழல்கள் தரையில் விழுந்து புரளும். அதை அவள் சீவி வாரிக்கட்டிக்கொண்டு முல்லை, மல்லிகை, தாமரை யிதழ் இவற்றால் அலங்கரித்துக் கொண்டால் எல்லாருடைய கவனத்தையும் இழுக்கும். அவள் அணியும் ரவிக்கையும் புடவையும் சாதாரணமாக விருப்பினும் சகல வர்ணங்களும் அமைந்தனவாயிருக்கும். இம்மாதிரி தன்னை அலங்கரித்துக்கொண்டு வெளியே கோவிலுக்குச் சாயங்காலம் அவள் செல்வதைப் பார்த்தால் ஒரு பெண் தன் காதலனைப் பார்ப்பதற்குச் சென்றால் எப்படி யிருக்குமோ அந்த மாதிரி யிருக்கும். எங்கள் வீட்டில் வேலை செய்துகொண்டிருந்த காலத்தில் அவளுக்கு வயது இருபது, இருபத்தைந்து இருக்கும். அவளுடைய புருஷன் ஐரோப்பிய மகா யுத்தத்தின் போது "பீல்டு சர்வீஸ்" உத்தியோகம் செய்யப் போயிருந்ததாக அவள் சொல்லுவாள்.

லக்ஷ்மி எங்கள் சமையலறையை, வந்த சில நாட்களில், மாற்றிவிட்டாள். தேவதை




### நோட்டீஸ்
## மன்னார்குடி டி. மு. கோர்ட்டு
### O. S. No. 39/1939

**சீனிவாஸா சாரியார்** — வாதி மனுதார்
**V. தொரைசாமிய்யர்** — 5 ம் பிரதிவாதி

ஷை 5 ம் பிரதிவாதிக்கு வாதி வக்கீல் K. சின்னஸாமி அய்யர் தெரிவிக்கிறதாவது:— வாதியால் டிக்கிரி சொத்துக்களை விற்பனைக்காகவும் வாதியாவது வாதி வக்கீலவர்களாவது ஏலம் கேழ்க்கவும் ஏலத் தொகையை டிக்கிரியில் முஜரு செய்து கொள்ள பர்மிஷனுக்கும் மனுக்கள் செய்துகொண்டிருப்பதாலும் விற்பனை இஸ்தியார்ஷரத்துக்களை நிர்ணயிப்பதற்கும் பர்மிஷனுக்கும் நோட்டீசுகளுக்கும் உத்திரவாகி 5 ம் பிரதிவாதியின் ஷை நோட்டீசுகளை ஷையார் கடைசியாய்க் குடியிருந்த இடமாகிய கல்கத்தா Dover Lane 18 நெம்பர் வீட்டிலும் ஷை முன்சீப் கோர்ட்டுவாசலிலும் ஒட்டி சார்வு செய்யவும் பப்ளிகேஷனுக்கும் உத்திரவாகி 18-3-41ல் ஈரங்கி போட்டிருப்பதால் அன்று ஆஜராகி ஷையார் கஷிகளைத் தெரிவிக்காத வரையில் எக்ஸ்பார்ட்டி செய்து ஏலத்துக்கு உத்திரவாகிவிடும் என்பதை இதன் மூலமாய் அறிவிக்கலானேன்.

மன்னார்குடி }
27-2-41. }

**K. சின்னசாமி ஐயர்**
D. H. வாதி வக்கீல்

### நோட்டீஸ்
## மன்னார்குடி டி. மு. கோர்ட்டு
### 1938 O. S. No. 13

A. K. தர்த்தியப்ப தேவர்—வாதி
V. P. N. வேதமுனி செட்டியார்—
ஏஜெண்டு
நாராயணசாமித் தேவர்—பிரதிவாதி

ஷை நெம்பர் வாதிவக்கீல் S. கோபாலய்யர் தெரிவித்துக் கொள்கிறதாவது.

ஷை நெம்பர் டிக்கிரி தொகை வரவுக்காக ஷை பிரதிவாதியின் ஸ்தாவர சொத்துக்களை ஏலத்துக்குக் கொண்டு வர நிறைவேற்று மனு கொடுத்து பிரதிவாதிக்கு C. P.C. O 21 R. 66 & 72 படி நோட்டீசுகள் போயும் ஸார்வாகாததினால் பிரதிவாதிக்குப் பிறக்கும் எந்த நோடீசுகளையும் பிரதிவாதி கடைசியாய்க் குடியிருந்த இடமும் ஸ்திரவாசமுமாகிய மன்னார்குடி தாலுகா திருமக் கோட்டையிலுள்ள ஷை யரார் வீட்டு வாசல் கதவிலும் ஷை மன்னார்குடி டி.மு. கோர்ட்டு வாசலிலும் ஒட்டிச் சார்வு செய்யும்படி உத்திரவாகி வருகிற 25-3-41ந் தேதி வாயிதாவுக்குப் போடப்பட்டிருக்கிற விபரம் இதனால் அறியக் கோருகிறேன்.

(Sd.) S. **கோபாலய்யர்**, வாதி வக்கீல்

களின் விக்ரகங்களாலும் சப்பரங்களாலும் குத்து விளக்கினாலும் வர்ணக் காகிதத் தோரணங்களாலும் ரவிவர்மா படங்களைக் கொண்டும் அலங்கரித்து வைத்திருந்தாள். இவைகளை யெல்லாம் அவள் எங்கிருந்து வாங்கினாளோ தெரியாது. அவள்போன விடமெல்லாம் இப்படித்தான் செய்திருக்க வேண்டும். எங்கள் வீட்டிற்குள் வேலை செய்யவந்த நாள் முதற்கொண்டே, அவள் எங்கள் வீட்டில் நிலைத்திருக்கமாட்டாள் என்று எங்களுக்குத் தெரியும். அவளைப் பார்த்தாலும் அப்படித்தான் எல்லாருக் தோன்றும்.

நளபாகம் பீமபாகம் என்பதெல்லாம், லக்ஷ்மி சமைத்த பதார்த்தங்களுக்கு ஈடாகாது. அவள் எங்கள் வீட்டில் வேலை செய்த ஒரு வருஷ காலம் நான் அவள் சாப்பாடு சாப்பிட்டிருக்கிறேன். அதைப் போல் நான் இதுவரை வேறெங்கும் சுசிருசியானதும் மணமுள்ளதுமான சாப்பாடு சாப்பிட்டதில்லை. நான் பெரிய பெரிய விடங்களி லெல்லாம் விருந்தாளி யென்ற ஹோதாவில் சாப்பிட்டிருக்கிறேன். அவை யெல்லாம் லக்ஷ்மியின் சமையலுக்கு அப்புறந்தான். சாதாரணப் பதார்த்தங்களைக் கொண்டு, கண்ட மாத்திரத்திலேயே நாக்கில் ஜலம் ஊறும் வண்ணம் சமையல் செய்வாள்.

ஒரு நாள் என் தகப்பனார் தன் நண்பர்களில் சிலரை விருந்துக்கு அழைத்திருந்தார். அன்றைய தினம் காய்கறி வகைகள், இனிப்புப் பண்டங்கள், பாயசம் வடை போன்ற பதார்த்தங்கள் செய்தாள் லக்ஷ்மி. அவள் ஒரு புது மாதிரியான பச்சடியும் செய்திருந்தாள். அதைப் பரிமாறும்போது, அவள் வேடிக்கையாக, “ இந்தப் பச்சடி என்ன பச்சடி சொல்லுங்கள் ” என்று சொல்லிக்கொண்டே கலத்தில் சாதித்தாள்; எல்லாரும் ருசி பார்த்து விட்டு, “ரொம்ப நன்னாருக்கே இதிலென்ன, தானைக் கடிச்சா, சக்கை சக்கையா யிருக்கே, ஜைரத்தண்டாக்கும்” என்றார் ஒருவர். மற்றொருவர், “ இல்லை சார், இது முருங்கைக்காய்தான்போ லிருக்கு” என்றார். மற்றொருவர் “ என்ன சார் இது தெரியலயோ, தித்திப்பா யிருக்கே, கரும்பைப் போட்டுத்தான் இந்தப் பச்சடி செய்திருக்கா” என்றார். இதைக் கேட்ட லக்ஷ்மி, வேடிக்கையாக, “ நீங்கள் சாப்பிட்ட பிறகு சொல்லுகிறேன்” என்று சொல்லிப் போய்விட்டாள். சாப்பிட்டான பின், எல்லாரும் வெற்றிலை பாக்குப் போட்டுக்கொண் டிருக்கும்போது லக்ஷ்மி அங்கேவா, என் தகப்பனார் “என்ன லக்ஷ்மி, அந்தப் பச்சடி எதிலே பண்ணினே”என்று கேட்டார். அப்போது லக்ஷ்மி பொங்கிவரும் சிரிப்பை அடக்கிக் கொண்டு “ அந்தப் பச்சடிக்குப் பேர் வாழை மட்டைப் பச்சடி” என்று சொல்லி விட்டு, தன் சாமர்த்தியத்தைத் தானே மெச்சிக்கொள்வதுபோல் தன்னறைக்குப் போனாள்.

‘ இவன் நல்ல சாப்பாட்டுராமன் ! அது கண்டுதான் லக்ஷ்மியைப் பற்றியும் அவள் சமையலைப்பற்றியும் இப்படி வர்ணிக்கிறான் ’ என்று எண்ணிவிடாதீர்கள். அவளைப்பற்றி நான் நினைத்துக் கொண்டது மற்றொரு விஷயத்திற்காக. அக் காலத்தில் நான் எழுதினவற்றை நான் படிக்கக் கேட்டு எனக்கு உத்ஸாக மூட்டியவள் அவளே. எனக்குக் கதைகள் எழுதுவதில் இக்காலத்தி லிருப்பதுபோல், அக் காலத்திலும் பைத்தியம் உண்டு. ஆனால் அப்போது கலைச்சுவையின் மிகுதியால் அம்மாதிரி எழுதினேன். இப்போது கதைகள் எழுதியாகவேண்டி யிருக்கிறது. இதுதான் அப்போது கதையெழுதினதற்கும், இப்போது கதையெழுதுவதற்கும், வித்தியாசம். அப்போது, என் தாய் தகப்பனார் என் தமையன் தமக்கை, மாமா, எங்கள் குடும்பத்திலுள்ள பந்து ஜனங்களில் அம்மாஞ்சிகள் உள்பட, என்னைப் பரிகசித்து நான் கதைக ளெழுதுவதைத் தடுக்க முயன்றார்கள். அதை அவர்களெல்லாரும் விருதா காலக்ஷேபம் என்றே எண்ணினார்கள்.

பள்ளிக்கூடத்தில் நான் படிப்பில் படு மோசம்; ஒவ்வொரு உபாத்தியாயரும் என்னைக் கட்டியழுதுவிட்டு இது உருப்படியாகாது என்று கைவிட்டு விட்டார்கள். சோம்பேறி என்று எல்லாரும் எனக்குப் பட்டமும் கட்டிவிட்டார்கள். ஆனால் நான்

ஒரேஒரு காரியத்தில்தான் உத்ஸாகத் துடன் கவனம் செலுத்தினேன். நவீனங் கள் எழுதுவதிலும் பிறருக்குப் புரியாத கதைகள் எழுதுவதிலும்தான் என் முழு மனமும் சென்றது. இப்படி நான் எழுதி யதை யெல்லாம் சமையல்காரி லக்ஷ்மி தவிர மற்றெல்லாரும் குப்பை யென்று தள்ளிவிட்டார்கள். அந்த சமையலறை யில் உட்கார்ந்துகொண்டு லக்ஷ்மி என் கதைகளைக் கேட்டுக் குதூஹலத்தை யடைவாள். அவள் எப்போதுமே குஷி நிறைந்தவள். சமையல் செய்யும்போதே தனக்குத் தெரிந்த பாட்டுக்களைச் சொல் லிக்கொண்டும் குதித்துக்கொண்டும் ஆடிக் கொண்டும் சமையல் செய்வாள்.

ஒவ்வொரு நாளும் நான் எழுதிய கதையை எப்போது அவளிடம் கொண்டு வந்து வாசித்துக் காட்டப் போகிறேன் என்று அவள் ஆவலுடன் காத்துக்கொண் டிருப்பாள். ஒவ்வொரு நாளும் அவளுக்கு நான் கதை வாசிக்கும் நேரத்தைப்போல் களிப்பைக் கொடுக்கும் நேரம் வேறு ஒன்று மிருந்திருக்காது என்று இப்போது நான் எண்ணுகிறேன். சமையலறையி லிருந்த ஒரு சிறு நாற்காலியின்மீது உட் கார்ந்துகொண்டு என் சிறிய கால்களை ஆட்டிக்கொண்டு, என் மெல்லிய கீச்சுக் குரலில் பெரிய மனுஷியன் என்ற தோர ணையுடன் நான் எழுதியுள்ள "தீரன் கஜபதி," "சிவாஜி மஹா சத்ரபதி" போன்ற நவீனங்களை லக்ஷ்மிக்கு வாசித் துக் காண்பிப்பேன். நான் கதை வாசிப் பதைக் கேட்டுக்கொண்டே சமைத்தால், தான் சாதாரணமாய்ச் சமைத்தால் எப்படி யிருக்குமோ அதைவிட இரண்டுமடங்கு தேட்டமாகச் சமைக்க முடிகிறது என்று என்னிடம் லக்ஷ்மி சொல்லியிருக்கிறாள்.

என் கதையில் வரும் சம்பவங்களையெல் லாம் அவள் சிறிதும் தவறுமல் நினைவு வைத்துக்கொள்வாள். இது எனக்கே ஆச் சரியத்தைக் கொடுத்தது. ஏனென்றால் என் கதைகளில் நான் புகுத்தியிருந்த சம் பவங்களும் அதிநுட்பமான விஷயங்களும் எனக்கே அடிக்கடி கலக்கத்தை யுண்டாக் கின.

நிஜமாகவே, லக்ஷ்மியுடன் நான் கழித்த நேரங்களை நினைத்தால் எனக்கு மகிழ்ச்சி யும் சந்தோஷம் உண்டாகிறது. அடுப்பில் நெருப்பு திகுதிகென்று முழங்கும். பயங் கரமான நெருப்பின் ஜ்வாலையும் உஷ்ண மும் அந்தவிடத்தில் ஒருவரைச் சில நிமிஷ மும் தங்கியிருக்கச் செய்யாது. லக்ஷ்மி சமையல் செய்துகொண்டிருப்பாள். அவள் தேகம் முழுதும் ஜலப்ரளயமா யிருக்கும். சமையலில் ஈடுபட்டிருந்ததால் அவள் ஒன்றையும் பொருட்படுத்த வில்லை. இதற்கு என் கதையே காரண மென்று பின்னால் தெரிந்தது.

ஒருநாள் சாயந்திரம் எங்கள் வீட்டில் பெரிய விருந்து நடந்தது. அதன் பிறகு லக்ஷ்மி சமையலறையில் வாயிலெடுத் துக்கொண்டு படுத்துப் புரண்டு கஷ்டப் பட்டுக்கொண் டிருந்தாள். மறுநாட் காலை தன் சொந்தக்காரர் இருக்கும் ஒரு ஊருக் குப் புறப்பட்டுப் போனாள். அத்துடன் சமையலறையி லிருந்த விக்ரகங்கள், படங் கள், சப்பரங்கள், தோரணங்கள் எல்லாம் மறைந்தன. எலி, கரப்பு, பல்லி முதலிய ஜந்துக்கள் சுதந்தரமடைந்தவை போல சற்றும் எங்களை மதியாமல் அட்டஹாஸம் செய்தன. நானும் அவளைக் காணமையால் பெரு மூச்சுவிட்டுக் கண்ணீர் விட்ட துண்டு. ஆனால் மானிட வாழ்க்கையை நீர்க்குமிழிக்கு ஒப்பிட்டவர் இதை யெல் லாமறிந்துதான் அப்படிச் சொன்னார்.

# இந்திய இன்ஷூரன்ஸ் அபிவிருத்தி

சென்ற பத்து வருஷங்களில் இன்ஷூரன்ஸ் பிஸினஸ் மிகவும் விருத்தியடைந்திருக்கிறது. 1929ல் 82,00,00,000 ரூபாயிலிருந்து, இந்திய கம்பெனிகளின் பிஸினஸ் 1938ல் 2,19,00,00,000 ரூபாயாக விருத்தியடைந்தது. 1938ல் மாத்திரம் புதிதாக செய்யப்பட்ட பிஸினஸ் ரூபாய் 46,68,00,000 இதைப் போல் சென்ற 10 வருஷத்தில் ஒரு வருஷமும் நடைபெறவில்லை. 1929ல் இந்திய கம்பெனிகளின் இன்ஷூரன்ஸ் வருமானம் ரூ. 4,92,00,000 யிலிருந்து, 1938ல் ரூ 14,13,00,000 ஆக ஆயிற்று. இது 1937 ஐவிட ரூ. 2,11,00,000 ஆக அதிகமாகியிருக்கிறது.

1912-ம் வருஷத்து இன்ஷூரன்ஸ் ஆக்ட்படி இந்திய கம்பெனிகள் 200-ஆகும். இவைகளில், 166 சாதாரண கம்பெனிகள். 34 மியூச்சுவல் கம்பெனிகள்.

1912-ம் வருஷத்து இன்ஷூரன்ஸ் ஆக்ட்படிக்கும், 1928ம் வருஷத்து ஆக்ட்படிக்கும் மொத்த கம்பெனிகள் 360. இவைகளில், 217 இந்தியாவிலும், மற்றவை, அயல்நாடுகளிலும், ரிஜிஸ்டர் செய்யப்பட்டவை.

பம்பாயில் எல்லா மாகாணங்களையும் விட அதிகமான கம்பெனிகளிருக்கின்றன. பம்பாயில் 67 கம்பெனிகளும், வங்காளத்தில் இரண்டாவதாக 50 கம்பெனிகளும் இருக்கின்றன. மற்ற மாகாணங்களில் உள்ள கம்பெனிகளாவன :- சென்னை 39. பஞ்சாப் 25. டெல்லி 12. ஐக்கிய மாகாணம் 10. மத்திய மாகாணம் 5. பீஹார் 4. மீதியான சில கம்பெனிகள், மற்ற மாகாணங்களில் பரவியிருக்கின்றன. பஞ்சாபில் ஒரு புதிய இன்ஷூரன்ஸ் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

சில இந்திய கம்பெனிகள் அவர்களுடைய தொழிலை வெளிநாடுகளான, பர்மா, கிழக்கு ஆப்பிரிக்கா, சிலோன், மலாய்நாடுகள் முதலிய இடங்களிலும் நடத்தி வருகிறார்கள். இந்தக் கம்பெனிகளால், இந்தியாவிற்கு வெளியில், புதிதாக செய்யப்பட்டிருக்கும் இன்ஷூரன்ஸ் தொகை, ரூ. 3,39,00,000. அதன் வருமானம் ரூ. 19,50,000. 1938 முடிய செய்யப்பட்டிருக்கும் மொத்த தொகை ரூ. 15,15,00,000. அதன் வருமானம் ரூ. 82,06,000.

ஆயுள் இன்ஷூரன்ஸ் மாத்திரம் செய்யும் கம்பெனிகள் மொத்தம் 182. இவைகளில் 18 கம்பெனிகள் ஆயுள் இன்ஷூரன்ஸ் உடன் மற்ற இன்ஷூரன்ஸ்களும் நடத்துகின்றன. 17 கம்பெனிகள் மாத்திரமே, ஆயுள் இன்ஷூரன்ஸ் தவிர, மற்றவைகளை நடத்துகின்றன.

ஆயுள் இன்ஷூரன்ஸ் தவிர, மற்ற இன்ஷூரன்ஸ்களிலிருந்து வந்த மொத்த வருமானம் 1938 ல் 2,82,00,000. இதில் இந்திய கம்பெனிகளின் பாகம் ரூ. 89,00,000. அயல் நாட்டு கம்பெனிகளின் தொகை ரூ 1,93,00,000. இந்திய கம்பெனிகள் நெருப்பு இன்ஷூரன்ஸில் ரூ. 43,00,000. கப்பல் இன்ஷூரன்ஸில் ரூ. 12,00,000ம். மற்ற எல்லா விதத்திலும் ரூ. 12,00,000ம் பெற்றன. அயல் தேசத்துக் கம்பெனிகள், நெருப்பு இன்ஷூரன்ஸில், 95,00,000 ரூபாயும், கப்பல் இன்ஷூரன்ஸில் 40,00,000 ரூபாயும் மற்றவைகளில், ரூ. 58,00,000ம் பெற்றன.

கூடியவரையில் ஜாஸ்தியாக கப்பல் நெருப்பு, இன்ஷூரன்ஸ்களை நடத்தும் இந்திய கம்பெனிகள் இந்தியாவிற்கு வெளியிலும் தொழில் செய்கிறார்கள். இந்தக் கம்பெனிகள் இந்தியாவிற்கு வெளியிலிருந்து 1938ல், ரூ. 78,00,000 வருமானம் பெற்றன.

சென்ற பல வருஷங்களை விட, இப்பொழுது, மரணத்தினாலும், காலம் முடிந்தும் கொடுக்கப்பட்ட தொகை அதிகமாயிருக்கிறது. 1929ல் மரணத்தினால், ரூ. 88,38,000ம் காலம் முடிந்து ரூ 83,11,000ம் கொடுக்கப்பட்டது. 1938ல் அவைகளின் தொகை ரூ. 1,93,67,000ம். ரூ. 209,39,000 மாக இருக்கிறது.

சில இந்திய கம்பெனிகளில் இன்ஷூரன்ஸ் தொகை குறிப்பிடாமல், ஒவ்வொரு வருஷத்து வருமானத்தில் ஒரு பாகத்தை அந்த வருஷத்து உரிமைகளுக்கு பகிர்ந்தளிக்கப் படுகிறது. இந்தமாதிரியான தொழில் நடத்தும் கம்பெனிகள், 1942, ஜுலை முதல் அவர்கள் தொழிலை சட்டப்படி நிறுத்திவிட வேண்டும்.




# வீண் அபவாதம்

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ., பி. ல்., அண்ணாமலைநகர்]

முன் காலத்தில் பாடலீபுரத்திற்குப் பக்கத்தில் கங்கைக்கரையில் ஆச்ரமம் ஏற்படுத்திக்கொண்டு ஹரஸ்வாமி என்ற ஒரு முனிவர் வசித்து வந்தார். அவர் தினம் ஒருதடவை பிக்ஷை வாங்குவதற்காகப் பட்டணத்திற்குள் வருவார். அவரிடம் ஜனங்களுக்கு பக்தி ஏற்பட்டது. மஹான் என்று அவரைப் போற்றினார்கள். பாடலீபுரத்தி லிருந்த சில துஷ்டர்களுக்கு அவரிடம் அசூயை மூண்டது.

ஒரு துஷ்டன் ஒருநாள் அவர் பிக்ஷைக்கு வரும்போது அவரைப் பார்த்து, “பார்த்தீர்களா இந்தக் கபட ரிஷியை! இவன்கொஞ்ச நாட்களாய் ஒரு தொழில் செய்ய ஆரம்பித்திருக்கிறான். வெகு கெட்டபயல். அங்குமிங்கும் தனியே திரியும் சிறு குழந்தைகளைத் திருடிக்கொண்டு போய் என்னமோ செய்துவிடுகிறான். இந்தக் காரியம் இப்போது தான் வெளியாகிறது. இவனை ஊர் வழி வரவிடலாமா? பாருங்கள். மூட ஜனங்கள் இவனை உபசரிப்பதை!” என்று பிரசங்கம் செய்தான்.

அப்போது அவனுடனிருந்த மற்றொரு துஷ்டன் “ஆம். இதுதான் இப்போது தெரிந்த விஷயமாயிற்றே. இந் நகரத்தில் எவ்வளவு குழந்தைகள் காணமற் போய்விட்டன. எல்லாவற்றிற்கும் இவனே காரணம்” என்றான். உடனே மூன்றாவது துஷ்டன் “அதற்கென்ன சந்தேகம். இப்படித்தான் மூலைக்குமூலை ஜனங்கள் பேசிக்கொள்கிறார்கள்” என்று முடித்தான்.

இவ்வபவாதம் கொஞ்சகாலத்திற்குள் நகரம் முழுவதும் பரவியது. ஜனங்கள் ஹரஸ்வாமியைக் கண்டதும் குழந்தைகளை வீட்டிற்குள் ஜாக்கிரதை செய்ய ஆரம்பித்தார்கள். சிலர் ஹரஸ்வாமி காதில் படும்படியே நிந்திக்கலானார்கள். அவரை ஆதரிப்பவர்களும் குறைந்தனர்.

பரமவிரக்தரான ஹரஸ்வாமிக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. எதிலும் உபேக்ஷையாய் இருப்பவராதலால் ஜனங்கள் பல விதமாய்ப் பேசிக்கொண் டிருந்தாலும் தனக்கென்று நினைக்காமல் இருந்தார். ஆனால் இவ்வமளி அதிகமாகவே தன்னைத்தான் குறிக்கிறது இந்த அபவாதம் என்று அவர் உணர்ந்தார். வெகு ஆதரவாயிருந்த ஜனங்கள் அவருக்குப் பிக்ஷைகூடக் கொடுப்பதில்லை. ஒருநாள் பிக்ஷை எடுத்துவந்த ஒரு சிறு பையனை “கூஹூ” என்று ஓலமிட்டுக் கொண்டு அவன் தாய் தகப்பனார்கள் ஓடிவந்து பின் இழுத்துச் சென்றார்கள். ஒவ்வொரு சமயம் “ஐயோ,

குழந்தையைத் தூக்கும் பாதகன் வருகிறனே" என்ற அமளி அவர் காதில் விழும்.

சிறிது காலம் ஹரஸ்வாமி பிக்ஷைக்குப்போவதை நிறுத்தினர். அவரிடம் சீடராயிருந்த ஒருவர்மூலம் ஜனங்களின் விபரீத மனேபாவத்தைத் தெரிந்துகொண்டார். இனி அவ்விடம் ஆச்ரமத்தில் வசிப்ப தில்லை என்று உறுதிகொண்டார். ஆனுலும் இந்த அபவாதத்தை மாற்ருமல் அவ்விடம்விட்டு அகல அவர் மனம் இடம் கொடுக்கவில்லை. அபகீர்த்தி வெறுக்கத்தக்கதல்லவா? சிறிதேனும் அஸ்திவார மில்லாத இந்த அபக்யாதியை நிவர்த்தி செய்துகொள்ளாமல் இருக்க அவர் மனம் சகிக்கவில்லை. ஹரஸ்வாமி மறுநாள் நகரத்துள் பிரவேசித்தார்.

கங்கைக் கரையில் ஸ்நானம் ஜபம் முதலியநித்யவிதிகளை அனுஷ்டித்துக்கொண்டிருந்த சில பிராமணர்கள் பரபரப்புடன் எழுந்து ஓடிக் கொஞ்சதூரத்தில் தர்ப்பம் ஸமித்து முதலியவைகளைச் சேகரித்துக்கொண்டிருந்த தங்கள் குமாரர்களைக் கட்டி யணைத்துப் பத்திரப்படுத்தலானுர்கள். ஹரஸ்வாமி அவர்களிடம் சென்று உரக்கப்பேசலானர். "ஏ மதிமான்களே! சற்று நிதானியுங்கள். யார் குழந்தைகளை எப்போது, எப்படி, எதற்காக, எவ்விடத்தில், நான் திருடினேன்? எங்கே கொண்டுபோய்விட்டேன்? சற்று ஆலோசித்துப் பாருங்கள். சற்று விசாரியுங்கள். ஏன் இந்த வீண் பரப்பு? ஏன் தபஸ்வியான என்மீது வீணுகக் கொடும் தீச்சொல்லைச் சுமத்துகிறீர்கள்? பாமரர்கள்தான் போகட்டுமென்ருல் விவேகிகளான நீங்களும் அவ்விதமே இருக்கலாமா? பகுத்தறிவை உபயோகப்படுத்துவது மதிமான்களுக்கு லக்ஷணமல்லவா? நீங்களல்லவா சாமான்ய ஜனங்களுக்குப் புத்தி புகட்டவேண்டும்? எதையும் நம்பிவிடுவது நியாயமா? பொய் அபவாதம் பரவச் செய்வது பாபமல்லவா?" என்று கேட்டார்.

பிராமணர்கள் சற்று நிதானித்து "யார் வீட்டில் எந்தக் குழந்தையைக் காணவில்லை" என்று யோசித்தார்கள். நகரவாசிகள் வெகுவாக அதற்குள் அங்குக் கூடவே "யார் குழந்தை காணமற் போனது" என்று பரஸ்பரம் எல்லோரும் விசாரிக்கத் தொடங்கினர்கள். "என் குழந்தை காணமற் போய் விட்டது" என்று சொல்பவர் ஒருவரையும் காணேம். குழந்தைகள் காணமற் போனதே பொய்யானல் ஹரஸ்வாமி அவைகளைத் திருடியது எப்படி நிஜமாகும்?

"ஆஹா! ஒரு ஸாதுவை அபவாதத்திற்குள்ளாக்கினேம். ஒரு மஹானுக்கு அபராதிகளானேம். யாரோ சில துஷ்டர்களின் மாய வலையில் சிக்கி மதியிழந்தோம்" என்று ஜனங்கள் பச்சாத்தாபப் படலானர்கள்.

உடனே ஹரஸ்வாமி "நல்லது என் அபவாதத்தை நிவர்த்தி செய்துகொள்ளவே இந்த நகரத்துள் பிரவேசித்தேன். இனி இங்குக் கால் அடி வைக்கமாட்டேன். போதும் துஷ்ட ஸஹவாஸம்" என்று வெறுப்புடன் கூறிவிட்டு விரைந்து நடந்து தன் ஆச்ரமம் சென்று வேறிடத்திற்குப் பயணமானர். ஆனல் ஊர் மஹா ஜனங்கள் ஓடிவந்து அவரைத் தடுத்தார்கள். "ஸ்வாமி, அறியாமல் செய்த

எங்கள் குற்றத்தை மன்னியுங்கள். தங்களை ஆராதிக்கும் புண்ணியத்தை எங்களுக்கு அளிக்கத் தயை புரியவேண்டும்" என்று நான்கு வர்ணத்தவர்களும் கூடிப் பிரார்த்தனை செய்துகொண்டார்கள்.

ஹரஸ்வாமி மன வருத்தம் நீங்கி, அங்கே வசிக்கச் சம்மதித்தார்.

---


# தங்கம் ஒரு தோலா ரூ. 2—8—0

**அமெரிக்கன் நூதன தங்கத்தின் அரிய கீர்த்தி!**

**ஒருமுறை பரீக்ஷித்தால் உண்மை விளங்கும்!**

**எல். ஹாஸரிலால் சாவ்லா, (பாதன் காட்) எழுதுவதைப் பாருங்கள்!**

"நீங்கள் அனுப்பிய 'அமெரிக்கன் நியூ கோல்டு' பார்சல் கிடைத்தது. வந்தனம். உண்மைத் தங்கத்துக்கும் இந்த நூதனமுறைத் தங்கத்துக்கும் வித்தியாசம் இல்லையென்பதைக் காண எனக்கு ஸந்தோஷமாயிருக்கிறது. தயைசெய்து இன்னும் 6 தோலா அமெரிக்கன் தங்கம் அடுத்த மெயிலிலேயே அனுப்பவும். இன்னும் வேண்டியவைகளுக்குப் பிறகு எழுதுகிறேன்."

இந்தத் தங்கம் உறைகல்லில் உறைத்தால் உண்மைத்தங்கம் போலவே அடையாளம் பதியச் செய்கிறது. இதைக் கம்பிகளாகவும் இழுக்கலாம். தகடுகளாகவும் அடிக்கலாம். எல்லாவிதமான ஆபரணங்களையும் இந்த அமெரிக்கன் தங்கத்தில் செய்யலாம். திறமைவாய்ந்த நகை வியாபாரிகள்கூட இந்தத் தங்கத்துக்கும் உண்மைத் தங்கத்துக்கும் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாது.

**ஒரு தோலா விலை ரூ. 2—8—0** — **தபாற் கூலி வேறு.**
**3 தோலா விலை ரூ. 7—0—0** — **6 தோலா விலை ரூ. 10—0—0**

இதைப் பிரசித்தியடையச் செய்வதற்காக விலையைக் குறைத்திருக்கிறோம். இன்றே ஆர்டர் செய்யுங்கள்!

குறிப்பு :— 3 தோலாவாகவோ அல்லது அதற்கு அதிகமாகவோ ஆர்டர் செய்தால் தபாற் கூலி இனாம்.

**பூரண விநியோக உரிமை பெற்றவர்கள் :—**

**AMERICAN TRADING COMPANY**

**(D. 144) JULLUNDUR CITY.**

# கண்காணிப்பு ஊழியர்

[ரா. சந்திரசூடன், பி. எஸ் ஸி., நியூ டெல்லி]

சில ஐரோப்பிய நாடுகளில் தற்பொழுது கண்காணிப்பு ஊழியர் என்று பலர் அரசாங்கத்தினரால் நியமிக்கப்பட்டு வேலை செய்து வருகின்றனர். இவர்களின் வேலையைப்பற்றி அறிய நம் நாட்டு மக்கள் விரும்புவார்கள் என்பதில் ஐயம் இல்லை.

அம்மாதிரி நாடுகளில் கொலை, ராஜத்துரோகம் என்ற இரு அபாண்ட குற்றங்கள் தவிர, மற்ற குற்றங்களுக்கெல்லாம் தண்டனை கொடுப்பதற்குப் பதிலாக, அக் குற்றவாளிகளைக் கண்டித்து, வெளியில் சாதாரணமாக, சுயேச்சையாக, இருக்க அநுமதித்து, அவர்கள் நல்வழிக்குத் திரும்புவதற்கான முயற்சிகளை அரசாங்கத்தினர் எடுத்துக்கொள்கிறார்கள்.

சிற்சில நாடுகளில் முதற் குற்றம் செய்தவர்களை (First offenders) நற்புத்தி புகட்டி, சாமான்ய தண்டனை விதித்து அனுப்புவதுண்டு. அப்பொழுது அவர்கள் மறுபடி ஏதேனும் குற்றம் செய்தால்தான் அந்தத் தண்டனை யனுபவிக்க நேரும் என்று தெரிவித்து அனுப்பப்படுவர். இந்தப் பயமே அந்தக் குற்றவாளிகளை மறுபடியும் தீத்தொழில் செய்யாதிருக்கத் தடைபோலிருக்கும்.

நாம் இங்கு ஆராயப்புகும் நீதியில் குற்றவாளிகள் இவ்வாறு முதற் குற்றம் செய்தவர்களாகத்தா னிருக்கவேண்டுமென்பதில்லை. பழைய குற்றவாளிகளும், பல வருடச் சிறைவாசம் செய்தவர்களும் கூட இவ் வகுப்பில் எடுத்துக்கொள்ளப் படுகின்றனர். இளங்காளை சுபாவத்துடன் ஏதேனும் குற்றம் செய்த வாலிப ஆண் பெண்டிர், நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர், சட்டம் தெரியாமல் குற்றம் செய்தவர், சிறு திருட்டு, களவு, ஏமாற்றம் முதலியன செய்தவர்கள், துன்மார்க்க வழியில் குற்றம் (Sex-offence) செய்தவர், தொழில் ஒன்றும் செய்ய இஷ்டமில்லாது சோம்பேறிகளாகத் திரிவோர், கவர்ன்மெண்டாரால் குற்றவாளிகள் என்று சந்தேகிக்கப்படுவோர், இவரனைவரும் கண்காணிப்பு உத்யோகத்தினரின் மூலப் பொருள்கள்.

மேற்சொன்ன வகுப்பினருடன் சிநேகம் செய்து கூடப்பழகி நற்புத்தி புகட்டல், உதவி செய்தல், நல்வழிக்குத் திருப்புதல்தான் இம்மாதிரி ஊழியரின் முக்கிய வேலை. டாணுவி (Remand) விருப்பவர்களுடைய பூர்வோத்தரம், நடத்தை முதலியவற்றைப் பற்றித் துப்பு விசாரித்தல், கச்சேரிகளுக்குக் கொணரப்படும் புருஷன் மனைவி சச்சரவுகள் போன்ற வீட்டு விவாதங்களைச் சமரசப்படுத்தல், அபராதத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு, அது செலுத்த வகை தெரியாதவர்களுக்குச், சிறைவாசம் நேராமல் அதற்குப் பொருள் சேகரித்துக் கட்டச் சகாயம் செய்தல், திக்கற்ற குழந்தைகளுக்குப் புகலிடம் தேடிக் கொண்டுவிடல் முதலியனவும் அவருடைய வேலைதான். இவைபோன்ற கிரிமினல் கோர்ட்டுகளுக்குச் சம்பந்தமாகவும், வேலைக் கடுமையைக் குறைக்க உபகாரமாகவும் உள்ள பல்வேறு வேலைகளும் அவருக்கு உண்டு.

மேற்சொன்னவை யெல்லாம் கண்காணிப்பு ஊழியரின் உத்யோக தோரணையில் அவருக்காக மேலதிகாரிகளால் இடப்பட்ட வேலைத் திட்டம்.

இது தவிர அவர் தன் மனத் தூண்டுதலின் மேலும், தன் இஷ்டத்தினாலும் செய்யும் நற்காரியங்கள் பல—தான் முதலில் உதவிச் சீர்திருத்திய குடும்பங்களை அடிக்கடி சென்று பார்வையிட்டு, அவர்களுக்கு வேண்டிய மற்றைய உதவி செய்தல், Borstal School, Reformatory School களிலிருந்து வரையறுத்த காலத்

திற்குப் பின்னர் வெளியி லனுப்பப்படும் சிறுவர், சிறுமிகளுக்குப் பிற்காலத்திற்கு அனுகூலமாகவும், நல்ல ஒழுக்கமுள்ள இடத்தில் சேர்ந்து பொருளீட்டி நியாய வழியில் வாழவேண்டி அதற்கு வேண்டிய உபகாரம் கொடுத்தல், வேலையில்லாமல் தவிப்பவர்களுக்கு வேலை கிடைக்கவேண்டிய முயற்சி எடுத்தல், இன்னும் இம்மாதிரி பல வேறு வழிகளில் பொது ஜன நன்மையைக் கோரிச் செய்யும் கணக்கற்ற உபகாரங்கள் கண்காணிப்பு ஊழியர்கள் செய்கின்றனர்.

அவருடைய வேலை எத்துணை கடினமானது என்பதைச் சாதாரணமாக ஒரு தினத்தில் அவர் என்னென்ன செய்கிருர் என்று கவனித்தால் நன்கு விளங்கும்.

தன் ஆபீஸுக்கு வருபவர்களது குறைகளைக் கேட்டறிதல், தபால்களைக் கவனித்தல், ஜனோபகார சங்கங்களுடன் கடிதப் போக்குவரத்து, பேச்சு நடத்தல், பின்னர் கச்சேரி சென்று அங்குள்ள வேலையைக் கவனித்தல் முதலியன காலையில் செய்யும் வேலைகளாகும். பிற்பகலில் தன்கீழ் வைக்கப்பட்டிருக்கும் குற்றவாளிகள் (Probationers) ஒவ்வொருவர் குடியிருக்கும் விடுதிக்கும் சென்று அவர்களுடன் சம்பாஷித்து அவரவரது மனநோக்கம், நடவடிக்கை, சீர்திருந்தி வருகின்றனவா என்று கவனிப்பார். இப்படிப்பட்ட சந்தர்ப்பம் அவருக்கு அடிக்கடி கிடைப்பது அருமையாதலால், அவர் மிகவும் கூரிய புத்தியுடன், நுட்பமாகவும் சாமர்த்தியமாகவும் கிரகித்துக்கொள்ளல் அவசியம். நல்ல திருத்தம் காணுத குற்றவாளிகளிடம் சந்தர்ப்பத்திற்கேற்க, சிநேகபாவமான பேச்சு, கண்டிப்பு, அச்சமூட்டல் செய்வர். பல வேளைகளில் அவர்களது தாய், தகப்பன் அல்லது மற்றைய மூத்தோர் வேலை கழிந்து வீடு திரும்பும்வரை தங்கி அவர்களிடம் அவரது சிறுவர்களது முன்னேற்றத்திற்கு அனுசரிக்கவேண்டிய புதிய முறைகளைப்பற்றிப் புத்திமதி கூறுவர். இம்மாதிரி கண்காணிப்பு உத்யோகதினருக்கு நாள் முழுவதும் இடைவிடாது வேலையிருந்துவரும். மேற்சொன்னவைகளுக்குமேல், அவர் பரோபகார சிந்தனையுடன் பலருக்குச் செய்யும் உபகாரங்களும் கணக்கற்றன. இன்னும் சிறைவாசம் முடிந்து வெளிவரும் குற்றவாளிகளை நெருங்கி அவர்களுக்கு மறுபடி தூய தொழில் ஏதேனும் ஜீவனோபாயத்திற்குத் தேடிக்கொடுப்பார். அவர்கள் மனம் மறுபடி குற்றத்தை நாடாவண்ணம் புத்திமதி கூறி, அவர்கள் நல்வழியில் செல்வதற்குவேண்டிய சௌகரியங்களையும் செய்து கொடுப்பார்.

ஆனுல் மேல் விவரிக்கப்பட்ட திட்டமிட்ட ஒவ்வொரு நாள் வேலையெல்லாம் திடீரென்று சில நாட்களில் குலைந்துவிடும். அவசரமாக ஏதேனுமொரு போலீஸ் கச்சேரியி லிருந்தாவது டாணுவி (Lock up) லிருந்தாவது கூப்பாடு வரும். யாராவது குலம், கோத்திரம் தெரியாத ஒருவர் குற்றம் புரிந்து நீதிஸ்தலத்திற்குக் கொணரப்பட்டிருப்பார். கண்காணிப்பு உத்யோகதினர் அங்கு உடனே சென்று அக்குற்றவாளியின் பூர்வோத்தரம் தெரிந்து கொள்ள முயற்சி செய்வார். அன்று முழுவதும் அக் காரியத்திலேயே கழியும்.

அல்லது ஒரு போலீஸ் கோர்ட்டு டெலிபோனில் கூப்பிடும். "இங்கு ஒரு குற்றவாளி வந்திருக்கிருர். உங்கள் பரிச்சயம் உண்டு என்று சொல்கிருர். உடனே வரவும்," என்று செய்திவரும். அங்கு ஓடிச் சென்று அக் குற்றவாளியைப்பற்றிய தகவல்களைக் கோர்ட்டாருக்குத் தெரிவித்தல் அவசியம்.

அக் குற்றவாளி கடை வைத்து வியாபாரம் செய்துகொண் டிருந்திருப்பார். பழைய குற்றவாளியாயிருந்து பின்னர் திருந்தி நியாயமான சம்பாத்திய வழியி லிறங்கி சில காலமிருந்திருப்பார். எவ்வளவோ சிரமப்பட்டு, பல நாட்கள் கஷ்டப்பட்டு நற்புத்தி சிறிது சிறிதாகப் புகட்டி அப்பொழுதைக்கு அவரை இந்த ஆபீஸர் திருத்தி யிருப்பார். திடீரென்று பழைய வாசனை வந்து கெடுத்திருக்கும். உடனே கண்காணிப்பு ஆபீஸர் அக் குற்றவாளியின் கடை வியாபாரம் கவனிப்பவரின்றி நின்று நஷ்டமாகிவிடாமல், கடை

எப்பொழுதும்போல் நடக்க நம்பிக்கையான யாரிடமேனும் ஏற்பாடு செய்வார்.

இம்மாதிரி யெல்லாம் வேலை செய்ய வேண்டிய கண்காணிப்பு ஊழியர் பொது ஜன ஊழிய சாஸ்திர நிபுணத்துவமும், ராஜ தந்திரியின் சாமர்த்தியமும், வாக்குச் சாதுர்யமும், மனோ நோக்க விஞ்ஞானியின் யூக புத்தியும், பாதிரிமாரின் ஆர்வமும், சிங்கத்தின் தேக வன்மையும் கொண்டவரா யிருத்தல் அவசியம். இவ் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் பொது ஜன முன்னேற்றக் கல்லூரிகளில் கல்வி பெற்றுப் பின் பொது ஜன ஊழிய இயக்கங்களில் சேர்ந்து முதிர்ந்த பயிற்சி யடையவேண்டும். பின்னர் நீதி நூல், சட்டம், சுகாதாரம், முதற் சிகிச்சை (First aid) முதலியனவும் கற்றல் அவசியம். உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் தேச நன்மைக்கு அர்ப்பணம் செய்யத் தயாரான மனப்பக்குவம் இருத்தல் வேண்டும். இவ் வேலை அதிக ஆயாசம் கொடுக்கக்கூடிய தாதலால், திடசாலிகள் தான் கைக்கொள்ள முடியும். மனோ வாக்குத் தூய்மையுள்ளவர்கள்தான் இவ் வகையான ஊழியத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவர் என்று சொல்லத் தேவையில்லை. இவ் வேலையில் ஈடுபடுபவர்களுக்குத் தங்கள் வேலையில் சிறிது நேரங்கூட ஊக்கத் தளர்ச்சி ஏற்படாது. உடல் தளர்ச்சி யடையும் வரை வேலை செய்யத் தூண்டும். செய்த வேலையில் மனத்திற்குத் திருப்தி ஏற்படும். பொருள் ஆசையும், சுயநலமும் கொண்டவர்களுக்கு இம் மாதிரி ஊழியம் தகுதியற்றதே.

மனோதத்துவ நிபுணர்கள் (Psychologists) ஆராய்ச்சியின் மூலம் நூற்றுக்கு எண்பது குற்றங்கள் நடப்பது, சர்க்கார் முதல் குற்றம் செய்வோர்களையும் (First offenders) மற்றைய குற்றவாளிகளையும் அலட்சியமாகவும், கொடூரமாயும் பின் புத்தியுடன் நடத்தும் கொள்கையால்தான் என்று ஊர்ஜிதப்படுத்தி யிருக்கின்றனர். செய்வது தெரியாது குற்றம் செய்தவர்களைக் கண்டித்து, மன்னிப்பு அளித்துச் சுயேச்சையாக விட்டுவிடுவதில் குற்றவாளியின் மனப்பான்மையே நல்வழிக்குத் திரும்பிவிடும். இம்மாதிரி கொள்கையினல் குற்றவாளிக்குச் சர்க்கார்பேரிலும், தான் குற்றம் செய்ய ஆதிகாரணமாயுள்ள தன்னைச் சுற்றியுள்ள ஜன சமூகத்தின் மீதும் நன்றி ஏற்படும். அதற்குப் பின்னர் குற்றம்புரிய மனம் கூசும். ஆனல் ஒரு அற்ப குற்றத்திற்காகவோ, அல்லது நிரபராதியான ஒருவனுக்குக் குற்றச்சாட்டின் மீது தவருகத் தண்டனை யிடப்பட்டால், நல்ல புத்தி திரிந்து, மெல்லிய உணர்ச்சி தீய்ந்து, அவன் பரம்பரைக் குற்றவாளியாக ஹேதுவாகிறது. ஜன சமூகத்தின் மீதும் அரசாங்கத்தின் மீதும் அவனுக்கு வெறுப்பும்,பகையும் ஏற்படுகிறது. இதன் காரணமாக தேசத்தில் குற்றம் அதிகரிக்கிறது. போலீஸ் இலாகா வேலை, நியாயஸ்தல வேலை, ஜெயில் இலாகா இன்னும் மற்றைய சம்பந்தப்பட்ட இலாக்காக்களின் வேலையும் அதிகரித்து அதனல் அரசாங்கத்தினருக்குப் பொருட் செலவு அதிகரிக்கிறது. நோயின் மூலகாரணம் அறியாமலும், முன்புத்தி யில்லாததனுலும்தான் அரசாங்கத்திற்கு இம்மாதிரி பொருள் நஷ்டம் ஏற்படுகிறது. மேலும் மக்களின் தூய ஒழுக்கத்திற்கும் ஹானி ஏற்படுகிறது.

இதை யெல்லாம் தவிர்க்கத்தான் மனோ தத்துவ ஆராய்ச்சியாளர் குற்றம் நேருவதற்கு முன் அவ் வியாதியைத் தடுக்க முயற்சி செய்யுமாறு மன்ருடுகின்றனர். மேலும் ஒவ்வொரு நபரின் விசேஷ காரணங்களை யறிந்து, அதற்குத் தக்கவாறும், ஆனல் பயன் கொடுக்கக்கூடிய அளவுமாகத் தண்டனை கொடுத்தல் வேண்டும். மூர்க்கத்தனமாகவும், கொடுமையாகவும், பழிக்குப் பழி என்ற கொள்கைப்படியும் தண்டனை வகுத்தலினல் குற்றவாளிகளின் நடவடிக்கை திருந்தும் என்று கருதுவது மதியீனம், என நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

கண்காணிப்பு ஊழியர்களை நியமிப்பது நீதி இலாகாவாதலால், இவர்கள் போலீஸுக்காவது, மற்ற சில்லறை கவர்ன்மெண்டு இலாகாக்களுக்காவது அடங்கியவர்கள் அல்ல. நியாயாதிபதிகளைப்

போலத் தங்கள் வேலையில் சுயேச்சையும் சுதந்திரமும் கொண்டவர்கள். நியாய ஸ்தலம் எப்படி லஞ்சப் பிணியை யடக்கி மேல் எழுந்து நிற்கின்றதோ அதேபோல் இவ் வேலையாளரும் இருக்கிறார்கள்.

நம் நாட்டிலும் இம்மாதிரி ஊழியர்கள் நியமிக்கப்படுவது மிக்க நலத்தைத் கொடுக்கும். இம்மாதிரி வேலையாளருக்குப் பயிற்சி கொடுக்கவும் பக்குவப்படுத்தவும் கல்லூரிகளும், சாலைகளும் ஏற்படல் வேண்டும். பின்னர் இம்மாதிரி ஊழியர்களுக்கு அவர்கள் வேலையில் உபகாரம் ஜனசமூகமும் செய்தல் அவசியம். மக்களுக்குத் தற்பொழுதிய குற்றவாளிகளைப் பற்றிய இழிந்த நோக்கம் மாறவேண்டும். மேலும் குற்றவாளிகளுக்கு நல்ல வழியில் சம்பாதித்து வாழவேண்டிய சகாயம் செய்ய ஜனோபகாரக் கூட்டுறவுச் சங்கங்களும் ஆங்காங்கு உற்பத்தியாக வேண்டுவது அவசியம். மேலே விவரிக்கப்பட்டிருக்கும் முறைகளில் நாட்டிற்குக் கைங்கரியம் செய்ய முயற்சி கொள்பவர்களுக்கு இன்னும் பல்வேறு துறைகளும் இருக்கின்றன.

---


மன்னார்குடி டி. மு. கோர்ட்டு
O. S. No. **252/1940**

P. T. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை—வாதி
த. அ. கோவிந்ததேவர் —2ம் பிரதிவாதி

ஷை நம்பரில் வாதி வக்கீல் தெரிவித்துக் கொள்ளுகிறதாவது :—

வாதியால் பிரதிவாதிகள் பேரில் பிராமிசரிநோட்டின்படி தொகை கிடைக்க வேணுமாய் ரூ. 324-4-8க்கு தாவா செய்யப்பட்டு 2ம் பிரதிவாதி சம்மனை ஒட்டி சார்வு செய்யவும் பப்ளிகேஷனுக்கும் உத்திரவாகி **20-3-1941**ல் ஈரங்கி போட்டிருப்பதால் அன்று 2ம் பிரதிவாதி ஆஜராகி கக்ஷிகளை தெரிவித்துக் கொள்ளாத வரையில் 2ம் பிரதிவாதி பொருத்த மட்டில் எக்ஸ்பார்ட்டி செய்து விசாரணை செய்யப்படும் என்பதை இதின் மூலமாய் அறிய வேண்டியது.

**K. சின்னசாமி ஐயர்.**
வாதிவக்கீல்
7-3-1941

மன்னார்குடி
7—3—41



## ஒரு வேண்டுகோள்

"பாரதமணி"க்குச் சந்தா அனுப்பாமல் பாக்கி வைத்திருப்பவர்கள் தயவு செய்து உடனே தங்கள் சந்தாவை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் சந்தாவைத் தவறுமல் அனுப்பிவைப்பதனுல் "பாரதமணி" யைச் சிறந்த முறையில் நடத்த ஊக்கமும் உற்சாகமும் அளித்தவர்களாகிறீர்கள்.

வெகுநாட்களாக "பாரதமணி" க்கு ஆதரவுகாட்டும் நீங்கள் உங்கள் நண்பர்களுக்கும் கூறி "பாரதமணி" யை ஆதரிக்கும்படி செய்ய வேண்டுகிறோம்.

மானேஜர் : "**பாரதமணி**"


### நீங்கள் ஏன் நரைமயிரினுல் கிழவனைப்போல் காணப்படவேண்டும்?

# பிளாக்கியை

### உபயோகியுங்கள்!

இரண்டு வாரங்கள் பிளாக்கியை உபயோகித்திர்களானுல் நரை மயிர் இயற்கையான கருமையுடன் நிரந்தரமாக மாறிவிடும். பிளாக்கி ஒரு புதியமுறை ரசாயனத்தயாரிப்பு. லோஷன், மயிர்ச்சாயம் முதலிய வேறு எந்த முறைகளையும் அநுசரிக்கவேண்டாம்! மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து நரைமயிரை நிரந்தரமாய்க் கறுப்பு மயிராக்குகிறது. தலையில் சாதாரண தைலத்தைப்போல் உபயோகிக்கலாம். ஒரு பாட்டில் விலை ரூ. 1—8—0. தபாற் கூலி வேறு.

மூன்று பாட்டில்கள் விலை ரூ. 4. தபாற் கூலி இனும்.

# பாரிஸ் ப்யூடி

இந்த அதிசயமான நூதனமுறை மருந்து வேண்டாத இடத்திலுள்ள அநாவசியமான ரோமத்தை மூன்று நிமிஷங்களுக்குள் போக்கிவிடும். இது சருமத்தை மிருதுவாக்கிவிடுகிறது. இந்த மருந்து ரோமத்தை வேருடன் களைந்து அந்த இடத்தில் ரோமமிருந்த அடையாளத்தைக் கூட மறைத்துவிடுகிறது. இதைப் பிரபல சினிமா நக்ஷத்திரங்கள் உபயோகிக்கின்றனர்.

விலை ரூ. 1—8—0. தபாற்கூலி வேறு.

மூன்று புட்டிகள் விலை ரூ. 4. தபாற்கூலி இனும்.

# ப்ரெஞ்சு ப்யூடி லோஷன்

இந்த அபூர்வ திராவகத்தை இடைவிடாமல் உபயோகித்தால் முகத்தின் சுருக்கம், தழும்பு, முகப்பரு, அம்மைவடு முதலியவைகளை நீக்கிக்கொள்ளலாம். இந்த லோஷன் சருமத்தின் தடிப்பை யகற்றி மிருதுவாக்கி முகத்துக்கு எப்பொழுதும் குறையாத அழகைக் கொடுத்து வசீகரிக்கும் தன்மையை அதிகப்படுத்துகிறது. ஒருமுறை பரீக்ஷித்தால் உண்மை விளங்கும்.

ஒரு பாட்டில் விலை ரூ. 1—8—0 தபாற்கூலி, பார்சல்கட்டும் கூலி அணு 8.

மூன்று பாட்டில்கள் ரூ. 4. தபாற்கூலி இனும்.

**ANGLO-INDIAN CHEMICAL WORKS**
**(D. 144) JULLUNDUR CITY.**

# புத்தக விமர்சனம்

(1) தாழ்மையின் வெற்றி :—ஆசிரியர்:- "கௌசிகா." பிரசுரம் :— ஸி. எம். வி. அச்சுக்கூடம், மதுரை. விலை 1—0—0]

இந்நூல், ஆங்கில மொழியில் பிரபல எழுத்தாளராக விளங்கிய ஆலிவர் கோல்டு ஸ்மித் என்பவர் எழுதிய She stoops to Conquer — என்ற நாடகத்தின் மொழி பெயர்ப்பாகும். இது ஹாஸ்ய ரஸம் ததும்பி நிற்கும் அழகிய நாடகம்.

இதைத் தமிழில் மொழிபெயர்த்தவர், ஆங்கில பாஷையில் இந் நாடகத்தைப் படித்து ரஸித்தவர் தமிழிலும் அந்த அமுதை அருந்தட்டு மென்னும் நோக்கத் துடன் தாம் மொழிபெயர்த் திருப்பதாகக் கூறுகிறார். அது பொருத்த முடையதே யாகும். ஆங்கில மூலத்திலிருந்து வழு வாமல் அழகாக மொழிபெயர்த்திருக்கும் ஆசிரியரை நாம் பாராட்டாம லிருக்க முடி யாது. மொழிபெயர்ப்பு தெளிவாகவும் அழகாகவும் இருக்கிறது.

இந்நூலிலுள்ள சில குறைகளைச் சொல் லாமலிருக்க முடியவில்லை. இந் நூலில் அநேக இடங்களில்—' புறியவில்லை '— ' எறிச்சல் '—என்று இடையினத்துக்கு வல்லினம் உபயோகிக்கப்பட் டிருக்கிறது. மார்க் கூடு என்பதற்கு மார்கூடு என்று எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் அநே கம் பிழைகள். ' மகிழ்ச்சி '—என்னும் கலப்பில்லாத அசல் செந்தமிழ்ப் பதத்தை ' மஹிழ்ச்சி ' என்று வடமொழிப் பதம் போல் இவ்வாசிரியர் முகவுரையில் எழுது கிறார்.

இந் நூலின் முகவுரையில் ஆசிரியர்- " இதில் ஏதேனும் பிழைகள் இருப்பின் அவை மொழிபெயர்த்தவரைச் சார்ந் தவை. அழகும் சுவையும் இருப்பின் அவை இந்நாடகத்தை யெழுதிய ஆலிவர் கோல்டு ஸ்மித்தின் திறமையை யெடுத்துரைப் பனவாகும் " என்று கூறியிருக்கின்றமை யின் இந் நூலைப் படிப்பவர்கள் இந் நூலி லுள்ள பிழைகளை ஆலிவர் கோல்டுஸ்மித் தின் மேலேற்றி அவரைக் குற்றவாளி யாக்கவேண்டாமெனக் கேட்டுக் கொள் கிறோம்.

தமிழ் நூல்களில் நவீனமாகட்டும், புரா தனமாகட்டும் — அந் நூலிலுள்ள பிழை களுக்கு ஒரு பிழை திருத்த மில்லாமல் அநேகமாக எந்த நூலும் வெளியிடப் பட்டதில்லை. அந்தப் பண்டைய வழக்கம் இந்நூலை மாத்திரம் விட்டுவிடவில்லை. இந் நூலின் கடைசியிலிருக்கும் அப்பிழை திருத்தச் சீட்டிலேயே ஒரு பெரும் பிழை யிருக்கிறது. அது பிழைத் திருத்தம் என்று அழுத்தம் திருத்தமாக அச்சிட் டிருப்பதேயாகும்.

இன்னொன்று. பிழை திருத்தம் வெளி யிடப்பட்டிருக்கும் தாளில், நாம் மேலே எடுத்துக்காட்டிய புறியவில்லை, எறிச்சல் முதலிய வல்லின இடையின மாறுதலி னால் ஏற்பட்டிருக்கும் பிழைகளும், மார் கூடு, மஹிழ்ச்சி, பூரு முதலிய பிழைகளும் சேர்க்கப்படவில்லை யென்பது வருந்தத் தக்கதுதான். ஆங்கிலத்தில் உயர்ந்து விளங்கும் ஒரு நூலைத் தமிழரும் படித் தின்புறும்படி செய்யவேண்டு மென்னும் ஆர்வமிகுதியில், ஆசிரியர் இப்பிழைகளைக் கவனிக்கவில்லை போலும்!

இப் பிழைகள் இல்லாதிருந்திருப்பின் ' தாழ்மையின் வெற்றி ' என்னும் இந் நூலைத் தமிழ் மொழிபெயர்ப்பு நூல் களுக்கே ஒரு வெற்றி யென்று கூறின் அது மிகையாகாது. அடுத்த பதிப்பு இப் பிழைகள் நீங்கி வெளிவருமென நம்பு கிறோம்,

(2) தமிழ் வெறி :—[ஆசிரியர் :—சக்தி தாசன் சுப்ரமண்யன். விலை :—அணா 4.]

பண்டைக் காலத்தில் தமிழ் மொழிக் கிருந்த பெருமையையும் இக் காலத்தில் அது அடைந்திருக்கும் சிறுமையையும் பற்றி வெகு அழகாக-தெளிவாக-உணர்ச்சி ததும்பும்படி இந் நூலில் எழுதப்பட்டுள் ளது. இச் சிறு நூலில் ஆசிரியர் தமது

உணர்ச்சியைக் கொட்டித் தாய்மொழியாகிய தமிழ்மொழியில் நமக்குள்ள அன்பையும் கிளறிவிடுகிறார்.

"நினைப்பதெல்லாந் தமிழ்; எழுதுவதெல்லாந் தமிழ்; பேசுவதெல்லாந் தமிழ்; பாடுவதெல்லாந் தமிழ்; உள்ளமெல்லாந் தமிழ்; உடம்பெல்லாம் தமிழ்; உயிர் தமிழ்; நாடி தமிழ்; நரம்பு தமிழ்; நிணம், தசை எல்லாம் தமிழ்; அங்கமெல்லாம் தமிழ்; தமிழகமே நான்!—என்று நினையுங்கள்!" என்று தமிழ் வெறியுடன் கூவுகிறார். இப் புத்தகத்தைப் படிக்கும் பொழுது நமது மெய்சிலிர்க்கிறது; நமக்கும் தமிழ் வெறியுண்டாகிறது.

(3) புதுமைப் பித்தன் கதைகள்:—[பிரசுரம்:—நவயுகப் பிரசுராலயம், ஜி. டி. மதராஸ். விலை. ரூ. 2.]

வேகமும் மிடுக்கும் செறிந்து விளங்கும் இருபத்தொன்பது சிறு கதைகள் இந் நூலில் அடங்கியிருக்கின்றன. இக் கதைகளைப் படிக்கும்பொழுது நறுமணம் கமழும் பூஞ்சோலையினுள்ளே செல்லுவது போன்ற உணர்ச்சி தோன்றி நம்மைப் பரவசப்படுத்துகிறது. வாழ்க்கைக் காட்சிகளை ஆங்காங்குக் காட்டிக்கொண்டே சென்று நம்மையும் புதுமைப் பித்தனுக்கி விடுகிறார் ஆசிரியர்.

"அவருக்குச் சென்ற நாற்பத்தைந்து வருஷங்களாக, அதே பாதை, அதே வீடு, அதே பலசரக்குக் கடையின் கமறல்தான் விதி. கடையும் பிள்ளையவர்களுடன் தான் வளர்ந்தது. ஆனல் அதில் ஸ்வாரஸ்யமென்னவெனில் வெறும் "மீனுச்சி" ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளையாகப் பரிணமித்தாலும், அவருக்கு அந்தப் பழையது தான். அந்தக் காவியேறிய கம்பிக்கரை வேஷ்டிதான். கடையும் பிள்ளையும் ஒன்ருக வளர்ந்தார்கள். ஆனல் ஒட்டி வளரவில்லை. கடையில் வரவு செலவு வளர்ந்தது. பிள்ளையவர்களுக்குக் கவலையும் வளர்ந்தது" என்று மனித யந்திரத்தைப் பற்றி வர்ணிக்கிறார் ஆசிரியர். இது நமது கவனத்தைத் தன்னிடத்திலேயே லயிக்க வைத்து விடுகிறது. இக்கதைக் கொத்தில் மறக்கமுடியாத சித்திரம் இது தான்.

புதுமைப் பித்தன் ஒவ்வொரு கதையையும் தமது பழுத்த அநுபவத்தின்மேல் எழுதியிருப்பாரோ என்று சந்தேகிக்க இடமுண்டாகிறது. அவ்வளவு உயர்ந்த முறையில் அமைத்திருக்கிறார். ஓர் உதாரணம்.

ஆபீஸ் கிளார்க் ஒருவன் சோர்ந்து வீடு திரும்புகிறான். ஓர் இருண்ட சந்து வழியாக அவன் போக நேரிடுகிறது. அங்கே "அலங்கோலமான ஸ்திதியில் ஒரு பெண். பதினறு பதினேழு வயதிருக்கும். காலணு அகலம் குங்குமப்பொட்டு, மல்லிகைப்பூ, இன்னும் விளம்பரத்துக்குரிய சரக்குகள்.

"என்னப்பா, சும்மாப் போரே! வாரியா?"—

வாலிபன் திடுக்கிட்டு மடியிலிருந்த சில்லறைகளை யெல்லாம் இறைத்துவிட்டு ஓடுகிறான்.

இதை வெறும் புனை கதையாகக் கூற முடியுமா? முடியவே முடியாது. உலகத்தின் வறுமையையும் கசப்பையும் காட்ட இந்த ஒரு காட்சி போதும். வறுமை, மரணம், நோய் முதலிய எண்ணிறந்த துன்பங்கள் மாந்தரைக் கவ்வி அவர்கள் வாழ்க்கையைத் துன்பக் கேணியாக்குகிறது—இதை ஆசிரியர் வெகு அழகாகச் சித்தரிக்கிறார்.

இத்தகைய கதைகள் நம் தமிழ் நாட்டுக்கு மிகவும் அவசியமாகும். புதுமைப் பித்தன் தம் சிறு கதைகள் மூலம் வாசகர்களின் மனத்தில் ஓர் எதிரொலியை யெழுப்புகிறார். இவரது இந்த முயற்சி சிலாகிக்கத் தக்கதாகும். தமிழ்ச் சிறு கதையுலகம் கொஞ்ச காலமாகத்தான் விரிந்து மணம் கமழ ஆரம்பித்திருக்கிறது. புதுமைப் பித்தன் தம் கதைகளின்மூலம் அதற்குத் தனியான புதுமை மணம் ஊட்டி அதை விகசிக்கச் செய்கிறார்.

எஸ். எஸ்.

# கடுந்தவம்

[ரா. ஆறுமுகம்]

எனது நண்பன் ராஜுவும், நானும் எங்கள் கிராமத்தில் வந்து தங்கிய ஒரு சாதுவிடம் சிஷ்யர்களாகி, ஒரு வருடம் அவரிடம் ஞான மார்க்கத்திற்கான பாடங்களைக் கேட்டு வந்தோம். அதை அப்பியசித்துப் பார்க்க எங்களுக்கு ஆவல் ஏற்பட்டது.

மதுரைக்கு மேற்கே ஐந்துமைல்தூரத்தில் அந்நகருக்கே அரண்போல நாகமலை என்ற ஒரு குன்றுத்தொடர் சுமார் 20 மைலுக்கு நீண்டிருக்கிறது. தூரத்திலிருந்து பார்த்தால் வளைந்து வளைந்து செல்லும் அத்தொடர் பிரம்மாண்டமான நாகம் படுத்திருப்பது போலவே தோன்றும். ஒரு காலத்தில் மதுரையை விழுங்க வந்த மலைப்பாம்பைச் சுந்தரேஸ்வரர் அப்படி மண் மலையாகச் சபித்துத் தன் அறுபத்து நான்கு திருவிளையாடல்களில் ஒரு பாகத்தை முடித்தார் என்று கதை. மலை அவ்வளவு செழிப்பான பிரதேசமல்ல. குத்துக் குத்தாக நிற்கும் முட்செடிகளும், அவைகளின் மேல் படர்ந்திருக்கும் கொடிகளும், கரடு முரடான பாறைகளும், கருவேல மரங்களும்தான் நிறைந்து காணப்படும். எனினும் பாலைவனத்தில் ஒவ்வொரு இடங்களில் 'ஓயஸிஸ்' என்ற நீரூற்றுக்களும், குளிர் தருக்களு மிருப்பது போல, இம் மலையிலும் இரண்டு மூன்று இடங்களில் ஆறு மைலுக்கு ஓரிடத்தில் நீரூற்றுக்களும், அதைச்சுற்றி ஓங்கி வளர்ந்த மரங்களும் காணப்படும்.

என் நண்பனும் நானும் அந்த ஊற்றுக்குச் சமீபத்திலுள்ள ஒரு ஏகாந்தமான இடத்திற்குச் சென்று மூன்று நாட்கள் "தபசு" செய்யத் தீர்மானித்து, மூன்று நாளைக்கும் ஆகாரத்திற்காக வறுத்த அரிசிமாவும், சர்க்கரையும் தயார் செய்து கொண்டு கிளம்பினோம்.

மலையடிவாரத்திலிருந்த அந்த ஊற்றுக்குச் சமீபத்தில், மலைச்சரிவிலேயே தகரம் மூடப்பட்ட ஒரு சிறு கட்டிடமிருந்தது. அதைச் சுற்றிலும் பூச்செடிகள் வளர்ந்திருந்தன. அதன் முன்னால் 40-வயது மதிக்கத்தக்க சாமியார் ஒருவர் நின்று கொண்டிருந்தார். எங்களைக் கண்டதும் "இவ்வளவு அதிகாலையில் எங்கிருந்து வருகிறீர்கள். நீங்கள் எந்த ஊர்?" என்றார். "நாங்கள் மலைமேல் ஏறிச் சிறிது தூரம் போய்ப் பார்க்கலாமென்று வந்தோம். மதுரையிலிருந்துதான் வருகிறோம்" என்று சொல்லிவிட்டு, மேலும் அவர் கேட்கும் கேள்விகளுக்கு நின்று விடையளிக்க இஷ்டமில்லாமல், மலைமேல் செல்லும் பாதையில் சென்று மறைந்தோம். காலில் செருப்பு இல்லாமல் போனதற்காக வருந்தநேரிட்டது. ஒரு அடி நீளம்கூட முள் இல்லாத இடமேயில்லை. முள்ளில்லாத இடத்தில், பருக்கைக் கற்கள் முட்களைப்போல் குத்தின. வழியோ குறுகிய ஒற்றையடிப் பாதை. இரு பக்கங்களிலும் மண்டிக் கிடக்கும் முட் செடிகளாலாகிய புதர்கள் எங்கள் உடைகளைப் பற்றி இழுத்தன. சில இடங்களில் அந்த வழிகூட ஒரு புதரில் சென்று மறைந்துவிட்டது.

எல்லாச் சிரமங்களையும் அனுபவித்துக்கொண்டு ஒரு மணிநேரத்தில் மலை உச்சியில் தெரிந்த ஒரு அரசமரத்தையடைந்தோம். அங்கே அவ்வளவு பெரிய மரத்தைக் கண்டதும் எங்களுக்கு ஆச்சரியமாயிருந்தது. அடிவாரத்திலுள்ள நீரூற்றில் வந்து விழும் தண்ணீர் இம்மரத்தின் ஓரமாகத்தான் சிறு வாய்க்காலாக ஓடுகிறது. குளிர் நிழலும், குடி தண்ணீரும் ஒரே இடத்தில் இருக்கக் கண்டு அந்த இடமே எங்கள் 'தபசு'க்குச் சரியான இடமென அங்கே தங்கினோம். சிரம பரிகாரம் செய்து

கொண்ட பிறகு, முகம், கை, கால்களைச் சுத்தி செய்துகொண்டு, அரிசிமாவையும் ஓரிடத்தில் பத்திரப்படுத்தி வைத்து விட்டு, 'நிஷ்டை'யிலமர்ந்தோம். இரண்டு பேரில் யார்தான் அதிக நேரம் அப்படியே இருக்க முடியுமோ, பார்க்கலாம் என்று சபதமும் செய்துகொண்டோம்.

என் நண்பன் அங்கே கண்களை மூடிக் கொண்டு வீற்றிருந்த காட்சி புத்த பகவான் போதி மரத்தடியில் இருந்ததை ஞாபகப்படுத்தியது. புத்தனுக்கும் இவனுக்குமுள்ள வித்தியாசம் என்னவென்றால், அவன் ஆலமரத்தடியில் அமர்ந்தான். இவன் அரசமரத்தடியில் அமர்ந்திருந்தான்; அவ்வளவுதான்! நான் அவனுக்குச் சற்று தூரத்தில் ஒரு பாறையினருகில் போயமர்ந்துகொண்டேன். நாங்கள் நிஷ்டைசெய்ய ஆரம்பிக்கும்போது 9மணியிருக்கும். மூன்று மணி நேரம் உட்கார்ந்திருந்தோம். எனக்கு இடுப்பு நிற்கவில்லை. கண்களை மூடியவண்ணமே பாறைமீது சாய்ந்துவிட்டேன்.

நண்பன் மாத்திரம் அப்படியே அசையாமல் சமாதி யடைந்து விட்டவன்போலிருந்தான். நான் அடிக்கடி கண்ணைத் திறந்து அவனைக் கவனித்து வந்தேன். ஒரு சமயம் நான்கண்களை மூடியபோது அவன் திறந்து பார்த்தானே என்னமோ? எனக்குப்பசியும் அதிகமாகிவிட்டது. பசி வந்தால் பத்தும் பறந்துவிடும் என்பார்களே, நிஷ்டை மாத்திரம் நிலைக்குமா? கலைந்து விட்டது. சிலுசிலு வென்று ஓடிக்கொண்டிருந்த வாய்க்காலில் நான்கு கை நீர் அள்ளிப் பருகிப் பசியைச் சற்றுக் குறைத்துக் கொண்டு மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்தேன். நண்பனோ கல்லுப் போல இன்னும் அப்படியேதா னிருந்தான். அவன் வைராக்யத்தைக் கண்டு நானே ஆச்சரியமடைந்தேன். அதற்கப்புறம் இரண்டு மணி நேரம் கழித்து மெதுவாகக் கண்ணைத் திறந்தானவன். அவன் கண்கள் கோவைப் பழம்போல் சிவந்து காணப்பட்டன.

"என்னப்பா இப்படி யிருந்துவிட்டாயே. எனக்குப் பசி தாங்கவில்லையே" என்றேன்.

"இவ்வளவுதானா. அப்படியானால் இன்னும் இரண்டு நாளைக்கு எப்படிச் சமாளிப்பாய்?" என்று கேட்டான்.

"பசி நேரத்திற்குச் சாப்பாடு மட்டும் கிடைத்துவிட்டால் போதும். மூன்று நாளல்ல, முப்பது நாளா யிருந்தாலும் நிஷ்டை கலையமாட்டேன். கண்களை மூடிக்கொண்ட படியேனும் சாப்பிட்டுவிட வேண்டும்." என்று என் சாமர்த்தியத்தை அவனுக்கு வெளியிட்டேன். பின்பு இருவரும் புதரில் படர்ந்திருந்த ஒருவகையான அகல இலைகளைப் பறித்து, அதில் மாவைக் கொட்டிப் பிசைந்து, உண்டு பசியைத் தணித்துக்கொண்டோம்.

மறுபடியும் பிற்பகல் நான்கு மணிக்கு 'சமாதி'யிலாழ்ந்தோம். இருவரும் இரண்டுமணி நேரம் தானிருக்க முடிந்தது. மாலை வெயில் மறைந்துவிட்டது. நன்றாய் இருட்டுவதற்கு முன்பே, மாவைப் பிசைந்து, இரண்டாம் தடவையாக, இராச் சாப்பாட்டையும் முடித்துக்கொண்டோம். சிறிதுநேரம் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

"ஒரு நாளைக்கே நமக்கு இவ்வளவு கஷ்டமா யிருக்கிறதே. அடி வாரத்தில் பார்த்தோமே, அந்தச் சாமியார், அவர் இங்கே வந்து தன்னந் தனியாய்ப் பத்து வருஷங்களா யிருக்கிறாரே. அவரல்லவோ உலகைத் துறந்த உண்மை ஞானி!" என்றேன் நான்.

நண்பன் கடகட வென்று நகைத்து "இவ்வளவுதானா அவரைப்பற்றி நீ தெரிந்துகொண்டது? அவர் சாமியார் வேஷம்தான் போட்டுக்கொண் டிருக்கிறாரேயொழிய, அவர் நடத்தும் 'லீலைகள்' அநேகம். இதைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து இந்த மலையில் விறகு வெட்ட வரும் பெண்களெல்லாம் கடைசியில் நீரூற்றிற்குப் போய்த்தான் தாங்கள் கொண்டு வரும் கட்டமுதைச் சாப்பிட்டுச் சிரமபரிகாரம்செய்துகொண்டு போவார்கள். அவர்களில் இளம்பெண்களையெல்லாம் சாமியார் வசப்படுத்தி வைத்திருக்கிறார். இந்த ரகசியம் எப்படியோ கிராமங்களில் பலர் காதுக்கும் எட்டி, எத்தனையோ பேர்கள்

இவருக்கு நல்ல வெகுமதியும் கொடுத்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் இவருக்கு அறிவு வரவில்லை. இன்னும் அதே 'திருவிளையாடல்கள்' நடந்துகொண்டுதானிருக்கின்றன.

"ஊற்றில் ஸ்நானம் செய்யப் பிரதிதினமும் இருபது, முப்பது பேர்கள் எங்கிருந்தாவது வந்து போய்க்கொண்டிருப்பார்கள். அவர்களிடமெல்லாம் ஒரு உண்டியலைக்காட்டி, அங்கே மரத்தடியிலிருக்கும் விநாயகருக்கு மண்டபம் கட்டவேண்டுமென்று புளுகிப் பணம் சேகரிப்பார். அவ்விதம் சேர்ந்த பணத்தைக் கொண்டுதான் தனக்குத் தகரத்தாலாகிய ஒரு வீடுகட்டிக் கொண்டார்......" என்று அவன் கதையை வளர்க்க ஆரம்பித்தான்.

"அவர் செய்தது நியாயம்தான். எத்தனையோ இளம் பெண்கள் இடமில்லாமல் தன்னிடம் வந்து தவிக்கும்போது, பிள்ளையாரை அவர் எப்படிக் கவனிக்க முடியும்? அது கிடக்கட்டும். இப்போது நன்றாய் இருட்டிவிட்டதே. இனி என்ன செய்வது?" என்றேன்.

"ஏன் அப்படிக் கேட்கிறாய்? இராக்காலங்களில்தான் நிஷ்டை நன்றாய்க்கூடும். ஒருவிதமான சந்தடியு மிருக்காது. சரி, ஆரம்பிக்கலாம்!' என்று கூறிவிட்டு அவனிடத்தில் போயமர்ந்துவிட்டான். நான் சுற்றிலும் பார்த்தேன். ஒரே இருட்டு. கிழக்கே அடிவானத்தில் பிரகாசமான வட்டவடிவம் தெரிந்தது. ரயிலின் விளக்கோ என்று சந்தேகித்தேன். ஐந்து நிமிஷத்தில் இன்னும் சற்று மேலே வந்தது பூர்ணச் சந்திரன். அந்தக் காட்சியை என் நண்பன் பார்க்கவில்லையே; அவன்தான் சமாதியிலாழ்ந்து விட்டானே என்று வருத்தப்பட்டேன்.

சுமார் ஒரு மணி நேரமாகியிருக்கும். எங்கிருந்தோ ஒரு நரி ஊளையிடும் சப்தம் கேட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் இரண்டு, மூன்று நரிகளின் குரல் கேட்டது. இன்னும் சற்றுக் கழித்து ஏராளமான நரிகள் ஊளையிட்டன. அந்தச் சத்தம் வரவர அதிகமாகி நாங்களிருக்கும் பக்கமே நரிகள் வருவதுபோல் தோன்றியது. தடதடவென்று மற்றொரு பக்கம் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். சில பனைமரங்கள் காற்றில் பேய்போல் அசைந்தாடிக்கொண்டிருந்தன. நான் அமர்ந்திருந்த இடத்திற்கு எதிரேயிருந்த புதரிலிருந்து 'விர்'ரென்று வேகமாய் ஒரு ஜந்து ஓடியது. நரிதானோ என்று எழுந்து பார்த்தேன். அது முயல்!

இப்போது ஒருசத்தமும் கேட்கவில்லை. எங்கும் நிசப்தமாயிருந்தது. நண்பனைக் கவனித்தேன். அவன் மெய்ம்மறந்து வீற்றிருந்தான். இனி ஒரு பயமுமில்லை என்று கண்களை மூடினேன். 'ஹூ! ஹூ! ஹூ!!' என்று நூறு நரிகள் சேர்ந்து கொண்டு ஊளையிட்டால் எப்படி யிருக்குமோ அப்படிக் கேட்டது. என் உடம்பு நடுக்கமெடுத்தது. நண்பனிடம் ஓடி அவனைத் தட்டி எழுப்பி, "என்ன இப்படி இருக்கிறாய்? இன்றிரவே முக்தியடைந்து விடுபவன்போல் உட்கார்ந்துவிட்டாயே. நரிகள் நம்மைச்சுற்றி வளைத்துக்கொண்டு சத்தம் போடுகிறது கேட்கவில்லையா?" என்று பதட்டமாய்க் கேட்டேன்.

அவன் கனவிலிருந்து விழித்தவன் போலச் சுற்றிலும் பார்த்துவிட்டு, "நரிகளா? இதற்குத்தானா இப்படிப் பயப்படுகிறாய். நம்மைக் கண்டால் நரிகள் ஓட வேண்டாமா. பேசாமல் போய் உட்கார்" என்றான்.

"ராஜா, நாம் பயப்படமாட்டோம் என்பது நமக்குத் தெரியும். நரிகளுக்கு எப்படித் தெரியும்? நாம் பயந்தாங்கொள்ளிகளாக்கும் என்று நினைத்து நம் மேல் விழுந்து கடித்துவிட்டால் என்ன செய்கிறது?" என்றேன்.

"அதற்கு இப்போது என்ன செய்ய வேண்டு மென்கிறாய்?"

"கீழே இறங்கிப் போய் ஊற்றுக்கருகில் உட்கார்ந்துவிடலாமே."

"இந்த இருட்டில் முள்ளிலும், கல்லிலும் கஷ்டப்பட்டுப் போவதைக் காட்டிலும் இங்கேயே இருந்துவிடலாம். என்னைத் தொந்தரவு செய்யாதே" என்று கோபித்துக்கொண்டான்.

நானும் என்னிடத்திற்குப்போயமர்ந்து விட்டேன். நரிகளின் குரல் கேட்டுக் கொண்டுதானிருந்தது. ஆனால் ஒரு நரியும் பக்கத்தில் மாத்திரம் வரவில்லை. அந்த மட்டும் பயம் நீங்கியிருந்தேன். இரவு பனிரண்டு மணியாகி யிருக்கும். நிலா வானத்தின் உச்சிக்கு வந்துவிட்டது. குளிர் காற்று வீச ஆரம்பித்தது. எங்கிருந்தோ கருமேகங்கள் கவிய ஆரம்பித்து நிலாவை மறைத்தன. சிறுசிறு தூற்றலும் தூறியது. நண்பன் அப்போதுதான் கண்விழித்துப் பார்த்தான். இப்போதாவது அவன் என் வழிக்கு வருவானென நினைத்து, "மழை வரும்போ லிருக்கிறதே, கீழே போய்விடலாமா" என்றேன்.

"இது என்ன மழை. இன்னும் சில நிமிஷங்களில் நின்றுவிடும்" என்று அவன் சொல்லி முடிப்பதற்குள் மழை 'ஜோ'வெனப் பெய்ய ஆரம்பித்துவிட்டது. மரத்தடியிலேயே இருவரும் ஒண்டி நின்றோம். உடைகளெல்லாம் நனைந்து விட்டன. மழை சற்று ஓய்ந்ததும், "சரி கீழேயே போய்விடலாம்" என்று அவனே சொன்னான். நனைந்த உடைகளைப் பிழிந்து கட்டிக்கொண்டு புறப்பட்டோம். பகலில் மலைமீது ஏறும்போதே அவ்வளவு சிரமம் அனுபவித்தோமே, இரவில் சொல்ல வேண்டுமா?

நீரூற்றுக்கருகில் தரையெங்கும் ஈரம்; உட்காரக்கூட இடமில்லை. அந்தச்சாமியார் கட்டிடத்திற்குள் போய்ப் படுக்கலாமென நினைத்துக் கதவைத் தட்டினோம். அவரும் கதவைத் திறந்து எங்களைக் கண்டதும், அவருக்கு விரோதிகளோ என்று முதலில் பயந்தார். "மழையில் நனைந்து கஷ்டப்பட்டு வந்திருக்கிறோம். இரவு மாத்திரம் தங்க இடம் வேண்டும்" என்று கேட்டுக் கொண்டபின்பு தைரியமாய் உள்ளே தங்க அநுமதித்தார். உள்ளே ஒரு மூலையில் விளக்கு மினுக்கு மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தது. சுவரில் சுப்ரமண்யர் படம் தொங்கிக்கொண்டிருந்தது. 'இங்கே தான் நிச்சிந்தையாய்த் தூங்கலாம்' என்று எண்ணிக் கண்களை மூடினேன்.

திடீரென்று "தம்பி, தம்பி, எழுந்திருங்கள்" என்று சத்தம் போட்டார் சாமியார்.

நாங்கள் வாரிச் சுருட்டி எழுந்து "என்ன, என்ன" என்று ஆச்சரியத்தோடு கேட்டோம்.

"கொஞ்சம் கவனித்துக் கேளுங்கள். ஒரு சத்தம் கேட்கவில்லையா" என்றார்.

கவனித்துக் கேட்டோம். கட்டிடத்திற்குச் சற்று தூரத்தில் மண் வெட்டியால் யாரோ மண்ணை வெட்டுவதுபோல் 'டக், டக்' என்ற சத்தம் கேட்டது. "என்ன சத்தம் அது?" என்று அவரையே திரும்பக் கேட்டோம்.

"அதுதானே எனக்கும் தெரியவில்லை" என்றார் அவர்.

நான் என் நண்பனை நோக்கினேன். அவன் என் மனத்தில் எழுந்த பயத்தை முகக் குறிப்பால் தெரிந்துகொண்டு தைரியம் கூறு முகத்துடன் "பயப்படாதே. நமக்கு ஒன்றுமில்லை. இந்தச் சாமியாரின் விரோதிகள்தான் யாராவது வந்திருக்கக் கூடும்." என்று அவர் தெரிந்துகொள்ளாதபடி ஆங்கிலத்தில் சொன்னான்.

"விரோதிகளென்றால் இங்கே வந்து கதவை உடைக்கலாமே. ஏன் மண்ணை வெட்டுகிறார்கள்......ஒரு சமயம் முதலில் குழி தோண்டித் தயாராய் வைத்துவிட்டுப் பின்பு இங்கே வந்து இவரை இழுத்துக்கொண்டு போய் வெட்டி அக்குழியில் புதைத்துவிட்டு ஓடிப்போகலாம் என்று செய்கிறார்களோ?" என என் சந்தேகத்தைச் சொன்னதும் அவனும் பயந்துவிட்டான்.

"இருக்கலாம், யார் கண்டது? இந்தச் சாமியார் அவ்வளவு அக்ரமங்கள் செய்திருக்கிறார். இப்போது நாமுமல்லவா ஆபத்தில் சிக்கிக்கொண்டோம். இவரைக் கொலை செய்ய வருகிறவர்கள் நம்மை மாத்திரம் உயிரோடு விட்டுவிடுவார்களா!" என்றான்.

ஏற்கனவே மழையில் நனைந்து நடுக்கமெடுத்துக்கொண்டிருந்த உடம்பு, இப்போது பயத்தாலும் நடுநடுங்கியது. நண்

பனும் நானும் தப்புவதற்கு வழிதெரியாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தோம். நாங்களிருவரும் இப்படி ஆங்கிலத்தில் பேசிக்கொண்டதைக் கண்ட அந்தச் சாமியார், ஒரு சமயம் நாங்களே அதற்கு உள்வாளிகளோ வென்று கூடச் சந்தேகித்துவிட்டார். அவர் சந்தேகத்தைப் போக்க நாங்கள் தமிழில் பேசினோம்.

"இப்போது இதற்கு என்ன சாமி செய்கிறது?" என்று அவரையே மறுபடியும் கேட்டோம். "நீங்கள் இரண்டு பேரும் வெளியே போய்ப் பார்த்துவிட்டு வருகிறீர்களா" என்றார் அவர்.

"நீங்களும் வருகிறீர்களா?" என்று கேட்டோம்.

"இல்லை, இல்லை. முதலில் நீங்கள் போய்ப் பாருங்கள். இதோ வேல்க் கம்பும், அரிவாளு மிருக்கிறது. ஆளுக்கு ஒரு ஆயுதம் எடுத்துக்கொண்டு போங்கள். ஏதாவது ஆபத்து என்று தெரிந்தால் ஒரு சத்தம் போடுங்கள். நான் ஓடி வருகிறேன்."

அவர் சொல்லிக்கொண் டிருக்கும் போதே சட்டென்று மண் வெட்டும் சத்தம் நின்றுவிட்டது. "உஹ், ஹ், ஹ்" என்ற குரல்மாத்திரம் கேட்டது. அதுவும் நின்றது. மறுபடியும் மண்வெட்டும் சத்தம். எங்களுக்கு ஒன்றுமே புலப்படவில்லை. நான் நண்பனிடம் ஆங்கிலத்தில் "ராஜு, யோசித்துக்கொண்டிருந்தால் பிரயோஜனமில்லை. மண்வெட்டும் சப்தம் நின்றுவிட்டதிலிருந்தே, குழி வெட்டித் தயாராகிவிட்டதுபோல் தெரிகிறது. திடீரென்று அவர்கள் இங்கே வந்துவிட்டால் நம்மை யாரென்றுகூடக் கவனிக்காமல் இரண்டு துண்டாய் வெட்டி விடுவார்கள். ஆகையால் உடனே வெளியேபோய் அவர்களைக் கண்டு நம்மை இன்னாரெனத் தெரிவித்துக்கொண்டால் ஒரு சமயம் தப்பலாம்" என்று யோசனை கூறினேன். "மழைக்குப் பயந்து இங்கே வந்தோம். இப்போது உயிருக்கே ஆபத்தாயிருக்கிறதே. புலியூருக்குப் பயந்து புத்தூருக்குப் போக, புத்தூரும் புலியூரான கதையாக வல்லவோ இருக்கிறது..."

"உன் கதையெல்லாம் கட்டிவை. இது தானா பேச நேரம்? புறப்படு" என்று தைரியப்படுத்தினேன்.

நாங்கள் சாத்வீகத்தையே கைக்கொள்ள விரும்பியபடியால், சாமியார் சொன்ன ஆயுதங்களை எடுத்துக்கொள்ளாமலே, கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தோம். மழை ஓய்ந்து வெகுநேரமாகி விட்டது. முகில் ஏதுமில்லாமல் நிர்மலமாயிருந்த வானத்தில் நிலா பால்போல் காய்ந்து கொண்டிருந்தது. தவளைகளின் 'கொரடக், கொரடக்' என்ற சத்தம் வெகு தூரத்திலிருந்து காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது. மண் வெட்டும் சத்தம் கேட்ட பக்கம் மெதுவாகத் தலையை நீட்டிப் பார்த்தோம். 100 கஜ தூரத்தில் இரண்டு மூன்று பேர்கள் அசைவது தெரிந்தது. "பிசாசுகளா யிருக்குமோ?" என்றான் நண்பன். "என்ன, பிசாசுகளா" என்று சொல்லிக்கொண்டே உள்ளே ஓட யத்தனித்த என்னைத் தடுத்து "இரு, இரு. பிசாசுகளா யிருந்தால் அவைகளின் கால் பூமியில் பாவாதே. அது மனித உருவங்கள்தான்." என்று அவன் தைரியப்படுத்தினான்.

இப்படியாக, அவன் பயந்தபோது நானும், நான் பயந்தபோது அவனும், ஒருவரை யொருவர் தைரியப்படுத்திக் கொண்டே மெதுவாய்க் கட்டிடத்தை விட்டு இறங்கிச் சென்றோம். சாமியார் கதவைச் சாத்தி நன்றாய்த் தாளிட்டுவிட்டார். 'இவர்தானா நம் உதவிக்கு வருபவர்?' என்று எண்ணிக்கொண்டே முன்னோக்கி நடந்தோம்.

அந்த உருவங்களை நெருங்கிவிட்டோம். மனிதர்கள்தான். மூன்று பேர்கள். ஒரு புதருக்குப் பின்பக்கம் அவர்கள் மறைந்து நின்றார்கள். அவர்கள் அரையில் முழங்காலளவிற்குத்தான் துணி கட்டியிருந்தார்கள். இரண்டு பேர் கையிலும் நீண்ட தடிகளிருந்தன. மூன்றாமவன் மண்வெட்டி மாதிரி யிருந்த ஒரு சிறு ஆயுதத்தால் மண்ணை 'டக், டக்' என்று வெட்டிச் சத்தம் செய்து நிறுத்திவிட்டு, 'உஹ்,

உஹ்' என்று சத்தமிட்டான். நாங்கள் வந்த காலடி ஓசை கேட்டுத் திரும்பிப் பார்த்த ஒருவன், "யார், சாமி அது?" என்று மெதுவாய்க் கேட்டான். அவன் கேட்ட மாதிரியி லிருந்தே என் பயம் நீங்கிவிட்டது. தொண்டையைக் கனைத்துக்கொண்டு "நீங்கள் யாரப்பா" என்றேன்.

"நாங்க வேட்டைக்காரங்க, சாமி"

"வேட்டைக்காரர்களா? என்ன வேட்டை யாடுகிறீர்கள்?"

"முயல் வேட்டை, சாமி"

"அதற்கு ஏனிப்படி மண்ணை வெட்டி, 'உஹ், உஹ்' என்று சத்தம் போடுகிறீர்கள்"

"அதோ பாருங்க, கிழக்காலே, வலை கட்டி யிருக்கோம். முயலுங்கல்லாம் இப்படித்தான் முதல்லே தரையை நோண்டி கெழங்குகளைச் சாப்பிடும். அப்ப, மத்த முயலுங்களையும் கூப்பிட இப்படிச் சத்தம் போடும். அது மாதிரியேதான் நாங்களும் செய்றோம். அதுகள் ஏமாந்து ஓடியாரும் போது வலையில் மாட்டிக்கும்" என்றான்.

நாங்க ளிருவரும் பயம் நீங்கிப் பெருமூச்சு விட்டோம். நண்பன் என்னைப் பார்த்துச் சிரித்தான். அவர்கள் அதன் அர்த்தத்தைத் தெரிந்துகொண்டு "ஏஞ் சாமி, பயந்திட்டிங்களா" என்று கேட்டார்கள்.

"உம், ஹூம். இதுக்கா பயப்படுவோம்? புலிவேட்டைக்குக்கூட நாங்கள் போயிருக்கிறோமே" என்று பெருமையாகச்சொல்லி விட்டுத் திரும்பிச் சாமியார் இருப்பிடம் வந்தோம். கதவைத் தட்டியதும் "யார், அது?" என்று கேட்ட குரல் நடுங்கியதிலிருந்தே அவர் இன்னும் பயந்துகொண்டு தானிருக்கிறார் என்று தெரிந்தது.

"நாங்கள் தான். கதவைத் திறக்கலாம்" என்றோம். திறந்தார். "அவர்கள் முயல் வேட்டைக்காரர்களாம். இதற்கு இப்படி பயந்தீர்களே" என்று கேலி செய்தோம்.

"யார், நானா பயந்தேன். நீங்கள் புது ஆசாமிகள் வந்திருக்கிறீர்களே உங்களுக்கு ஏதாவது ஆபத்து வந்தால் அந்தப் பாவத்திற்கு நான் ஆளாகவேண்டுமே யென்றுதான் பயந்தேனே யொழிய, இந்த மாதிரி வேட்டைக்காரர்கள் எத்தனையோ பேரை நான் பார்த்திருக்கிறேன்......" என்றார்.

சற்றுமுன்பு பயத்தினால் உடல் குலுங்கிக்கொண்டிருந்த மூவரும், ஒருவர் தைரியத்தை மற்றவர் இப்போது 'நையாண்டி' செய்துகொண்டு உடல் குலுங்கச் சிரித்துக்கொண்டிருந்தோம். பொழுது புலர்ந்ததற்கு அடையாளமாகப் புள்ளினங்கள் ஆர்த்தன.

அந்த ஒரு இரவிலேயே அவ்வளவு கஷ்டங்களை யனுபவித்த பின்பு இன்னும் இரண்டு இரவுகள் அங்கே தங்க இஷ்டமில்லாமல், கண் விழித்த களைப்புத் தீர நீருற்றில் ஸ்நானம் செய்துவிட்டு, மிகுந்திருந்த அரிசிமாவையும் சர்க்கரையையும் சாமியாரிடமே கொடுத்துவிட்டு, மலைமீதிருந்த அரச மரத்திற்கும் நமஸ்காரம் செய்துவிட்டு, வீட்டை நோக்கிப் புறப்பட்டு விட்டோம்.